யாழ். மாவட்ட
இளைஞர்
அணி
இறுதியாட்டத்தில்
பக்கம் 23

# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 216 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 16, திங்கள் 30.06.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*


32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# ஐ.நா. குழுவின் ஆலோசகர்கள் தொண்டு நோக்கிலேயே பணி

நியூயோர்க், ஜூன் 30
இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக்குழுவுக்கு ஆலோசனைகளை வழங்கவென நியமிக்கப்பட்டிருக்கும் மூவரும், தொண்டு அடிப்படையிலேயே அந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு அமைவாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசாரணைக் குழுவொன்றை அமைத்துள்ளது.

அந்த விசாரணைக் குழுவுக்கு ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இவ்வாறான செயற்பாடுகளில் அனுபவம் மிக்க, வல்லுநர்கள் மூவர் அடங்கிய குழு ஒன்றையும் உருவாக்கியுள்ளார். அந்தக் குழு, விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கும். சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றுள்ளவரும், பின்லாந்து அரசின் முன்னாள்


மார்ட்டி அத்திசாரி சில்வியா கார்ட்ரைட் அஸ்மா ஜெகாங்ஹீர்

20 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. குழு அனுமதி கோரவில்லை
### *இலங்கை கூறுகின்றது*

கொழும்பு, ஜூன் 30
இலங்கை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்ட குழு இலங்கைக்கு வருவதற்கான கோரிக்கை எதையும் முன்வைக்கவில்லை என்று தெரிவித்துள்ளது வெளிவிவகார அமைச்சு.

இருந்தபோதும், இந்த விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கப்போவதில்லை என்ற தீர்மானத்தில் மாற்றமில்லை எனவும், அதன் காரணமாக விசாரணைக்குழு இலங்கைக்கு வருவதற்காக நுழைவிசைவு கோரினால் அது நிராகரிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை

20 ஆம் பக்கம் பார்க்க



## சொல்ஹெய்ம் சாட்சியம் வழங்குவார்

கொழும்பு, ஜூன் 30
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால்நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு முன்பாக சாட்சியம் வழங்குவேன் என்று மீண்டும் தெரிவித்துள்ளார் நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.

"இலங்கையில் நடந்தவை குறித்து விசாரிப்பதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் நியமித்துள்ள, விசாரணைக் குழு மிகவும் உயர்ந்த மட்டத்திலானது உயர் அனுபவத்தையும், மதிப்பையும் கொண்டது.

விசாரணைக் குழு, கேட்டுக் கொண்டால், அதன் முன்பாக சாட்சியமளிக்கத் நான் செல்வேன். அவர்களை நிராகரிப்பது மிகவும் கடினமானது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ந)



ஊழலை முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று வவுனியாவில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. வட மாகாணத்தின் ஐந்து மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 300க்கும் அதிகமானவர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். "ஊழலைக் கொலை செய் அல்லது உன்னைக் கொலை செய்வோம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ஆடை களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அணிந்திருந்தனர்.

10 ஆம் பக்கத்தில் விரிவான தகவல்கள்

## நாளாந்தம் 4 பேருக்கு டெங்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்.குடாநாட்டில் நாளாந்தம் சுமார் 4 பேருக்கு மேல் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்றனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன.

20 ஆம் பக்கம் பார்க்க

## கைதான தமிழக மீனவருக்கு எயிட்ஸ்

மன்னார், ஜூன் 30
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களுள் ஒருவருக்கு எச்.ஐ.வி.தொற்று இருப்பது நேற்று நடைபெற்ற மருத்துவ பரி சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மீனவர் ஒருவருக்கே இந்த எச்.ஐ.வி. தொற்று கண்டறியப்பட்டுள்ளது. திருமணமாகாத இவர், தான் ஏற்கனவே இந்தியாவில் சிகிச்சை பெற்றுவருகின்றேன் எனவும் தனக்கு

20 ஆம் பக்கம் பார்க்க

## 17 தமிழக மீனவர்கள் நேற்றும் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 30
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து நேற்று இராமேஸ்வரம் மீனவர்கள் 17 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். தலைமன்னார் பகுதியிலேயே இவர்கள் கைது செய்துள்ளனர். அவர்களின் 3 படகுகளும் கடற் படையினரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதும், பின்னர் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்படுவதும் சர்வசாதாரண நிகழ்வுகளாக மாறியுள்ளன.

கடந்தவாரமும் இவ்வாறு இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் நேற்றும் 17 மீனவர்கள் கைதாகியுள்ளனர். அவர்களில் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

"கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்"- என்று மன்னார் கிராமிய கடற்றொழில் சமாசத்தலைவர் ஜஸ்ரின் தெரிவித்தார். (ந-14)

## தமிழர்களுடன் முஸ்லிம்கள் இணைந்து போராடும் காலம் விரைவில் உருவாகும்
### வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
சிங்களவர்களோடு இணங்கிப் போனால் தமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கருதிய பெரும்பான்மை முஸ்லிம்களை, அளுத்கம – பேருவளையில் நடைபெற்ற சம்பவங்கள் சிந்திக்க வைத்துள்ளது. சிறுபான்மையினர், தமது கண்ணுக்கு முன்பாகவே முன்னேறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாகவே பெரும்பான்மையினர் இருக்கின்றனர்.

சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் சேராது என்கின்ற உண்

20 ஆம் பக்கம் பார்க்க



## கன்னத்தில் துவாரமிட்டு...

பக்கம் 15

## மின்கம்பம் முறிந்ததில் ஒருவர் காயம்

மாங்குளம், ஜூன் 30

மாங்குளத்திலிருந்து துணுக்காய் நோக்கி செல்லும் வீதியில் மின் கம்பம் முறிந்து வீழ்ந்ததில் மின் இணைப்பாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மாங்குளம் மின்சார சபையில் பணிபுரியும் அநுராதபுரம் சமுத்தேகமவைச் சேர்ந்த டபிள்யூ.எம்.லலின்சம் பத்மகுமார (வயது 21) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புதிதாக மின் இணைக்கும் வேலைகள் தற்போது மாங்குளம் மின்சார சபையால் மாங்குளம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் ஏ9 வீதியில் மின் கம்பிகள் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தவரே 33 அடி உயர மின் கம்பத்திலிருந்து மின் கம்பிகளைப் பொருத்திய போது அது முறிந்து வீழ்ந்துள்ளது. (ஐ-422)



வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சி பொதுச் சந்தையின் குறை நிறைகளை நேரில் சென்று ஆராய்ந்தனர். (ஐ-18)

## பழுதடைந்த சி.ரி.ஸ்கான் திருத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். போதனா வைத்தியசாலையில் சில வாரங்களாக பழுதடைந்திருந்த சி.ரி. ஸ்கான் இயந்திரம் திருத்தப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது என்று வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

குறித்த இயந்திரம் பழுதடைந்த காரணத்தால் நாளாந்தம் 5 பேருக்கும் மேற்பட்ட நோயாளர்களை வவுனியா மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி ஸ்கான் எடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இதனால் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டதோடு ஒரே நாளில் 5 அம்புலன்ஸ் வண்டிகளும் இவ்வாறு நோயாளர்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-4)

## கலைவிழாவும் கௌரவிப்பும்

முள்ளியவளை கலைத்தாய் சனசமூக நிலையம் நடத்தும் கலைவிழாவும் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இன்று திங்கள் மாலை முள்ளியவளை காட்டு விநாயகர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நாடக நிகழ்வாக வன்னியின் கடைசி மன்னன் பண்டார வன்னியனின் வரலாற்றை சித்தரிக்கும் முல்லைமணியின் எழுத்துருவாக்கத்தில் உருவான பண்டாரவன்னியன் என்னும் வரலாற்று நாடகம் நடைபெறும். அத்துடன் வில்லுப்பாட்டு, நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ள.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தி.திரேஸ்குமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-102)

# வன்முறைகள் தொடர்பில் விசாரிக்க மூவினத்தவரை அடக்கிய குழுதேவை

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஜூன், 30

அளுத்கம,பேருவளை, தர்கா நகர்,வெலிப்பிட்டிய போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்ய பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை ஏற்க முடியாது. மாறாக மூவினத்தவர்களையும் உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு கோரியுள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். முஸ்லிம்கள் மீதான வன்முறைச் சம்பவங்களை விசாரணை செய்வதற்கு மூவினங்களையும் உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம் எனத் தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 15ஆம் திகதி அரங்கேற்றப்பட்ட இனச் சுத்திகரிப்புக்கான ஒத்திகை சம்பவங்களின் போது அழிவுகள் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இந்த வன்முறை தொடர்பில் விசாரணை செய்வதற்காக பொலிஸாரும் புலனாய்வாளர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.



இந்த ஆணைக்குழுவில் மூவினங்களையும் சேர்ந்த, துறைசார் அனுபவம் கொண்டவர்கள் இருக்க வேண்டும்

இவ்வாறான விசாரணைகளின் போது வெளிப்படைத் தன்மை பேணப்படுமா என மக்களிடையே சந்தேகம் எழுந்துள்ளது.

வட்டரக்க தேரர் தன்னைத்தானே தாக்கி காயப்படுத்தினார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். வெலிப்பிட்டிய என்ற கிராமத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இருவருக்கும், கத்தியால் வெட்டப்பட்ட காயங்களால் மரணம் சம்பவித்ததாகக் குறிப்பிட்டு மரணச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான மாறுபட்ட கருத்துக்களை உதாரணமாகக் கொண்டு, பொலிஸாரினதும் புலனாய்வாளர்களதும் விசாரணைகளின் உண்மைத் தன்மையை அறிய முடி யும்.

எனவே விசாரணைகளில் வெளிப்படைத்தன்மையும் நம்பகத்தன்மையும் கொண்ட பொறிமுறை கையாளப்பட வேண்டும். மூன்று சமூகங்களையும் உள்ளடக்கிய அனுபவம் வாய்ந்த துறைசார்ந்தவர்களைக் கொண்டு ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டு குறுகிய கால எல்லைக்குள் விசாரணைகளை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ஐ-10)

# போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் எதிர்பார்த்த அபிவிருத்தி நடக்கவில்லை

## குற்றஞ்சாட்டுகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

மன்னார் ஜூன்,30

போருக்கு பின்னர் தமிழ் மக்கள் எதிர்பார்த்த உருப்படியான அபிவிருத்தியும் இடம்பெறவில்லை, நிரந்தரமான அரசியல் தீர்வும் எட்டப்படவில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச சபையினால் அடம்பன் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானத்தின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்ய பல்லாயிரம் கோடி ரூபா நிதி தேவைப்படுகின்றது.

> “
> போரை வெற்றி கொண்டது போல சர்வதேச சமூகத்தையும் வெற்றிகொள்ளமுடியும் என்று இந்த அரசு தப்பு கணக்கு போடுகிறது.
> உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காணாத வரைக்கும் சர்வதேச சமூகத்தை இலங்கை அரசு வெற்றி கொள்ள முடியாது .

அந்த நிதியை இந்த அரசால் பெற முடியாது. அப்படி பெற வேண்டுமாயின் இலங்கைத் தீவில் நிரந்தர தீர்வை பேற வேண்டும்.

போரை வெற்றி கொண்டது போல சர்வதேச சமூகத்தையும் வெற்றிகொள்ளமுடியும் என்று இந்த அரசு தப்பு கணக்கு போடுகிறது. உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காணாத வரைக்கும் சர்வதேச சமூகத்தை இலங்கை அரசு வெற்றி கொள்ள முடியாது.

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு மீளக்குடியேறியுள்ள மக்களை மேலும் பொருளாதார ரீதியாக நலிவுறச்செய்யும், அழுத்தி பாரம் சுமக்க வைக்கும் சம்பவங்களே அதிகரித்துள்ளன. மாந்தை மேற்கு பிரதேச செயலர் தொடர்பில் பொது மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களும் உள்ளன. இவர்கள் கூட பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வது வருந்தத்தக்கது - என்றார். (ஐ-56)

## கிழக்கிற்கும் கொழும்புக்குமிடையே புதிய சொகுசு பஸ் சேவை ஆரம்பம்

இலங்கை போக்குவரத்துச் சபை கிழக்குக்கும் கொழும்புக்குமிடையிலான முதலாவது சொகுசு பஸ் சேவையை இன்று ஆரம்பிக்கின்றது. இதன் ஆரம்பநிகழ்வாக நேற்று சனிக்கிழமை சொகுசு பஸ் கையளிக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வாழைச்சேனை சாலை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்து கொண்டு சொகுசு பஸ்ஸை சாலை முகாமையாளரிடம் கையளித்தார்.

இன்று சேவையைத் தொடங்கும் இந்த பஸ் தினமும் இரவு 9 மணிக்கு காத்தான்குடியில் இருந்து புறப்பட்டு பாசிக்குடா வழியாக கொழும்புக்குச் சென்று மறுநாள் இரவு கொழும்பில் இருந்து பாசிக்குடா வழியாக காத்தான்குடியை அடையும் என்று சாலை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் தெரிவித்தார். (ஐ-10)

## பனை முறிந்ததில் வீடு சேதம்



வலி வடக்கு. ஜூன் 30

நேற்று ஞாயிற்றுக்கிழமை மலை 5 மணியளவில் திடீரென வீசிய காற்றினால் பனைமரம் முறிந்து வீழ்ந்ததில் ஒரு வீடு சேதம் அடைந்துள்ளது.

ஏழாலை தெற்கு சிவகுரு வீதியில் அமைந்துள்ள தங்கவேல் உதயகுமார் என்பவரின் வீட்டின் முன்பகுதி இதனால் சேதமடைந்தது.

அயல் காணியில் நின்ற பனைமரமே இவ்வாறு முறிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த பனைமரத்தைத் தறிக்கும் படி சுமார் எட்டு மாதங்களுக்கு முன்னர் தாம் கிராம அலுவலர் ஊடாக காணி உரிமையாளரிடம் அறுவுறுத்தியதாகவும் எனினும் காணி உரிமையாளர் அதைக் கருத்தில் கொள்ளாத நிலையில் அது முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

> “
> பனைமரத்தைத் தறிக்கும் படி சுமார் எட்டு மாதங்களுக்கு முன்னர் தாம் கிராம அலுவலர் ஊடாக காணி உரிமையாளரிடம் அறுவுறுத்தினர்

(ஐ-86)

# 16 மருந்தாளர்கள் தென்பகுதிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்.மாவட்ட மருத்துவமனைகளில் கடமையாற்றி வந்த 16 மருந்தாளர்கள் தென்பகுதி மருத்துவமனைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதேசமயம் அவர்களின் இடங்களுக்கு 12 மருந்தாளர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.
யாழ்.மாவட்ட மருத்துவமனைகளில் ஏற்கனவே மருந்தாளர்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில் குறைந்தளவு மருந்தாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.
மருத்துவமனைகளில் மருந்தாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் மருந்துக் கலவையாளர் சேவைகள் மூலம் ஓரளவு பாதிப்பு ஏற்படாத நிலையில் நோயாளர்களுக்கு சேவை வழங்கப்பட்டு வருவதாகவும், யாழ்.மாவட்டத்தில் வெற்றிடமாக உள்ள மருந்தாளர் பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஓ-9)

## மருத்துவமனையின் உள்ளக தொ.பே. இணைப்பு செயலிழப்பு

அச்சுவேலி, ஜூன் 30
அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் உள்ளக தொலைபேசி கடந்த எட்டு மாதங்களுக்கு மேல் செயலிழந்த நிலையில் உள்ளது. இதனை சீர் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை.
குறித்த மருத்துவமனையில் உள்ளக இணைப்பு மூலம் மேற்கொள்ளக்கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் தாமதம் நோயாளர்கள் பாதிப்புக்கு உள்ளாக்குவதோடு பணியாளர்களையும் மேலதிக சிரமங்களுக்கு உள்ளாக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

## மடுமாதாவுக்காக கொழும்புத்துறையில் திருநாள் திருப்பலி

கொழும்புத்துறை, ஜூன் 30
மடுமாதா திருவிழாவையொட்டிய திருநாள் திருப்பலி நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.
நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆயத்த நற்கருணை வழிபாடும் மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.
மடுத்திருப்பதிக்குச் செல்ல முடியாதோர் தமது வழிபாடுகள் வேண்டுதல்களை நிறைவேற்ற வசதியாக வருடந்தோறும் மடுத்திருவிழா இங்கு கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-135)

# மாவிட்டபுரம் கந்தனுக்கு புதனன்று கொடியேற்றம்

வலி. வடக்கு, ஜூன் 30
மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் காம்யோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து இருபத்தைந்து நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 6ஆம் திகதி சண்முக திரு நடன விழாவும், 21ஆம் திகதி திருக்கார்த்திகை திருவிழாவும், 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழாவும் 26ஆம் திகதி சனிக்கிழமை ஆடி அமாவா சையையொட்டி கீரிமலை கண்டகி தீர்த்தத்தில்



இடம் பெறும் தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து திருவிழா நிறை வடையவுள்ளது.
தற்போது ஆலயத்தில் கடந்த காலப் போரால் பாதிக்கப்பட்ட கட்டடங்களை திருத்தும் பணிகள் நடைபெற்று வருவதால் இந்த முறையும் கொடியேற்ற நிகழ்வுகள் இடம்பெறாத போதிலும் திருவிழா காலங்களில் உரிய திருவிழாக்கள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து கொடியேற்ற நிகழ்வுகளுடன் அடுத்தாண்டு திருவிழக்கள் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)



வட மாகாண குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தினரால் மன வடுவுக்கு உட்பட்டவர்களுக்கான ஆதரவு சர்வதேச தின நிகழ்வுகள் அண்மையில் ஆனையிறவு அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றன.
பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளுடன் மரம் நடுகைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. மாகாண குடும்ப புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் வ.பிரேம்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (வ-9)

# தென்மராட்சிக் கடைகளில் அரிசி விலை அதிகரிப்பு

## நுகர்வோர் கவலை

தென்மராட்சி, ஜூன் 30
தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்களில் அரிசி விலை அதிகரித்து விற்பது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர். அரசால் நாட்டு அரிசியின் விலை 60 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்ட போதிலும், வர்த்தக நிலையங்களில் கிலோ 80 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்தனர். வர்த்தக நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள விலைப் பட்டியல் குறிப்பிட்டுள்ள விலையைவிட கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக வர்த்தகர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த காலபோக நெற் செய்கை போதிய மழையின்மை காரணமாக நெல் உற்பத்தி வீழ்ச்



சியடைந்ததால் நெல்லின் விலை அதிகரித்துள்ளது. இதனால் வர்த்தக நிலை யங்களுக்கு அரிசி வழங்குவோர் அரசினால் நிர்ணயித்த விலைக்கு தமக்கு வழங்குவதில்லை என்றும் இதனால் கொள்விலைக்கு வாடிக்கையாளர் நலன்கருதி விற்பனை செய்வதாகவும் தெரிவித்தனர். (வ-9)

# பார்வையற்றோருக்கு உலர் உணவுப் பொருள்கள்

கிளிநொச்சி, ஜூன் 30
வன்னிப் பிரதேச பார்வையற்றோர் சங்கத்தால் மாதாந்தம் நடத்தப்படும் பார்வையற்றோருக்கான உலர் உணவுப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பரந்தனில் அமைந்துள்ள வன்னி பிரதேச பார்வையற்றோர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.
சுவிஸ் எழுகை அமைப்பின் நிதி உதவியுடன் மாதாந்தம் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் பார்வையற்றோருக்கு வழங்கப்பட்டு வருகிறது.
வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் 150 பேருக்கு உலர் உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. சங்கத் தலைவர் எஸ்.ரூபராஜ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (வ-9)

# எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமா?

## கேள்வி எழுப்பும்ஆலமாவனப் பிள்ளையார் கிராம மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கிராமத்துக்கு பஸ் சேவையை நீடிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
33இற்கும் அதிகமான குடிமக்கள் அங்கு வசிக்கின்றன. எனினும் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்காததால் மாணவர்கள், நோயாளர்கள், படகுப் பயணிகள் மற்றும் பிரதேச சபை, பிரதேச செயலகங்களுக்குத் தமது தேவைகள் குறித்துச் செல்வோர் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
தமது கஷ்டம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகள் முன்வருவதில்லை என்றும் பஸ் சேவை வழங்கக் கேட்டால் வீதி சரியில்லை என்று இ.போ.சவும் வீதி புனரமைக்கப்படுவதாக வீதி அபிவிருத்தித் திணைக்களமும் சொல்லிக்கொண்டிருக்கின்றன. எனினும் எந்தவித நடவடிக்கைகளுமே பெறவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-7)

# சேதமடைந்த தார் வீதியை புனரமைக்க களி மண்

## நெடுந்தீவு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
தார்போடப்பட்டிருந்த வீதி தற்போது சேதமடைந்துள்ள நிலையில் அதனைப் புனரமைக்க களிமண் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்திகள் குறித்த கலந்துரையாடலின் போதே மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர். நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப்பிள்ளையார் கிராமத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதேச சபை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், பிரதேச சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
கிழக்கு துறைமுகம் ஆலமாவனப்பிள்ளையார் கோயில் வீதியில் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் வீதிப் புனரமைப்புக்களைப் பார்வையிடவில்லை. உள்ளூரில் உள்ள அதிகாரிகள் கூட இதைக் கவனிக்கவில்லை என்றும் கூறிய மக்கள் இந்த வீதி புனரமைப்புக்கு சுமார் ரூபா 40 மில்லியன் வரை ஒதுக்கப்பட்டதாக அறியப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.
வீதியில் சுமார் அரை கி.மீ. தூரம்வரை களிமண் போடப்பட்டுள்ளதால் மழை காலத்தில் வீதியைப் போக்கு வரத்துக்கு பயன்படுத்த முடியா திருக்கும் என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (வ-7)

# இணைந்த படி குறைப்புக்கு கவலை தெரிவிப்பு

## தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான


யாழ்ப்பாணம், ஜூன் 30
அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இணைந்த படி 50 வீதமாக குறைக்கப்பட்டமை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.
திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்காக இணைந்த படியாக 6 ஆயிரம் ரூபா இது வரை காலமும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.
இந்தக் கொடுப்பனவு வட மாகாண பிரதம செயலரின் செயலகப் பணிப்பின் பேரில் 3 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தமது கடமை நேரத்துக்கு மேலதிகமாகவும் பார்வையிடுகின்ற போதிலும் தமக்கு வழங்கப்பட்ட இணைந்தபடிக்கொடுப்பனவை 50 வீதமாக குறைத்தது தொடர்பாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பிரதேசவாதத்தை கைவிடுங்கள்

## வடக்கு மாகாண முதலமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஒருபுறம் வடக்கு மாகாண சபையை ஆட்டம் காண வைப்பதற்கான சதிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அதனையும் தாண்டியதாக தற்போது பிரதேச வாதம் உருவெடுத்துள்ளது. எமது அலுவலர்கள் பலர் பிரதேசவாதம் எழுப்பி பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் அவ்வாறு நடப்பது போலதான் சிங்கள பிக்குமார் கூட்டம் கூடிக் கூறி வருகின்றனர். ஆகையால் எமது அலுவலர்கள் பிரதேச வாதத்தைக் கைவிடவேண்டும்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.



கிருஸ்ணபுரம் மற்றும் பாரதிபுரம் கிராம மக்களை கிருஸ்ணபுரம் விளையாட்டு மைதானத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார் வடக்கு முதலமைச்சர். அதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறியுள்ளதாவது,

"பிரச்சினை எதுவாக இருந்தாலும் அதனை எழுத்தில் எழுதி அனுப்புங்கள் நாம் அது தொடர்பில் கவனம் செலுத்துகிறோம். ஒரு காலத்தில் சிறுபான்மை இனத்தவர்கள் பற்றி நல்ல எண்ணங்கள் இருந்தன. ஆனால் அரசியல் அதிகாரம் தம் கைக்கு வந்தவுடன் இராகம் மாறியது. எல்லோருமே எங்கள் வளங்களைக் கொள்ளையிட வந்த வேற்று நாட்டவர்கள் என்ற புதிய குரல் மேலோங்க ஆரம்பித்தது. இந்தக் குரலின் உரத்த தன்மையால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இங்கு வசித்துவந்த வட கிழக்கு மாகாணத்தமிழரின் தொன்மையும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கிருந்து வந்த முஸ்லிம்களின் நீண்ட வசிப்பும், அண்மையில் என்றாலும் அவர்களின் ஆற்றலை அடையாளங் கண்டு மலையகத்தில் ஆங்கிலேயரால் குடியேற்றப்பட்ட மலையகத் தமிழரின் உரிமைகளும் குறித் தொதுக்கப்பட்டு சகலரும் இந்த நாட்டிற்குத் தேவையற்றவர்கள் என்ற கோஷம் எழுந்தது. பெரும்பான்மை இனச் சமூகத்தினருக்கே நாடு சொந்தம் எனப்பட்டது. இதன் தாக்கம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

1958ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண மக்கள் பாதிக்கப்பட்டனர். பின்னர் 1977ல் மலையக மக்கள் பாதிக்கப்பட்டனர். 1983ல் தமிழர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர். தற்பொழுது முஸ்லிம் சகோதரர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இவ்விதமான பாதிப்புக்களின் மத்தியில்தான் நீங்களும் உங்கள் முன்னையவர்களும் 1977ம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் மலையகத்தில் இருந்து அடிபட்டு இடிபட்டு வடமாகாணத்திற்கு வந்து வன்னியை உங்கள் சொந்தப் பூமியாக்கிக் கொண்டீர்கள். காடாயிருந்த நிலங்களைக் கழனிகள் ஆக்கினீர்கள்.

இன்று எமது தமிழரின் வட மாகாணசபை ஆட்சிக்கு வந்துள்ளது. அந்த ஆட்சியை ஆட்டம் காணவைக்கச் சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் உங்கள் பிரச்சனைகள் இன்னும் நீண்டு கொண்டு செல்வதைக் காண்கின்றேன். காணி சம்பந்தமான பிரச்சனைகளே உங்களுக்கு மிக முக்கியமானவை.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட வேறொரு முக்கிய பிரச்சினையை நீங்கள் எதிர்கொண்டுள்ளீர்கள். அதுதான் பிரதேச வாதம். எமது அலுவலர்களில்சிலர் பிரதேசவாதத்தை எழுப்பி 'நீங்கள் மலையகத் தமிழர். நாங்கள் தமிழர். உங்களுக்கு உரித்துக்கள் தரமாட்டோம்' என்று கூறி பக்கச் சார்பாக நடந்து கொள்வதாக அறிகின்றேன். அவ்வாறு நடந்து கொள்ளும் அலுவலர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். 'நீங்கள் எவ்வாறு எமது மலையகத் தமிழர்களை அந்நியர்களாகக் கருதுகின்றீர்களோ அதேபோன்றே உங்களை அன்னியர்கள் என்று சிங்கள பிக்குமார் கூட்டம் கூடிக் கூறுகின்றனர். தயவுசெய்து அவ்வாறு கூறுவதைத் தவிர்த்து மனிதாபிமானமான முறையில் நடந்து கொள்ளுங்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற-4)

# கமலின் பிணை மனு; 7ஆம் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனது கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரான கந்தசாமி கமலேந்திரனை பிணையில் விடுவிப்பது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் அது தொடர்பான விசாரணை முடிவுறாததாலேயே தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த பிணைமனு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த மாதம் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. கமலை பிணையில் விடுவிப்பதற்கு அரச சட்டத்தரணி கடந்த மாதம் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

கமலேந்திரன் துரதிர்ஷ்டவசமாக கொலைக்குற்றச்சாட்டில் 6 மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் நீண்டகாலமாக ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து அரசியல் ரீதியாக ஈடுபட்டுவந்துள்ளார். அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆயுதக்குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்க வில்லை என்றும் தெரிவித்தே அவரை பிணையில் விடுவிக்குமாறும் கமல் சார்பாகப் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதற்கு அரசசட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித் திருந்தார். அது தொடர்பான தீர்ப்பே தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-4)

# சிறுபான்மையினர் மீதான அடாவடியை நிறுத்துங்கள்

## வலியுறுத்துகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சிறுபான்மை இனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை வெறுத்து ஒதுக்குவதோடு, இனங்களுக்கிடையே அச்சுறுத்தல்களுடன் மேலெழும் மதம்சார்ந்த அறிவற்ற அடாவடித்தனமான செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

சங்கத்தின் 57ஆவது பேராளர் மாநாடு காலியில் நடைபெற்றது. அந்த மாநாட்டிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

"மனித உயிர்களோடு அதிகளவான உடமைகளையும் சேதப்படுத்திய செயற்பாட்டிற்கு வழிவகுத்து, ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களை அகதி முகாம்களுக்கு அனுப்பி, அளுத்கமவை கேந்திர நிலையமாகக் கொண்டு நடந்து முடிந்த முஸ்லிம் விரோத கிளர்ச்சியை தூண்டிவிட்ட தீவிரவாத செயற்பாட்டை வெறுத்து ஒதுக்குகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுடன் ஒற்றுமையேற்படுவதற்கு வழிவகுத்து, இனங்களுக்கிடையிலான சகோதரத்துவத்திற்காக செயற்படும் அனைத்து செயற்பாடுகளும் முடக்கப்பட்டு, அச்சுறுத்தல்களுடன் மேலெழும் அறிவற்ற மதம்சார்ந்த அடாவடித்தனமான செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை உடனுக்குடன் தோல்வியடையச் செய்வது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. ஜாதி, மத சார்பானவர்களுடன் குரோதங்களை ஏற்படுத்த அரசாங்கமும் அதற்கு உடந்தையான இனவாதிகளாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் முரணான செயற்பாடுகளுக்கு எதிராக முன்னெடுத்து செல்லப்படும் மனிதநேயவாதிகளுடன் இணைந்து செயற்படவேண்டுமென இந்தச் சம்மேளனம் வலியுறுத்துகிறது.

அரசு 18 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் நடைமுறையிலிருந்த 17 ஆவது திருத்தச் சட்டத்தினூடான சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை இல்லாதொழித்திருக்கும் சூழ்நிலை காரணமாக, ஆசிரிய அதிபர் சேவை உட்பட ஒட்டுமொத்த அரசசேவைகளும் பிரச்சினைக்குட்பட்டுள்ளதால், 18ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக அகற்றி தகவல் அறியும் உரிமை உட்பட சிறந்த ஆளுகையை உறுதிப்படுத்துவதற்கான ஜனநாயகச் சூழலை உருவாக்கும் படி வற்புறுத்துகிறோம்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நிறுவனங்கள் ஊடாக வல்லரசு நாடுகள் தனது நிகழ்ச்சி நிரல்களினை செயற்படுத்துவதற்காக பல்வேறு வகையான நன்கொடைகளை கொடுப்பதனூடாக பல்வேறு நிபந்தனைகளுக்கு அடிபணிய வைத்து நலன்புரிச் சேவைகளை இல்லாதொழிக்கும் செயல்பாட்டை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்றும் அந்த மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ற-4)

## ஜெனிவாவில் முஸ்லிம்கள் போராட்டம்

ஜெனிவா, ஜூன் 30

இலங்கையின் தென்பகுதியில் அளுத்கம உள்ளிட்ட நகரங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்செயல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்பாக புலம்பெயர் முஸ்லிம்களால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

ஐரோப்பிய இஸ்லாமிய தல் நிலையம் என்ற அமைப்பால் அந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு கூடிய நூற்றுக்கணக்கான இலங்கையின் புலம்பெயர்ந்த முஸ்லிம்கள், வன்முறைக்கு எதிராகவும் இலங்கை அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர். (ற)




இலங்கைக் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட 17 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும், இல்லையெனில் குடும்பத்துடன் தற்கொலை செய்வோம் என்று கூறி, இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களின் குடும்பத்தினர் நேற்று அந்த நாட்டு மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக நடந்தது. (ற-14)

## ரஜரட்டை பல்கலை விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 30

ரஜரட்டை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அவர்களது கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

தற்காலிகமாக மூடப்பட்ட பல்கலைக்கழகம் நேற்றுத் திறக்கப்பட்டுள்ள போதும், இன்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க செயலாளர் பலகன்வத்தே சந்ரசிரி தெரிவித்தார். கடந்த 26 ஆம் திகதி விரிவுரையாளர்கள் பல்கலைக் கட்டடத்துக்குள் மாணவர்களால் அடைக்கப்பட்டிருந்தனர். (ற)

# அரசின் அனுமதியுடனேயே முஸ்லிம் மீது தாக்குதல்

## அளுத்கமவில் வைத்து ரணில் விக்கிரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30

அளுத்கம, தர்ஹா நகர் மற்றும் பேருவளை போன்ற இடங்களில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது அரச அனுசரணையுடனேயே நடத்தப்பட்டது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கூறினார்.

பாதிக்கப்பட்ட அப்பகுதிகளுக்கு நேற்றுச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர், அதிகாரிகொட மஸ்ஜிதுல் ரஹ்மான் பள்ளிவாசலில் முஸ்லிம்களைச் சந்தித்து உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்தப் பகுதியில் முஸ்லிம்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தனர். ஆனால், அரசு தனது அரசியல் நலனுக்காக இந்த ஒற்றுமையைக் கெடுக்கும் வகையில் முஸ்லிம்கள் மீது குண்டர்களை ஏவித் தாக்குதல் நடத்தியுள்ளது. இத்தாக்குதலை நடத்தியவர்கள் துரோகிகள்.

பௌத்தர்கள் மிலேச்சனத்தனமானவர்கள் என்றொரு கெட்ட பெயரை துரோகிகள் இத்தாக்குதல் மூலம் பௌத்த மக்களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளனர். சர்வதேசத்தில் நாட்டின் பெயரைக் கெடுத்துவிட்டனர். இத்தாக்குதல் தொடர்பில் நான் மிகுந்த கவலையைத் தெரிவிக்கிறேன்.

ஏதும் பிரச்சினை என்றால் அது பேசித்தான் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், இங்கு அந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. அளுத்கம கூட்டத்தில் ஞானசார தேரர் ஆற்றிய உரையே இத்தாக்குதலுக்குக் காரணம். அது பயங்கரவாத உரை.

முஸ்லிம்கள் மிகவும் அச்சத்துடன்தான் இப்போது நோன்பை வரவேற்றிருக்கின்றனர். இது கவலையான நிலைமை. இந்த நிலைமை இனி மாற்றப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான. நட்டஈடு வழங்கப்பட வேண்டும். - என்றார். (ற-சி)



அளுத்கம தர்கா நகரில் அண்மையில் நடைபெற்ற வன்முறையின்போது தீக்கிரையாக்கப்பட்ட கட்டடங்களைச் சுத்திகரிக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். (ஓ)

# அளுத்கம வன்முறைச் சம்பவம்; முக்கிய நபர்கள் 8 பேர் கைது

## இரத்தினக் கற்கள், தங்க நகைகள் மீட்பு

கொழும்பு.ஜூன் 30

அளுத்கம, பேருவளை, தர்கா நகர் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பிர தான சந்தேகநபர்கள் 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலவரங்கள், தாக்குதல்கள் சம்பவங்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்களிடம் இருந்து கடைகளில் கொள்ளையடிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் மற்றும் தங்க நகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முஸ்லிம்களின் றம்ழான் நோன்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் வன்செயல்கள் இடம்பெறலாம் என்றும் முஸ்லிம் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக 48 முஸ்லிம் அமைப்புக்களைக் கொண்ட இலங்கை முஸ்லிம் கவுன்சில் புனித றம்ழான் மாதத்தில் மேலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறலாம் என அச்சம் வெளியிட்டு பொலிஸ்மா அதிப ருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அளுத்கம பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின் போது கடைகளில் பொருள்கள் மற்றும் தங்கநகைகள் என்பன வற்றை கொள்ளையிட்டவர்கள், தீயிட்டவர்கள் என நம்பப்படுவோரை அந்தப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவின் உதவியுடன் அவர்கள் கொள்ளையிட்ட பொருள்கள் சகிதம் பொலிஸார் கைது செய்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அளுத்கம பகுதியில் ஆரம்பித்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் பின்னர் பேருவளை, பெந்தோட்டை பிரதேசங்களுக்கும் பரவி யதை தொடர்ந்து அங்கு பல கடைகள் எரிக்கப்பட்டும் சூறையாடப்பட்டிருந்தன. பெந்தோட்டை பகுதியிலுள்ள இரண்டு ஆபரண விற்பனை நிலையங்கள் கலகக்காரர்களினால் சூறையாடப்பட்டிருந்தன. (ஓ)

# ஞானசாரதேரரிடம் சி.ஐ.டியினர் அவரது உரை குறித்து வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 30

அளுத்கமவில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை, தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

ஞானசாரதேரர் தாம் அந்தக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சி.ஐ.டியினரிடம் விவரமாக எடுத்துக் கூறியதாகக் கூறியுள்ளார்.

அளுத்கமவில் நடந்த கூட்டத்தில் தேரர் உரையாற்றியதை அடுத்தே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன என்று முஸ்லிம் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் குற்றம் சுமத்தி வரும் நிலையில், சி.ஐ.டியினர் வாக்குமூலத்தை அவரிடம் பெற்றிருக்கின்றனர்.

இதேவேளை, அளுத்கம கூட்டத்தில் வன்முறையைத் தூண்டும் வீதத்தில் ஞானசார தேரர் உரையாற்றி இருந்தார் என்றும் ஜனாதிபதியின் குடும்பத்தினரைக் கேவலப்படுத்தும் வகையிலும் அவரது உரை அமைந்திருந்தது என்றும் அமைச்சர் ராஜித சேனா ரத்ன அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

அத்துடன் இவை தொடர்பில் தேரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவிடம் அமைச்சர் சேனாரத்ன கோரிக்கை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

# கட்டாக்காலி நாய்களுக்கு ஐந்து ஏக்கரில் வாழ்விடம்

கொழும்பு, ஜூன் 30

கொழும்பு நகர பகுதிகளில் சுற்றித் திரியும் கட்டாக்காலி நாய்களுக்காக 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, அதில் நாய்கள் வாழ்விடம் ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிய வருகிறது.

அமைச்சர் ஒருவரும் அவரது மனைவியின் அறிவுரையுடன் கொழும்பு மாநகர சபை மேற்கொண்டு வரும் இந்த திட்டத்தின் கீழ் கொழும்பில் 5 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு அதில் சிலமில்லியன் ரூபா செலவில் வைத்தியசாலை, நீச்சல் குளம் என்பவற்றை நிர்மாணிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தை செயற்படுத்த மாநகர சபையிடம் போதிய பணம் இல்லாத காரணத்தினால், மத்திய அரசின் நிதியை பயன்படுத்த அமைச்சரின் மனைவி முனைப்புகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ)

இணுவில் கந்தசுவாமி கோயில்

புனராவர்த்தன அஷ்டபந்தன
உத்தமோ உத்தம (33 குண்டம்)
மகா கும்பாபிஷேகப் பெருவிழா
04.07.2014 வெள்ளிக்கிழமை



இன்று 30.06.2014 காலை பூசையைத் தொடர்ந்து மகாயாகம் இடம்பெறும். மாலை யந்திர ஸ்தாபனம் இடம்பெறும்.

தினமும் மதியம், இரவு விசேட மாகேஸ்வரபூசை இடம்பெறும்.

நண்பகல்:12.00-12.30 மணிவரை இசை அர்ச்சனை
12.30-1.00 மணிவரை புல்லாங்குழல் இசை
இரவு: 9.00-10.00 மணிவரை இசையரங்கமும் இடம்பெறும்.
எண்ணெய்க்காப்பு:01.07.2014 செவ்வாய் காலை 8.30 தொடக்கம்
02.07.2014 புதன் மாலை 4.00 மணிவரை

★03.07.2014 வியாழக்கிழமை மாலை 4 மணிமுதல் 6 மணிவரை ஈழ, இந்திய பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்களின் தவில் நாத கச்சேரி இடம்பெறும்.

★05.07.2014 சனிக்கிழமை இந்தியாவின் புகழ்பூத்த இசைப்பாடகர்கள், இந்திய அக்கினி இசைக்குழுவினருடன் வழங்கும் இசைக்கானங்கள் இடம்பெறும்.

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:

ஸ்ரீ சிவ கணகுமரன்
அரிசி ஆலை
AVS அரிசி No:1
எல்லாக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மானிப்பாய் வீதி, இணுவில்.

லது டிஜிற்றல்
வீடியோ&போட்டோ
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
077 711 1009

# தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்வால் முஸ்லிம்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை

## மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் இணைப்பாளருமான அருண் தெரிவிப்பு

கல்முனை, ஜூன் 30

கல்முனையில் தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதால் முஸ்லிம்களுக்கு எந்தவொரு ஆபத்தும் ஏற்படப் போவதில்லை.


இதுதொடர் பில் முஸ்லிம்கள் அச்சமடையத் தேவையில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் இணைப்பாளருமான அருண் தம்பி முத்து தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

"கல்முனையில் தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோருவது எமது அடிப்படை உரிமையாகும்.

தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதால், முஸ்லிம்களுக்கு எந்தவொரு ஆபத்தும் ஏற்படப்போவ தில்லை. இது தொடர்பில் முஸ்லிம்கள் அச்சமடையத்தேவையில்லை. இந்த விவகாரம் தொடர்பாக நானும் நடவடிக்கை எடுத்தேன்.


அருண் தம்பி முத்து

கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழ் அமைச்சர் இருந்தி ருந்தால், கல்முனையில் தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும்நடவடிக்கைக்கு அழுத்தம் கொடுத்து அதை முன்னெடுத்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கலாம்.

இன்று இரண்டு தமிழ் அமைச்சர்கள் இருக்கின்றார் கள்.

அதில் அமைச்சர் தொண்டமான் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட மாகாணத்தை பிரதிநித் துவப்படுத்தும் வகையிலும் இருக்கின்றனர்.

அந்த வகையில், கிழக்கு மாகாணத்துக்கான ஒரு தமிழ் அமைச்சரில்லை. கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களின் தேவைகளை அமைச்சரவைக்குக் கொண்டு சென்று நிறைவேற்றிக் கொள்வதற்கு தமிழ் அமைச்சர் ஒருவர் கிழக்கு மாகாணத்தில் இல்லை.

எமது நாட்டில் அரசியல் மாற்றம் வரவேண்டுமாக இருந்தால், அன்னத்து சமூகங்களையும் இணைத்துத் தான் அதை பெறமுடியும். ஒரு சமூகத்தை தவிர்த்து எந்தவொரு மாற் றத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது.

**30 வருடங்களின் பின்னர் தமிழ் மக்கள் ஒரு திசை தெரியாத நிலையிலேயே இருக்கின்றார்கள்.**

தேசிய அரசியல் கட்சிகளில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். அப்போது தான் தமிழர்களின் குரல்களும் தேசிய ரீதியில் எழுப்பப்படும்.

30 வருடங்களின் பின்னர் தமிழ் மக்கள் ஒரு திசை தெரியாத நிலையிலேயே இருக்கின்றார்கள். இந்த நிலைமையை அரசியலில் இருப்பவர்கள் நன்கு புரிந்துகொண்டு தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் விதத்தில் செயற்பட வேண்டும்"- என்றார். (வ)


வழங்கப்பட்ட உபகரணங்களுடன் மாணவர்கள்

# விவேகானந்தா கல்லூரிக்கு உபகரணங்கள் கையளிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 30

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள விவேகானந்தா தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும் இளைஞர், யுவதிகளின் நலன் கருதி கல்லூரி கணினி கூடத்துக்கான வலையமைப்பு உபகரணங்கள் நேற்றுமுன் தினம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

அடிப்படை கணினி அறிவை அனைவருக்கும் வழங்கலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தலும் என்கின்ற நோக்கத்துக்காகச் செயற்பட்டு வரும் இந்தத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு கனடாவில் வசிக்கும் மட்டக்களப்பைச் சேர்ந்த முருகேசு- விசாகன் என்பவர் உதவியை வழங் கியுள்ளார்.

கல்லூரிக்கு அவசிய தேவையாகக் காணப்பட்ட கணினிக் கூடத்தில் உள்ள கணினிகளுக்கான வலையமைப்பை ஏற்படுத்துவதற்காக 67 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும் கருவிகளையும் கொள்வனவு செய்து பொருத்துவதற்கான உதவியை கல்லூரியின் பணிப்பாளர் க.பிரதீஸ்வரனின் வேண்டு கோளுக்கு இணங்க அவர் வழங்கி வைத்துள்ளார்.

இந்த வலையமைப்பு கல் லூரியில் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களை இணைத்து அதன் விரிவுரையாளர் க.குலதீஸின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. (வ)

# பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை

களுவாஞ்சிக்குடி, ஜூன் 30

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் நேற்று முன்தினம் நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலக கணக்காளர் சி.புவனேஸ்வரன், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.கமல்ராஜ் உட்பட பிரதேச செயலக உயர் அதிகாரிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தநடமாடும் சேவையின் போது சமுர்த்தி அதிகார சபை, சமூக சேவைத் திணைக்களம், திட்டமிடல் பிரிவு, காணி பிரிவு ஆள்பதிவு திணைக்களம், மோட்டார் போக்குவரத்துப் பிரிவு, சுகாதார திணைக்களம், கால்நடை வைத்தியர் பிரிவு, விவசாயத் திணைக்களம், மக்கள் வங்கி போன்றவற்றினூடாக பல சேவைகள் அந்தப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டன. (வ)


நடமாடும் சேவையில் கலந்து கொண்டோர்

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

வள்ளிநாயகிதேவி தியாகராசா



தோற்றம் 05 ★ 07 ★ 1954

மறைவு 24 ★ 06 ★ 2009

எம் அன்னையே! எம் அம்மாவே!
எமை விட்டுப் பிரிந்து ஐந்தாண்டு ஓடி
மறைந்திட்டாலும்
உங்களைத் தேடுகின்றோம்...
குரல் கேட்காது தவிக்கின்றோம்.
நாமனைவரும் பாசமாய்க்
கூடி வாழ்ந்த கூட்டை விட்டு
எங்குதான் பறந்து சென்றீர்கள்
விரைவாய் ? அம்மா
அதிகாலையில் எழுந்தவுடன் அம்மாவே உங்கள் நினைப்பு
ஆகாரம் உண்கையில் அன்னையே உங்கள் நினைவு
நித்திரைக்குப் போகும் வரை நித்தம் உங்கள் நினைவு
இருக்கும் வரை எம்மைப் பற்றியே
எப்போதும் யோசித்தீர்கள் அம்மா!
உமது துன்பமெல்லாம் பொறுத்து
எம் உயர்வைப் பிரார்த்தித்தீர்கள் அன்னையே!
இன்று ஓடி வரும் தூரத்தில் நீங்கள் இல்லையே அம்மா!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என்றும் எங்கள் அம்மா நீங்கள்...

ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...!

தம்மனை,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

ஆறாத்துயரில்
குடும்பத்தினர்

(50901)4.6)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 12 . 02 . 1941



இறைவன் திருவடியில் 11 . 07 . 2013.

விஜயரெட்ணம் மகாலிங்கம்

அன்பின் திருவுருவமே அணையாத ஒளிவிளக்கே
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை வழி நடத்திய தெய்வமே
நன்மக்களாய் எம்மை வளர்த்தெடுத்த தந்தையே....
உங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆனபோதும்
கனத்த இதயங்களுடன் நாள்தோறும் நாமிங்கு
உங்கள் பிரிவைஏற்காது ஏங்கித் தவிக்கின்றோம்

38/3, A-8, ஸ்ரீ சுமங்கள வீதி,
இரத்மலானை.
0112721727

உங்கள் பேரிழப்பால் ஏங்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

[49439][12.][6]

## பொலிஸாருக்கு கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 30
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளும் ஊடக நடத்தையும் எனும் தொனிப் பொருளில் யாழ்.மாவட்ட பொலிஸாருக்கான செயலமர்வு கடந்த வியாழன் நடைபெற்றது.

யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் செயலமர்வில், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் நிறைவேற்று அதிகாரி சுகுமார் றொக்வுட் மற்றும் சிங்கள மொழி ஊடக பொறுப்பாளர் கமல் லியனராச்சி, உட்பட தமிழ் ஊடக பொறுப்பாளர் எம்.எஸ். அமீர் ஜுசைன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர். (ஜ-106)

## ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் அமரர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் நினைவுச் சிலை அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகளில் ஒன்றாக ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி இன்று, நாளை ஆகிய இரு தினங்கள் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

13 பாடசாலைகள் இந்தப் போட்டியில் பங்குகொள்கின்றன. போட்டியின் ஆரம்ப நிகழ்வு காலை 9 மணியளவில் அதிபர் தலைமையில் ஆரம்பமாகின்றது. (க)

# பிறநாட்டு கலாசாரத்தையே எம்முடைய கலாசாரமாக ஏற்றுக் கொள்ள திணிப்பு

### பேராசிரியர் எஸ். மௌனகுரு கூறுகிறார்

மட்டக்களப்பு, ஜுன்.30
கடந்த 50 வருடங்களாக நான் கலைத்துறையோடு இருந்து பணியாற்றி வருகின்றேன். கடந்த முப்பது வருடங்களாக எமது வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தன. அதன் காரணமாக பல கலை நிகழ்வுகள் வெளிப்படையாக நடக்க வாய்ப்பிருக்கவில்லை.




ஆனால் இன்று நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன. பிறநாட்டுக் கலாசாரத்தையே எம்முடைய கலாசாரமாக ஏற்றுக்கொள்ள வைக்கின்ற திணிப்புக்களும் இடம் பெறுகின்றன.

இவ்வாறு கூறினார் கிழக்குப் பல் கலைக்கழக ஓய்வு பெற்ற கலைத்துறைப் பேராசிரியர் எஸ். மௌனகுரு.

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலக கலை மன்றங்கள் இணைந்து வழங்கிய கலை சங்கம நிகழ்வு நேற்று முன்தினம்சனிக்கிழமைதன்னாமுனை பொன்தானா மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றன.

பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செலாளர் யு. உதயஸ்ரீதர் தலைமை வகித்தார்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற கலைத்துறைப் பேராசிரியர் எஸ். மௌனகுரு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

எமது நாட்டுக்கு பல இனத்தவர்களும் நிறத்தவர்களும் பல மொழி பேசுபவர்களும் வருகை தருகின்றனர்.

நாம் பல்வேறு நவீன தொழினுட்ப விடயங்களுக்கு எங்களையும் எங்களது பிள்ளைகளையும் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளோம்.

நாமும் பிள்ளைகளும் சேர்ந்து விடிய விடிய தொலைக்காட்சி பார்க்கின்றோம், அப்படிப்பட்ட தொலைத்தொடர்பாடல் நவீன தொழினுட்ப யுகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வெளநாட்டுத் தாக்கம், தொழினுட்பம், நடந்து முடிந்து விட்ட போரால் நாம் அடைந்திருக்கின்ற கஷ்டங்கள், இவற்றுக்கும் மேலால் நாம் இப்பொழுது புதிதாக கலாசாரப் பாரம்பரியங்களை எடுத்துக் கொண்டு வருகின்ற ஒருகால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த வேளையிலே பிரதேச செயலகங்கள் முன்வந்து பிரதேச செயலாளரின் தலைமையிலே அவரது முழு ஒத்துழைப்புடன் மீண்டும் இந்தக் கலைகளுக்கு உயிர்ப்பூட்டி கிழக்கு மாகாணத்திலே பிரதேச செயலகங்களிலே இந்தக் கலாசார விடயங்கள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன-என்றார். (வ)

## இளைஞனுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஜுன்.30
மட்டக்களப்பு, ஏறாவூர் நகரில் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் ஜுலை மாதம் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு பதில் நீதிவான் ஆர். கண்ணன் நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

1500 மில்லிகிராம் (20 பைக் கட்டுக்கள்) ஹெரோயி னுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு போதைவஸ்து தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த நபரைக் கைது செய்ததாக ஏறாவூர் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரி எம்.ஏ.சி. தாஹிர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக அவர் மேலும் கூறினார். (வ)



வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட எட்டு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு சுய தொழில் முயற்சிக்கான திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான மு.சந்திரகுமார் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன். வலி.தெற்கு பிரதேச சபையின் எதிரணி தலைவர் எஸ்.அரிகரன் உட்பட மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஒ-86)

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ நா.சிவசங்கரசர்மா நீதி அமைச்சினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்று தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளராக மல்லாகம் மாவட்ட நீதிபதி சி.சதீஸ்தரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியரான இவர், மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய ஸ்தானீககுருவும், அகில இலங்கை சமாதான நீதிவானும் ஆவார். புவியியல் சிறப்புக் கலை மாணி கல்வியில் முதுமாணி முதலிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர் ஓய்வுபெற்ற தபாலதிபர் சிவஸ்ரீ சிவ.நாகேஸ்வரக் குருக்கள் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் ஆவார். (ஒ)








## மல்லாகம் கோட்டைக்காடு திருவருள்மிகு
# சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்
## பஞ்சகுண்ட பக்ஷ நூதன சுந்தரவிமான பஞ்சதள
# இராஜகோபுர ஸ்தூலலிங்க
# கும்பாபிஷேக சிறப்பு மலர்-30.06.2014

### இறையுணர்வை தோற்றுவிக்கும் இராஜகோபுரம்.



வேல் கொண்டு வினைதீர்க்கும் மகிமை பெற்றவர் முருகப்பெருமான் "கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்கிறது கந்தபுராணம். இவ்வாறு தோற்றம் பெற்று கொண்டு அருள்பாலித்து வருவது சிறப்புக்குரியது.

இந்த வகையிலேயே யாழ்.குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பகுதியில் சுன்னாக மாநகரின் மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்திப் பெருமான் காலத்திற்குக் காலம் பல்வேறு சிறப்புக்களைக்கண்டு வந்திருக்கின்றது. எண்பத்தைந்து வருடகாலத் திற்கு மேலான வரலாற்றுப் பெருமை கொண்ட இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங் களினாலும் திருவருள் சிறப்பு மிகுந்தது. கடந்த 2010ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்று சொல்வதுண்டு. ஸ்தூலலிங்கம் என அழைக்கப்படும் இராஜகோபுரமானது ஆலயம் வரும் அடியார் களுக்கு வெகுதூரத்திலேயே வழிகாட்டு வதாகவும் இறை யுணர்வைத் தோற்றுவிப்பதாகவும் ஆலயத்திற்கு ஒரு முழு மையான தெய்வீகச் சிறப்பை ஏற்படுத்துவதாகவும் விளங்குகின்றது. எமது ஆலயத்தில் மற்றமொரு திருப்பணியாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுரமானது இன்று கும்பாபிஷேகப் பெருவிழா காணுவது கிராம மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச் சிக்குரிய நிகழ்வாகும். இன்றைய இந்த ஆன்மீகப் பெருவிழா சிறப்புற அமைவதற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ள ஆலய பரிபாலன சபையினர், தொண்டர் கள் அடியார்கள் உட்பட கிராமத்து மக்கள் மற்றும் வெளி நாடுகளில் வசிக்கும் அடியார்கள் அனைவருக்கும் முருகப்பெரு மானின் திருவருள் கிடைக்கவேண்டிப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

"சக்திவேல் சரணம்" ஓம் சரவணபவ"
"வாழ்க சைவம்" "வளர்க இறைதொண்டு"

தேவஸ்தான பிரதமகுரு
ஸ்கந்தர் ஆராதனா
சிவஸ்ரீ **கிருஸ்ண சோதீஸ்வரக்குருக்கள்**

### கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருக மூர்த்தி ஆலயத்துக்கு அழகிய ஐந்து தள இராஜகோபுரம் அமைக்கும் புண்ணிய கைங்கரியத்தை முருகன் வழி காட்ட எம் குழுவினால் அமைத்துக் கையளித்த பாக்கி யம் எமக்கு கிடைத்தது நாம்பெற்ற பேறு என்று சொல்லலாம். இம் முருகன் ஆலயம் இராஜய கோபுர்ம் அமைய பெற்று பூரணமடைந்த புண்ணிய தலமாகிறது. இப்பதியில் வாழுகின்ற மக்கள் சீரும் சிறப்புமாக வாழ சாளம்பை முருகன் நிச்சயம் அருள்பாலிப்பான் எனக் கூறி கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என நயமாக சொல்லி முருகன் அருள் வையகம் எல்லாம் பரவ பிரார்த்திக்கின்றேன்.

**த.தவவீரசிங்கம்**
சிற்ப ஆச்சாரியார்
அராலி கிழக்கு வாழை அம்மன் கோயிலடி,
வட்டுக்கோட்டை.

### தலைவரின் வாழ்த்துச் செய்தி



அருள்மிகு மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான பரிபாலசபைத் தலைவர் என்ற வகை யில் வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச் சியடைகின்றேன். சாளம்பை முருகப்பெருமானின் அருளால் எமது ஊர் மக்கள் அனைவரும் சிறப்பாக, சந்தோஷமாக வாழ்வதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எண்பத்தொன்பது வருட வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட எமது ஆலயம், கடந்த கால் நூற்றாண்டு காலப்பகுதியில் பெரிய வளர்ச்சியைக் கண்டு மூன்று சித்திரத் தேர்கள், தீர்த்தத் தடாகம் ஆகியவற்றோடு தற்போது இராஜகோபுரத்துடன் காட்சியளிப்பது எமது மக்கள் செய்த பெரும்பேறாகும். இவ்வாறு புதுப்பொலிவுடன் விளங்கும் இவ்வாலயத்தில் இன்று நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புறவும், இராஜகோபுர கும்பாபிஷேக மலர் (சாளம்பையான்) வெளியீடு இனிதாக அமையவும் எம்மக்கள் அனைவரும் சாளம்பை முருகப்பெருமான் அருளால் சீரும் சிறப்பும் பெற்று வாழவும் எல்லாம்வல்ல முருகப்பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி லோகநாயகி இரகுபதி,**
ஓய்வுபெற்ற அதிபர்.

### அருளாசிச் செய்திகள்



மல்லாகம், கோட்டைக்காடு பதியில் எழுந் தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக் கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி யடைகிறோம். பல ஆலயங்களைக் கொண்ட மல்லாகம் பிரதேசத்தில் முருகப்பெருமான் முத் தமிழால் வைதாரை வாழவைக்கின்ற அருள்நிலை கொண்டவர்.

ஆலயத்தின் அமைப்பில் இராஜகோபுரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

தூலலிங்கமாகிய கோபுரம் வழிபடுவோருக்கு கோடி புண்ணியம் வழங்குகின்றது.

இதனை மையமாகக் கொண்டு முருகப்பெருமானுக்கு பஞ்சதளங் களைக் கொண்ட இராஜகோபுரம் அமைந்திருப்பது மல்லாகம் கோட்டைக்காடு வாழ் சைவத்தமிழ் மக்களுக்கு ஆன்மீக வளர்ச்சியை மேல் இருந்து செய்வதாக அமைகின்றது. இந்த அறப்பணியைச் செய்திருக்கும் உள்ளூர், வெளியூர் வாசிகளையும் ஆலய பரிபாலன சபையினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

இப்புனிதப்பணியை சிறப்பித்து நூல் வெளியிடும் மலர்க்குழு வினை இறைவன் ஆசீர்வதிப்பாராக. நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ் வோமாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ **சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
இரண்டாவது- குருமஹாசந்நிதானம்.

### தேவஸ்தான குருக்களின் ஆசி உரை



தெய்வீகம் நிறைந்து காணப்படும் சாளம்பைப் பகுதியில் கோயில் கொண்டரு ளும் முருகப்பெருமான் ஆலயத்தில் இன்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடை பெறவுள் ளது. அவன் அருளாம் கோபுர தரிசனம் பாப விமோசனம் என்று கூறுவார்கள் சான்றோர். அது மட்டுமன்றி கண்களால் பார்க்கக் கூடிய தூலலிங்கமாகிய கோபுரத்தை சுப்பிரபோத மதில் தூரஸ்ய சிகரே திருஷ்வாயாவத் கைலாசபூதலம் அதாவது கோபுரத்தின் கலசத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவும் பூலோகக் கைலாசம் எனப்படுகின்றது. எனவே இன்றைய நாளில் ஆன்மாக்கள் செய்த பாவங்களில் இருந்து விடுவிக்கவும் சாளம்பைபதியை கைலாசமாக்கவும் முருகன் திருவருள் புரிந்துள்ளார். கோபுரங்களின் அடுக்கடுக்கான வாயில்கள் இருந்தாலும் உள்ளே செல்வதற்கு தரை மட்டத்திலுள்ள ஒரு வாயில் தான் உதவுகின்றது. இதன் பொருளானது புறக் காரணங்களும் அகக்காரணங்களும் பல பலவும் இடத்தில் இருக்கின்ற தெனினும் இறை நாட்டம் கொள்ளும் போது மனது என்ற காரணம் தான் உதவுகின்றது. எனவே இன்றைய நாளில் மனத்தை ஒரு நிலைப்படுத்தி முருகப்பெருமானை வழிபடுவோம். இந்நாளில் அனைத்து ஜீவராசிகளும் இன்புற்று இருக்கவும் இன்றுபோல் என்றென்றும் இன்புற்றிருக்க முருகப்பெருமானின் திருவடிகளைப் பணிகின்றேன்.

வேஸ்தான குரு
பிரம்ம ஸ்ரீ **சிவ யதுகர சர்மா**
மாணவன் யாழ். பல்கலைக்கழகம்.

### தொண்டர் தம் பெருமை பேசவும் வேண்டுமா



வேல் ஏந்தி வினை தீர்க்கும் எம் முருகப்பெருமான் இலங்கையின் வடபால் அமைந்த - ஆன்மீக பணிபுரியும் தொண்டர் களைத் தன்னகத்தே கொண்ட மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை பதியினிலே அமையப் பெற்றமுருகன் ஆலயத்தின் அதிசுந்தர - நூதனபஞ்சதள இராஜகோபுர திருக்குடமுழுக்கு கும்பாபிசேகபெருவிழா இன்று நடைபெறுகிறது.

இந்த இராஜகோபுரம் வானமதில் ஓங்கி -உயர்ந்து - ஓங்காரமாய் காட்சியளிக்க எம்பதி மக்கள் தொண்டர்கள் ஆற்றிய சேவைகள், அன்பளிப்புகள், பொருள் உதவிகள் எழுதி முடியாத தொன்றாகும். இன்று நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடை பெற எல்லாம் வல்ல சாளம்பை முருகப்பெருமானின் பாதார விந்தங்களில் பணிந்து பெருமானின் அருட்கடாச்சம் அனைத்து அடியவர் களுக்கும்கிட்ட வேண்டுமென இந்நாளில் வேண்டி வாழ்த்தி வணங்கு கிறேன்.

" தொண்டர் தம் பெருமை பேசவும் வேண்டுமே"

**நா.கணேசமூர்த்தி**
ஆலய பரிபாலன செயலாளர்.


சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கயமுகன் ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

துவாரகாஸ் காட்சியறை
இல.141 A, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்
சுவர்விளக்குகள், தூங்கு விளக்குகள் நவீன குளியலறை சாதனங்களுக்கு நாடுங்கள்

R.K. எலரிக்கல்
கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.
தொ.பே. 077 948 3162

சண்முகா மெடிக்கல்
No. 54,கே.கே.எஸ்.றோட்,
சுன்னாகம்.
077 923 6739

லலிதா பார்மசி
அன்ற
குறோசறி
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன்.

நடேசன்
பல்பொருள்வாணிபம்
கோட்டைக்காடு
மல்லாகம்.

செல்வம் ஸ்ரோஸ்
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

ராஜ்குமார்
பல்பொருள்வாணிபம்
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

குமரன் V.D.O/O.D.O
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

ஜமுனா ஒலி, ஒளி,
பந்தல்சேவை
கோட்டைக்காடு,
மல்லாகம்.

சிவா மோட்டேஸ்
கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.

திருமண கார் சேவை
மற்றும் பஸ் சேவைகளிற்கு
வேனு ரவல்ஸ்
கோட்டைக்காடு, மல்லாகம்
077 614 4739

கிறோசினா கூல்பார்
சாளம்பை முருகன்
கோயில் வீதி,
கோட்டைக்காடு,மல்லாகம்.

நிரோஸ் அந்தியகால சேவை
இல.46, கே.கே.எஸ்.
றோட், சுன்னாகம்.
தொ.பே. 077 593 8740

தயா மரக்காலை
THAYA TIMBER DEPOT
இல.89, கே.கே.எஸ். றோட், சுன்னாகம்.
தொ.பே. 021 320 5854 / 077 645 1545

தர்மிகா ரெக்ஸ்ரைல்ஸ் அன்
தர்ஷனா மல்ரி ஸ்பொட்
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.

(39362) (45.

# மீண்டும் உயர்ந்தது முட்டையின் விலை

அச்சுவேலி, ஜூன் 30
யாழ்.மாவட்டத்தில் கோழி முட்டையின் விலை மீண்டும் உயர்வடைந்தது. சில்லறைக்கு ஒரு முட்டை 14 முதல் 16 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. பண்ணையாளர்கள் மற்றும் கோழி வளர்ப்போர் முட்டைக் கோழிகளை இறைச்சிக்கு விற்றுத் தீர்த்தமையே முட்டை விலை ஏற்றத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.
இந்த மாதம் நடுப்பகுதியில் கோழி முட்டையின் விலை மிக தாழ் நிலைக்குச் சென்று 10 ரூபாவில் இருந்து 8.50 சதம் வரை விற்பனை செய்யப்பட்டது.
கோழி முட்டையின் விலை திடீரென குறைவடைந்த நிலையில் உற்பத்திச் செலவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் நட்டம் அடைந்தனர் கோழி வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள். அதை அடுத்தே முட்டைக்கோழிகளை இறைச்சிக்கு விற்றுவிட்டு சிலர் தொழிலையே கைவிட்டிருந்தனர். (ஒ-11)

# நாகபூஷணி ஆலயத்தில் கண்காணிப்பு கமராக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் உள்ளே கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் சீருடையிலும் பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.
ஆலயத்தில் தினமும் பெருந்திரளான மக்கள் கூடுவதால் பெண்கள்நகைகளை அணிந்து வருவதை முடிந்தவகை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய அறங்காவல் சபையும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரும் அடிக்கடி அறிவித்தல் விடுத்து வருகின்றனர். (வ-7)

# தீக்கிரையாக்கப்படும் கண்டல் காடுகள்



எரிக்கப்பட்ட சவர் நிலக் காட்டுப் பிரதேசம்

குடத்தனை, ஜூன் 30
வடமராட்சி கிழக்கு குடத்தனை அம்பன் பிரதேசத்துக்கும் வரணி பிரதேசத்தின் வடக்கு எல்லைப் பிரதேசத்துக்கும் இடைப்பட்ட சவர் நிலக் காட்டுப் பிரதேசம் தற்போது விஷமிகளால் தீயிட்டு எரியூட்டும் சம்பவம் பரவலாக இடம்பெற்று வருகின்றது.
விறகுத் தேவைக்காக மாட்டு வண்டில்களில் வரும் வடமராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த நபர்களாலேயே இவ்வாறு குறித்த கண்டல்காடுகள் தீயிட்டு எரிக்கப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். தில்லை மரங்களுடன் இணைந்தே இந்தக் கண்டல் மரங்கள் பரவலாக வளர்ந்துள்ள நிலையில் தில்லை மரத்திலிருந்து வடியும் பால் உடலில் படும்போது தோல் எரியும் தன்மை கொண்டதுடன் அது தோலைப் பாதிக்கும் தன்மையும் கொண்டது.
இதனைத் தவிர்ப்பதற்காகவும் தில்லைமரம் எரியூட்டப்படும் போது உரிய மரத்தின் பால் வற்றிப்போகும் நிலையில் கண்டல் மரங்களை எதுவித சிரமமும் இன்றி இலேசாக வெட்ட முடியும். இதன் காரணமாகவே குறித்த காடுகள் விஷமிகளால் எரியூட்டப்படுகின்றதாக பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.
கடந்த வாரம் இவ்வாறு குறித்த காட்டுப்பகுதி தீயீட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்த கற்கோவளம் பிரதேச படைத்தரப்பினர் வாகனம் ஒன்றில் அங்கு சென்று குறித்த காட்டுக்கு தீவைத்த நபர்களை தேடி சகல இடங்களிலும் அலைந்து திரிந்தமை குறிப்பிடத்தக்கது. பொதுமக்களை இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் தருமாறும் கேட்டுள்ளனர்.
இவ்வாறான இயற்கை வளம் கொண்ட காட்டுப் பிரதேசம் பல ஜீவராசிகளின் வசிப்பிடமாகவும், வெளிநாட்டுப் பறவைகளின் சரணாலயமாகவும், மாரி காலத்தில் பல்வகை மீனினங்கள் பெருகும் இடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட இந்தப் பிரதேசம் உரிய திணைக்களத்தால் பாதுகாக்கப்படல் வேண்டும் என்று புத்திஜீவிகள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். (வ-122)

# வலி.வடக்கு மக்களுக்கு சுவிஸ் வாழ் எம்மவர்கள் வழங்கிய உலருணவுப் பொதிகள் வியாழன் கையளிப்பு

## நேரில்சென்று விநியோகித்தார் சரவணபவன் எம்.பி.



உணவுப் பொதிகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலி.வடக்கு மக்களிடம் கையளிக்கின்றார்.

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் கோணப்புலம், கொட்டியப்புலம், காரைக்கால் சிவன் கோயில் போன்ற அகதி முகாம்களில் தங்கியுள்ள 110 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
சுவிற்சர்லாந்து செங்காளன் சென்மார்க் கிரற்றன் அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் அனுசரணையுடன் தொண்டர்கள் இதற்காக ஒரு லட்சத்து 10 ஆயிரம் பெறுமதிமிக்க உலர் உணவுப் பொதிகளைவழங்கிஇருந்தனர்.
சுமார் 25 வருடங்களுக்கு மேலாக முகாம்களில் வசித்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்த உதவிப் பொருள்களை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கடந்த வியாழனன்று அந்த மக்களுக்குக் கையளித்தார். தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தில் வைத்து இந்தப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.
தாயகத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுவிஸில் வசித்து வரும் எம்மவர்கள் வழங்கி வரும் உதவித் திட்டத்தின் கீழ், மேற்படி ஆலயத் தொண்டர்களான இராசமணி முத்துக்குமாரசாமி, நாகராசா, ஜீவா, ஜோதிநாதக் குருக்கள் சுஜானு, கஜா, சிவசோதி சிவஜனனி, இராஜகுமார் கமலினி, தேவானந்தன் வராஹி, கந்தசாமி பகிரதன், நடராஜா, பஞ்சலிங்கம் ஆகியோர் நிதியுதவி வழங்கி இருந்தனர்.
அண்மையில் சுவிஸ் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், செங்காளன் சென்மார்க்கிரற்றன் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற முருக பக்தி மாநாட்டில் "வடக்கில் இந்து ஆலயங்களின் இன்றைய நிலை" என்ற தொனிப் பொருளில் சிறப்புரை ஆற்றியிருந்தார். அவ்வேளையிலேயே அங்கு வசிக்கும் எம்மவர்கள் இந்த உதவிப் பொருள்களை வழங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# விரைவில் அமைச்சரைச் சந்திப்பர் மீனவர் சங்கங்களின் குழுவினர்

## இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு தீர்வுகோரி

யாழ்ப்பாணம். ஜூன் 30
இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைக்கு உடனடித் தீர்வு காணக்கோரி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் சங்கங்களின் குழுவினர் கடற்றொழில் அமைச்சரைச் சந்திக்கவுள்ளனர்.
யாழ்.மாவட்ட கிராமிய மீனவர் சங்கங்களில் இருந்து 10 பேர் கொண்ட குழுவினர் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இதுகுறித்து யாழ்.மாவட்ட கிராமிய மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் தெரிவிக்கையில்-
"இந்திய மீனவர்களது அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் கடல் வளம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகிறது. அத்துமீறும் மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டாலும் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி தொடர்ந்தும் மீன்பிடித்து வருகின்றனர். இதனைத்தடுக்க இருநாட்டு அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது. தொடர்ந்து மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு கடற்றொழில் அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி கடற்றொழில் அமைச்சைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளோம்.
இதற்காக கிராமிய சங்கங்களில் இருந்து 10 பேர் கொண்ட குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தக் குழுவினர் சந்திப்பதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் சந்திப்பு இடம் பெறும்" -என்றார். (வ-14)

# ஜெய்ப்பூர் நிறுவன ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் 27 ஆவது ஆண்டு நிறைவில் காலடி வைத்துள்ளது.
நாளை செவ்வாய்க்கிழமை நிறுவனத்தின் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நூல்வெளியீடு, நீரிழிவு குறித்த ஆலோசனைக் கலந்துரையாடல் என்பன நடைபெறவுள்ளன.
போராலும் இயற்கையாகவும் அவயவங்களை இழந்து வலுவற்றோருக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்தி அவர்களின் வாழ்வை வளமாக்கும் மனிதநேயப் பணியில் 27 ஆண்டுகள் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-135)

# இந்து ஆலயங்களில் நடைபெற்றுவரும் உயிர் வேள்வியை நிறுத்தக் கோரிக்கை

## நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபருக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் கடிதம்

யாழ்ப்பாணம். ஜூன் 30
யாழ். மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் இடம்பெறுகின்ற உயிர் வேள்வியிடல் உடன் நிறுத்தப்பட வேண்டும். இதில் உடனடியாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலையிட வேண்டும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கடந்த காலங்களில் கவுணாவத்தை நரசிம்மன் ஆலயத்தில் பெருமளவிலான கடாக்கள் பலியிடப்பட்டன.
அதனைத் தொடர்ந்து பல இந்துமத ஆலயங்களின் முன்பாக தற்போது உயிர் வேள்விகள் இடம்பெற்று வருகின்றன. எனவே இவை முழுமையாக தவிர்க்கப்பட வேண்டும்.
எனவே யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தலையிட்டு உயிர் வேள்வியிடலை நிறுத்த யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-50)

# இந்திய வீடமைப்பு நெடுந்தீவில் சிறந்த முறையில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
இந்திய வீடமைப்புத் திட்டம் நெடுந்தீவில் சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளதாக நெடுந்தீவுக்குச் சென்ற யாழ். இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.
கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவுக்குச் சென்ற குறித்த அதிகாரிகள் ஸ்ரீகாந்த், மூர்த்தி ஆகியோர் இந்திய வீடமைப்புத் திட்டங்களைப் பார்வையிட்டனர். பயனாளிகள் வீட்டுத் திட்டத்துக்கு போதிய அளவு பணம் கிடைக்காத நிலையிலும்கூட சிறந்த முறையில் தமது வீடுகளை அமைத்து குடியிருக்கின்றனர்- என்றும், ஏனைய இடங்களை விட நெடுந்தீவு மக்கள் தமக்கான வீடுகளை நல்ல முறையில் அமைத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-7)

# கல்வி நிகழ்வுகளுக்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் குறைந்த வாடகை

கல்வியோடு சம்பந்தப்பட்ட பொது அமைப்புக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கலாசார மண்டபம் குறைந்த வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. நாள் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் வாடகை அறவிடப்படவுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் விசேட கூட்டம் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் இயங்கும் கல்வியோடு சம்பந்தப்பட்ட பொது அமைப்புக்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தை இலவசமாகத் தந்துதவுமாறு பிரதேச சபையைக் கோரியிருந்தன.
அந்தக் கோரிக்கை குறித்துமேற்படி கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. பிரதேச சபையின் நிதி நிலைமை கருதி மண்டபத்தை இலவசமாக வழங்கமுடியாது என்று தெரிவித்த உறுப்பினர்கள் மாணவர்களின் நலன் கருதி கல்வியோடு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்கு ஒரு நாளுக்கு 500 ரூபா வீதம் வாடகை அறவிடலாம் என்று தெரிவித்தனர். சகல உறுப்பினர்களும் இதை ஏற்றுக் கொண்டதை அடுத்து இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ-115)

# தமிழரின் உடலை தகனம் செய்ய இராணுவம் மறுத்ததால் பரபரப்பு

## வவுனியா பேயாடிகூழாங்குளம் மயானத்தில்

வவுனியா, ஜீன் 30

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான வவுனியா பேயாடிகூழாங்குளத்தில் அமைந்துள்ள இந்து மயானத்தில் சடலத்தைத் தகனம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

பேயாடிகூழாங்குளம், கொக்குவெளி, பூனாமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களின் பாரம்பரியமான இந்து மயானம் பேயாடிகூழாங்குளத்தில் அமைந்துள்ளது.

போர் காரணமாக இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்று வேறு பகுதிகளில் வசித்து வரும் நிலையில் அந்தப் பகுதிக்கு அண்மித்ததாக திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பேயாடி கூழாங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் மரணம் அடைந்தமையால் தமது பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி அந்தப் பகுதி இந்து மயானத்தில் உடலைத் தகனம் செய்வதற்கான ஆயத்த வேலைகளைச் செய்வதற்கு மரணமடைந்தவரின் உறவினர்கள் அங்கு சென்றபோது பெரும்பான்மை இன மதகுரு ஒருவரும் அந்தப் பகுதி இராணுவத்தினரும் இணைந்து இது பௌத்த மக்களின் பிரதேசம் இங்கு பௌத்த அடையாளங்கள் இருக்கின்றன எனக் கூறியதுடன் இராணுவ முகாம் இருந்த பகுதியில் உள்ள அடையாளங்களைக் காட்டி அனுமதி மறுத்தனர்.

இதனையடுத்து அங்கு திரண்ட இளைஞர்களும் அந்தப் பகுதி மக்களும் இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

குழப்ப நிலை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சம்பவ இடத்துக்கு வருகை தந்த வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்: இது எனது பிரதேசம். இங்கு எனது உறவினர்களுக்கும் காணிகள் உண்டு. நாம் பரம்பரை பரம்பரையாக பராமரித்து வந்த நிலம்.



வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மயானத்தில் கலந்துரையாடிய போது...

இங்கு தான் எமது மக்களின் தகனக்கிரியைகள் நடைபெற்று வந்தன. நடைபெறவும் வேண்டும்.

இதனை எப்படித் தடுக்க முடியும் எனக் கூறி இராணுவத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன் பின்னர் இராணுவத்தினர் தகனக் கிரியை செய்வதற்கு அனுமதி வழங்கினர்.

இது தொடர்பில் மரணம் அடைந்தவரின் உறவினர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதியப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு அந்தப் பகுதி கிராம அலுவலர், வவுனியா பிரதேச செயலர் க.உதயராசா ஆகியோரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## போலி நாணயத்தாளை வழங்கியவர் விளக்கமறியலில்

முள்ளியவளை, ஜீன் 30

ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வழங்கிய நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

முள்ளியவளை பூதன்வயல் பகுதியில் உள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தின்போது மேற்படி நபர் வியாபாரி ஒருவரிடம் இந்தப் போலியான நாணயத்தாளைக் கொடுத்துப் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார்.

அந்தத் தாள் போலியானது என்பதைக் கண்டறிந்து கொண்ட வியாபாரி மிகுதிப் பணத்துக்கு இப்போது என்னிடம் பணம் இல்லை என்றும் சற்று நேரம் கழித்து வரும்படியும் கூறியதுடன் அங்கு காவல் கடமையில் இருந்த பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

மேற்படி நபர் மிகுதிப்பணம் பெறுவதற்காக வந்தபோது அவர் முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் 24 ஆம் திகதி நடந்துள்ளது. மறுநாள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதியினால் உத்தரவிடப்பட்டுள்ளது. (க-433)

## லஞ்ச ஊழலுக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணி

வவுனியா, ஜீன் 30

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்ட இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து இலஞ்ச ஊழலுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா நகரில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட இலஞ்ச ஊழலுக்கு எதிராக சட்ட ஆலோசனை மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணிக்கு மாகாணத்தின் பிராந்திய இணைப்பாளர் ரவீந்திர சில்வா தலைமை தாங்கினார்.



ஆர்ப்பாட்டப் பேரணியில் இளைஞர்கள், யுவதிகள்

வடமாகாணத்தில் இலஞ்ச ஊழல் அதிகரித்துள்ளமையைக் கண்டித்தும் அவற்றைத் தடுக்கும் முகமாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இளைஞர் யுவதிகளின் பூரண பங்கேற்புடன் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட இலஞ்ச ஊழலுக்கு எதிரான சட்ட ஆலோசனை மையத்திலிருந்து தொடங்கிய ஆர்ப்பாட்டப் பேரணி பஸ் நிலைய வீதி ஊடாக வவுனியா பொது வைத்தியசாலைக்குச் சென்று மீண்டும் வவுனியா மாவட்ட இலஞ்ச ஊழலுக்கு எதிரான சட்ட ஆலோசனை மையத்தில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-421)

## முள்ளியவளையில் இந்தியன் வீடுகள்

முல்லைத்தீவு, ஜீன் 30

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை, புதரிக்குடா கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 30 குடும்பங்கள் இந்திய வீடுகள் அமைக்கும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

புதரிக்குடா கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தர வீடுகளின்றி தகரக் கொட்டில்களில் வாழ்ந்து வந்த 30 குடும்பங்களுக்கே மேற்படி வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த கட்டமாக அதே கிராம அலுவலர் பிரிவில் மேலும் 12 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-415)

## குடிதண்ணீருக்கு ஏற்றக்காடு கிராமத்தில் தட்டுப்பாடு

மன்னார், ஜீன் 30

மன்னார், ஏற்றக்காடு பிரதேசத்தில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகக் கடற்கரையோரங்களை அண்டிவாழும் மக்களே குடிதண்ணீருக்குப் பெரும் அவலத்தை எதிர்கொள்கின்றனர்.

மேலும் பவுஸர் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரை பணத்தைச் செலுத்தியே பெறவேண்டியுள்ளதாகவும் நீர் கிடைக்காததால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (க-415)

## அக்கராயன் மருத்துவமனை வரை பஸ் சேவை வேண்டும்

### பாதிக்கப்படும் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜீன் 30

கிளிநொச்சி அக்கராயன் மருத்துவமனைவரைக்கும் அரச, தனியார் பஸ் சேவைகளை நடத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி- முழங்காவில் வழித்தடத்தில் பயணிக்கும் அரச மற்றும் தனியார் பஸ்கள் அக்கராயன் சந்தியில் மக்களை இறக்கிவிட்டுச் செல்லும் நிலை இங்கு மீள்குடியமர்வு இடம்பெற்ற நாளிலிருந்து காணப்படுகின்றது.

இதனால் அக்கராயன் சந்தியிலிருந்து 700 மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு நோயாளர்கள் நடந்து செல்கின்றனர்.

இவ்வாறு மகப்பேற்றுக்குரிய பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் எனப் பலரும் நடந்து செல்வதைக் காண முடிகின்றது. வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஸ்கந்தபுரம், மணியங்குளம், கண்ணகைபுரம், முக்கொம்பன், கோணாவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே மருத்துவமனைக்கு நடந்து செல்கின்றனர்.

எனவே பஸ் சேவைகளை மருத்துவமனைவரைக்கும் நடத்துமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## அடம்பனில் சிறுவர் பூங்கா, மைதானம் நேற்றுமுன்தினம் திறந்து வைப்பு

மன்னார்,ஜீலை 30

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பனில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 9.1 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச சபையினால் அடம்பன் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் திறப்பு விழா மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.வரப் பிரகாசம் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.



வட மாகாண முதலமைச்சரும், அமைச்சர் ரிஷாத்தும் இணைந்து திறந்து வைத்தபோது...

குறித்த நிகழ்வுக்கு இணை பிரதம அதிதிகளாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வணிக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரும்,கௌரவ அதிதிகளாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,சிவசத்தி ஆனந்தன், வடமாகாண அமைச்சர் சட்டத்தரணி பா.டெனீஸ்வரன் ஆகியோரும்.சிறப்பு அதிதியாக வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஏ.பிறிமுஸ் சிராய்வாவும் கலந்து கொண்டனர்.

முதலில் சிறுவர் பூங்கா வைபவ ரீதியாக இணை பிரதம அதிதிகளாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வணிக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து விளையாட்டு மைதானம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு அங்கு மைதானத்தில் மரமும் நடப்பட்டது.

பின்னர் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அணிக்கும்,மடு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட அணிக்கும் இடையில் உதைப் பந்தாட்டப் போட்டியொன்றை வடமாகாண முதலமைச்சர் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் வருகை தந்த அதிதிகளினால் பாடசாலை மாணவர்கள் மற்றும் வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (க-56)

# பெண்களின் உரிமைகளை பாதுகாப்போம்

பூங்கொடி

இலங்கையைப் பொறுத்தவகையில் சனத்தொகையில் சரிபாதியளவு பெண்களாக இருக்கின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இவர்கள் ஆண்களுக்குச் சரிநிகராக எந்தத் தொழிலிலும் ஈடுபடுகின்ற போக்கும் காணப்படுகின்றது. ஆனாலும் பெண்மையை எம்மில் எத்தனை பேர் மதிக்கின்றனர் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.



மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற சம்பிரதாயங்களில் திளைத்திருக்கும் நாம் பெண்களை மனிதப் பிறவியின் உருவாக்கத்துக்கான பிறவியாகப் பார்க்கிறோம். அன்பு, கருணை போன்றவற்றின் வெளிப்பாடுகள் பெண்மையிலிருந்தே பிறக்கின்றன. பெண்களுக்கான உரிமைகளையும் பண்புகளையும் மதிக்க வேண்டியது ஆண்களின் கடமைப்பாடாகும்.

பெண் என்பவள் ஓர் அடிமைப் பொருள் அல்ல. அவளுக்கும் உரிமைகளில் சமபங்கு உண்டு. இல்லத்தின் அரசி என்று வர்ணிக்கப்படும் பெண்கள் இன்று பல்வேறுபட்ட போராட்டங்களுக்குள் தம்மை உட்படுத்தி அவற்றிலிருந்து வெளியேற முடியாது சிக்கித் தவிக்கின்றனர். ஆண்வர்க்கத்தின் மேலாதிக்க வெறித்தனம் இன்னும் முற்றுப்பெறவில்லை. இதனால் பெண்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் தடைக்கற்கள் தோன்றிய வண்ணமே உள்ளன.

சர்வதேசரீதியாகக் காணப்படும் பெண்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும், பெண்களின் மீதான துஸ்பிரயோகங்களுக்கு எதிராகவும் முழுச் சமூகமும் கிளர்ந்தெழ வேண்டும். பெண்களின் இந்த நிலை குறித்து ஒவ்வொரு ஆணும் வெட்கப்பட வேண்டும். திருமண பந்தத்தில் நுழைய வேண்டிய பெண் சீதனம் என்கின்ற அநியாயத்தை ஆண் வர்க்கத்திடம் தாரைவார்க்க வேண்டி உள்ளது. ஆண்களின் சபலங்களுக்குப் பெண்கள் உள்ளாகித் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். ஆண் மேலாதிக்க வெறியினால் பெண்கள் கொல்லப்படுவதும் தற்கொலை செய்வதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்களும் ஆண்களுக்குச் சமமாகத் தொழில்புரியும் இன்றைய நவீன யுகத்தில்கூட பெண்கள் மீது வரம்புமீறிச் செயற்படும் ஆண்களது நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கிராமத்துப் பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் அதிகாலையில் எழுந்து தமது நாளாந்தக் கடமைகளை ஆரம்பிக்கின்றனர். இரவுவரை இவர்களின் பணிகள் தொடர்கின்றன. ஓய்வு ஒளிச்சலின்றிப் பாடுபடும் இந்தப் பெண்களின் நிலை தொடர்பாக எவருமே கவனத்தில் கொள்வதில்லை. இதேபோன்று நகரத்துப் பெண்களும் தமது நாளாந்தக் கடமைகளோடு பிள்ளைகளைப் பள்ளிக்கும் கணவனை அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்க வேண்டியதுடன் தாமும் அலுவலகம் செல்லவேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். இவர்கள் அலுவலகம் முடித்து வீடு திரும்பும்போதும் தமது குடும்பத்தின் சிந்தனைகளுடன் காணப்படுவார்கள். இவர்கள் தம்மைப் பற்றிச் சிந்திக்காமல் எப்போதும் தமது குடும்பத்தைப் பற்றியே சிந்திக்கின்றார்கள். வீட்டில் சமயலறையில் தொடங்கி அனைத்து விடயங்களிலும் பெண்ணே முன்னிலை வகிக்கின்றாள். இவை அனைத்தையும் பெண்களின் இயல்பெனக் கூறுகின்றோம். பெண்ணையும் அவ்வாறே நம்பவைக்கின்றோம். இயல்பு மீறும் பெண்களைத் திமிர் பிடித்தவள் என்கிறோம். நியதிகளை மீறி ஒரு பெண் இயல்பான தன்னுணர்வோடு ஒரு முடிவை எடுக்கும்போது அது குறித்து அவளைக் குற்றவுணர்வடையச் செய்யும் விதமாகவே சமூகத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

வீடு, காணி என்பன எவ்வாறு அசையாச் சொத்துக்களாக உள்ளனவோ அவைபோன்று பெண் என்பவள் குடும்பத்தின் அசையும் சொத்தாக விளங்குகின்றாள். அன்பு, பாசம், கருணை, கடமை, பொறுப்பு என்னும் கயிறுகளால் பெண்ணைக் குடும்பத்தோடு பலமாக இறுக்கி வைத்திருக்கிறோம். பெண்களது உரிமைகள் புதிப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தாலும் போர், பயங்கரவாதம், தனிமை, தொழில்சார் விடயங்கள் போன்ற காரணங்களால் ஆண்வர்க்கத்தினர் பெண்களை இழிநிலைக்குள் தள்ளி விட்டுள்ளனர். பாடசாலைகளிலும் வேலைத்தலங்களிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் போதும் பெண்கள் மீதான துஸ்பிரயோகங்கள் எல்லை மீறிக் கொண்டே செல்கின்றன. வறுமை, கணவனின் பிரிவு என்பன பெண்கள் நிலை தடுமாறுவதற்குச் சாதகமான காரணங்களாகவுள்ளன. அரசியலமைப்பிலும் மனித உரிமைச் சட்டங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தாலும் சில வேளைகளில் சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாகக் குற்றம் புரிகின்ற ஆண்கள் தப்பித்துக் கொள்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவகையில் சனத்தொகையில் சரிபாதியளவு பெண்களாக இருக்கின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இவர்கள் ஆண்களுக்குச் சரிநிகராக எந்தத் தொழிலிலும் ஈடுபடுகின்ற போக்கும் காணப்படுகின்றது.

ஆனாலும் பெண்மையை எம்மில் எத்தனை பேர் மதிக்கின்றனர் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஐ.நா. சபையால் 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மனித உரிமைகள் மீதான பிரகடனத்தின் உறுப்புரிமை ஏழின் பிரகாரம் சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் விடுதலை என்று வாய்கிழியக் கத்தினாலும் சிலரது போக்கில் மாற்றம் ஏற்படவில்லை. தாயும் பெண்ணே, தாரமும் பெண்ணே, தாயின் மடியில் சுவர்க்கம் உண்டு என்று பெண்களைப் போன்றுகின்ற அடிப்படையில் நாம் வாழ் வோமாக இருந்தால் பெண்களின் அந்தஸ்து உயரும் என்பது திண்ணம்.

# பெண்கள் வாயாடிகளாவது நல்லது!

சு.சாரங்கி

பெண்களின் உரையாடல் பெரும்பாலும் வறட்டு உரையாடலாய் இருப்பதில்லை. சிரிப்பும், கேலியும், கிண்டலும், உற்சாகமும் என உலகத்தின் மிக முக்கியமான பணி உரையாடல் என்பது போல அவர்கள் அதில் ஒன்றி விடுவார்கள்.



பெண்களுக்கு ஒரு விசேட குணம் உண்டு. யாராவது சக தோழியைக் கண்டால் உற்சாகமான உரையாடலை சட்டென ஆரம்பித்து விடுகிறார்கள். கடைவீதி, அலுவலகம், ஆலயம் ஏன் சுட்டெரிக்கும் தார் வீதி என்றால் கூட இந்த உரையாடல் தடைப்படுவதில்லை.

நலமா எனத் தொடங்கும் உரையாடல் குழந்தைகள், வீடு, வேலை, மாமியார், நண்பர்கள் எனக் கிளை விட்டுப் பரந்து விரிந்து பொழுது போவதே அறியாமல் தொடர்ந்துகொண்டிருக்கும்.

பெண்களின் உரையாடல் பெரும்பாலும் வறட்டு உரையாடலாய் இருப்பதில்லை. சிரிப்பும், கேலியும், கிண்டலும், உற்சாகமும் என உலகத்தின் மிக முக்கியமான பணி உரையாடல் என்பது போல அவர்கள் அதில் ஒன்றி விடுவார்கள்.

ஆண்கள் பலருக்கும் இந்த கலை வாய்ப்பதில்லை. நலமா என ஆரம்பிக்கும் உரையாடல் நல்லா இருக்கிறேன் என்ற பதிலைக் கேட்டபின்னர் எப்படித் தொடர்வது எனத் தெரியாமல் நொண்டியடிக்கும்.

அதனால் எழுகின்ற பொறாமையோ என்னவோ இந்தப் பெண்களே இப்படித்தான், யாரையாவது பார்த்தால் போதும் மணிக்கணக்காய் பேச ஆரம்பித்து விடுவார்கள் என ஆண்கள் அடிக்கடி அலுத்துக் கொள்கிறார்கள். இப்படி மனம் விட்டு உரையாடுவதும், நண்பர்களுடன் பேசி மகிழ்வதும் பெண்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது எனும் புதிய ஆராய்ச்சி ஒன்றை மிச்சிகன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வெளியிட்டுக் கதை பேசும் பெண்களின் மனதில் இன்னும் கொஞ்சம் இன்பத்துப்பால் வார்த்திருக்கிறார்கள்.

மனித உடலிலுள்ள புரோகெஸ்ட்ரோன் எனும் ஹார்மோன் மன அழுத்தத்தையும், கவலை, பதட்டம் போன்றவற்றையும் குறைக்கக்கூடிய தன்மை உடையது. மனம் விட்டுப் பேசி சிரித்து உரையாடும் பெண்களின் உடலில் இந்த ஹார்மோன் அதிக அளவில் இருப்பதாகவும், இதுவே பெண்களின் மன மகிழ்ச்சிக்கு உத்தரவாதம் தருவதாகவும் அவர்கள் மருத்துவ விளக்கமும் அளிக்கின்றனர். இத்தகைய உரையாடல்கள் வெறுமனே பொழுது போக்காக மட்டும் அமைந்து விடாமல் பெண்களுடைய நட்பு இறுக் கத்துக் கும், உதவும் மனப்பான்மைக்கும் கூட துணை செய்கிறதாம்.

ஆனால் இப்போதெல்லாம் பெரும்பாலும் தொலைக்காட்சித் தொடர்களில் மாலை நேரம் முழுவதும் செலவிடும் பெண்களுக்கு உரையாடலுக்கெனச் செலவழிக்கும் நேரம் குறைந்து கொண்டே வருகிறது என்பது கண்கூடு. அத்தகைய சற்றும் பயன்தராத தொலைக்காட்சித் தொடர்களை விலக்கி விட்டு ஆரோக்கியமான உரையாடலுக்குப் பெண்கள் திரும்ப இந்த ஆராய்ச்சி அழைப்பு விடுக்கிறது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சூத்திரதாரிகளை நீதியின் முன் நிறுத்துங்கள்

இந்த நாட்டில் பெரும்பான்மை சிங்கள மக்களால் அனுஷ்டிக்கப்படுவதான பௌத்த மதத்துக்கும் அந்த மதத்தின் வழியில் அந்த மக்களை வழி நடத்திச் செல்லுகின்ற பௌத்த துறவிகளுக்கும் அரசமைப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதனால் அரசின் சகல காரியங்களிலும் அந்த மதத்துக்கும், அந்த மதக் குருமார்களுக்கும் முதல் முக்கியத்துவம் உண்டு.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளின் போது அரசுத் தலைவர்கள் மட்டுமன்றி எதிர்த் தரப்பினரும் கூட பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்து ஆலோசனை மற்றும் ஆசிகளைப் பெற்றுக் கொள்வது வழக்கமாக இருந்து வருகின்றது.

ஆலோசனைகளைப் பெறுகின்ற தலைவர்கள் அவைகளின்படி நடக்கிறார்களோ? இல்லையோ, ஆலோசனைகளை வழங்குகிறவர்கள் நாட்டின் நலனையும், அமைதியையும் கெடுக்கும் விதத்தில் அவைகளை வழங்குவார்கள் என்று எவரும் நினைத்துப் பார்க்கவும் முடியாது– கூடாது. ஆனால் சில காவி உடை தரித்த துறவிகள் மூன்றாம் தர அரசியல்வாதிகள் போன்று பகிரங்க மேடைகளில் இன வெறுப்பு பேச்சுக்களை நிகழ்த்துவதும், அந்தப் பேச்சைக் கேட்கும் கூட்டத்தினர் வன்முறையில் இறங்குவதும் சமீப காலத்தில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள். அண்மையில் தென்னிலங்கையில் முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்களுக்கு இந்த மாதிரியான ஒரு பேச்சே காரணமாக இருந்துள்ளது என்பதும் அதனால் ஏராளமான சொத்தழிவும் சில உயிர் இழப்புகளும் சில மசூதிகளுக்கு சேதங்களும் ஏற்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டு. வன்முறைகள் வெடிக்கு முன்பே அவைகளைத் தவிர்க்க பொலிஸார் தவறிவிட்டார்கள். வெடித்த பிறகும் பொலிஸார் பேசாமடந்தையராய் இருந்துள்ளனர் என்பதும் குற்றச்சாட்டு. இது குறித்து மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி பொலிஸார் மீதும் பொதுபல சேனா என்ற பௌத்த அமைப்பின் மீதும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவிருப்பதாக அறிவித்துள்ளார்.

பொதுபல சேனா என்ற அமைப்பின் மீது சமீப காலமாகவே பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. அவைகளின் உச்சமே அளுத்கம, பேருவளை, தர்ஹா நகர் போன்ற இடங்களில் இடம்பெற்ற வன்முறைகள் என்கிறார்கள் முஸ்லிம் தலைவர்கள்.

குறித்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நிகழ்த்தியதாக ஒலிபரப்பப்பட்டிருந்த சொற்பொழிவு மிகுந்த ஆட்சேபனைக்குரியதாகக் காணப்பட்டுள்ளது.

இவ்வளவும் நடந்து முடிந்துள்ளபோதும் அந்தத் தேரர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. அரசு முன்கூட்டியே செயற்பட்டு நடவடிக்கை எடுக்காமை குறித்துப் பலரும் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இப்பொழுது அந்தச் சம்பவங்கள் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் விரிவான விசாரணை ஒன்றுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருப்பதாகவும் செய்திகள் உண்டு. இனவாதம் பேசுகிறவர்களை கைது செய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முப்படையினருக்கும் உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிகின்றது. அது மட்டுமல்ல சேதமாக்கப்பட்ட கட்டடங்களை மீளக்கட்டியெழுப்புவதில் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

இவையெல்லாம் சரிதான். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் மனதை, மன வடுக்களை இவை ஆற்றுவதாக இருக்க வேண்டும். அதுவே முக்கியம். இனியும் இவை நடைபெறாமல் உரிய நடவடிக்கைகளை அரசு திட்டமிட்ட முறையில் செயற்படுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நடந்து முடிந்த சம்பவங்களுக்கு சூத்திரதாரிகளாக இருந்தவர்களை நீதியின் முன் நிறுத்துவது முக்கியம். அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையே அவ்வாறு செயற்படத் துணியும் ஏனையவர்களுக்கும் எதிர் காலத்தில் படிப்பினையாக இருக்கும்.

# ஈழத் தமிழர்களை மீண்டும் கைகழுவி விடுமா இந்தியா?



சேரலாதன்

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்பதற்கு முன்னரே இந்தியா இலங்கைத் தமிழர்களுக்குச் செய்த பாவங்களுக்கு அவர் பிராயச்சித்தம் தேடிக் கொள்வாரென்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் எந்த அடிப்படையில் இந்த நம்பிக்கை ஏற்பட்டது என்பதற்கான வலுவான காரணம் எதுவும் தெரியவில்லை. இந்தியாவில் காங்கிரஸ் கட்சி அரசு தற்போது ஆட்சியில் இல்லை. அதற்குப் பதிலாக பி.ஜே.பி. அரசு ஆட்சியைப் பிடித்துள்ளது. இதுதான் அங்கு ஏற்பட்ட மாற்றம். இதையே இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பான அரசொன்று அங்கே ஆட்சியில் இருப்பதாக எண்ணுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஏனென்றால் பி.ஜே.பி. அரசு ஆட்சியைப் பிடித்திருப்பது இது முதல் தடவையல்ல. ஏற்கெனவே அது ஆட்சியில் இருந்திருக்கின்றது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பாக ஒரு போதுமே நடந்து கொண்டதில்லை. நரேந்திர மோடி அப்போது மாநில அளவிலான அரசியலிலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மத்தியில் அவர் கால் பதிக்கவில்லை. ஆனால் அவர் சார்ந்த கட்சி ஆட்சியில் அமர்ந்திருந்தது.

தற்போது கூட இலங்கை அரசையும் மீறி இலங்கைத் தமிழர்கள் மீது இந்திய மத்திய அரசு அக்கறை காட்டுவதற்கான வலுவான காரணங்கள் தென்படவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டின் ஆதரவுடன் மோடி ஆட்சி அமைக்காததால் அங்கிருந்தும் நெருக்கடி எதுவும் அவருக்கில்லை. இதனால் தமிழர்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. ஆனால் மோடி தொடர்பான ஏதோதொரு நம்பிக்கை இலங்கைத் தமிழர்களிடம் காணப்படுகின்றது.

கடந்த இறுதிப் போரின் போது பல ஆயிரம் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்டபோது அப்போதைய இந்திய மத்திய அரசு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. எதிர்க்கட்சியாக இயங்கிக் கொண்டிருந்த பி.ஜே.பியும் அமைதி காத்தது. ஓர் அனுதாப வார்த்தை கூட அந்தப் பக்கமிருந்து வரவில்லை. பி.ஜே.பி. ஓர் இந்து மதவாதக் கட்சி என்பதால் இலங்கையில் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழர்கள் கொல்லப்படுவதையும், இந்துக் கோயில்கள் அழிக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது எனக் கூறியோர் அப்போது இங்கு இருந்தனர். ஆனால் தற்போதைய வெளி

தற்போதைய வெளி விவகார அமைச்சரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சுஷ்மா ஸ்வராய் தலைமையில் நாடாளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று இங்கு வந்திருந்தும் ஒன்றுமே நடக்கவில்லை. இலங்கை ஆட்சியாளர்களுடன் விருந்து உண்டதுடன் அந்தக் குழுவின் கடமைகள் முடிந்து விட்டன. இனிமேலும் சுஷ்மா தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பாரென எதிர்பார்க்கவே முடியாது.

விவகார அமைச்சரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் நாடாளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று இங்கு வந்திருந்தும் ஒன்றுமே நடக்கவில்லை. இலங்கை ஆட்சியாளர்களுடன் விருந்து உண்டதுடன் அந்தக் குழுவின் கடமைகள் முடிந்து விட்டன. இனிமேலும் சுஷ்மா தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பாரென எதிர்பார்க்கவே முடியாது.

சிலவேளை இலங்கை மீதான விசாரணைகள் பூர்த்தியடைந்து தமிழ் மக்கள் தொடர்ந்து பாதிப்புக்களை எதிர்கொள்ளாத வகையில் அவர்கள் பிரிந்து செல்லலாம் என்றதொரு நிலைப்பாடு எழுமாயின் அதனை எதிர்க்கும் முதல் நாடாக இந்தியாவே இருக்கப் போகின்றது. ஏனென்றால் இலங்கைத் தமிழர்களுக்கு என தனியானதொரு நாடு உருவாகுவதை இந்தியா ஒரு போதுமே சகித்துக் கொள்ள மாட்டாது.

மேலும் இந்தியாவிலுள்ள சிறு பான்மை இனங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் அந்த நாடு ஒரு போதுமே அக்கறை காட்டுவதில்லை. மாறாக அடக்கி ஒடுக்குவதில்தான் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கு உதாரணமாக காஷ்மீரில் வாழும் முஸ்லிம் மக்களைக் கூறலாம். அந்த மாநிலத்தில் இந்தியப் படைகள் தினமும் புரியும் அத்துமீறல்களும், அட்டூழியங்களும் உலகறிந்த விடயங்களாகும். 1987 இல் இங்கு வந்த இந்தியப் படைகள் இரண்டு ஆண்டுகளே தங்கியிருந்த நிலையில் தமிழர்களுக்கு எதிராக நடத்திய வெறியாட்டம் மிகவும் கொடுமையானது. புலிகள் மீதான கோபத்தை அவ்வர்கள் மக்கள் மீதே காட்டினார்கள். தமிழக அரசியல்வாதிகள் சிலர் கூட தமிழர்கள் என்ற உணர்வு சிறிதும் இல்லாமல் இந்தியப் படையினரின் செயல்களைப் பாராட்டிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் தமிழர்களுடன் எந்தவிதமான தொடர்புகளையும் கொண்டிராத பி.ஜே.பி. ஆட்சியாளர்கள் பரிவு காட்டுவார்களென எதிர்பார்ப்பது பகல் கனவாகவே முடியும்.

இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்படும் மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் தாம் இந்திய மீனவர்கள் என்று கருதப்படாது தமிழக மீனவர்கள் என்று அழைக்கப்படுவதுடன் தம்மீது இந்திய மத்திய அரசு அக்கறை காட்டுவதில்லையெனவும் தினமும் பாதிக்கப்பட்டுவரும் அந்த மீனவர்கள் தெரிவிக்கின்றனர். தனது நாட்டைச் சேர்ந்தவர்களையே அலட்சியப்படுத்தும் இந்திய அரசு இலங்கைத் தமிழர்களைச் சீராட்டிப் பாதுகாக்குமென எண்ணுவது மடமையாகும்.

இந்தியாவின் மத்திய ராஜதந்திரத் துறையில் கேரளாவைச் சேர்ந்தவர்களுக்கு எப்போதுமே முதலிடம் உண்டு. இவர்கள் ஆலோசகர்களாகவும், கொள்கை வகுப்பாளர்களாகவும் அங்கு பணிபுரிகின்றனர். சீன- இந்தியப் போரின் போது இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக இருந்த வி.கே.கிருஷ்ண மேனனின் காலத்திலிருந்து இந்த நிலை தொடர்ந்த வண்ணமேயுள்ளது. காங்கிரஸ் ஆட்சியின் போது எம்.கே.நாராயணன் போன்றவர்களின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் இலங்கைத் தமிழர்கள் இன்னல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. கேரளாவைச் சேர்ந்தவர்கள் எப்போதுமே தமிழர்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இது மத்திய அரசின் கொள்கைகளிலும் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் மீதான மோடி அரசின் நடவடிக்கைகளை அளவீடு செய்வதற்கான காலம் இன்னமும் கனியாத போதிலும் அதனை முன்னரே எடைபோட்டுக் கொள்ள முடியும்.

ஆகவே புதிய இந்திய மத்திய அரசின் மீது முழு அளவில் நம்பிக்கை வைப்பது இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்றதல்ல. ஏற்கெனவே பல தடவைகள் ஏமாற்றங்களை எதிர்கொண்ட அவர்கள் எதிலும் நிதானமாகச் சிந்தித்து முடிவெடுப்பது சாலப் பொருத்தமான ஒன்றாகும்.

அடுத்துவரும் மாதங்களில் மோடியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்குமென எதிர்பார்க்கலாம்.

தற்போது மத்திய அரசியலுக்குப் புதியவரான அவர் நிலைமைகளை ஆய்வு செய்து வருகின்றார். இதில் இலங்கைத் தமிழர்களின் விடயமும் அடங்கியிருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். காலம் வரும்போது எல்லாமே வெளிச்சத்துக்கு வந்துவிடும்.



பேரறிவாளனின் ஒப்புதல் வாக்குமூலம் நான்கு பக்கங்களில் தமிழில் பதிவு செய்யப்பட்டு ஆங்கில மொழி பெயர்ப்புக்குக் கொடுக்கப் பட்டதாகவும், ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்புதல் வாக்கு மூலமர்க இடைவெளி விடாமல் மொழி பெயர்த்து விட்டார்கள் என்றும் தியாக ராஜன் கூறியிருக்கிறார். வழக் நடைபெறும்போது தன்னால் எந்த உண்மையையும் வெளிப்படுத்த முடியாமல் இருந்ததாகவும், தன் மனச்சாட் தன்னைத் தினம் தினம் கொல்வதாகவும் வருத் தப்பட்டிருக்கிறார் தியாகர்ராஜன்.

# அன்றைய இதிகாசப் பாரதமும் இன்றைய பரிகாசப் பாரதமும்

கலாநிதி அகளங்கன்

மகாபாரதப் போரின் பதினைந்தாம் நாள் போர் கௌரவர்களின் சேனாதிபதி துரோணாச்சாரியார். பாண்டவர்கள் எனப்படும் தருமர், வீமன் முதலானவர்களுக்கும், கௌரவர்கள் எனப்படும் துரியோதனன், துச்சாதனன் முதலானவர்களுக்கும் வில்வித்தை முதலான வித்தைகள் கற்றுக் கொடுத்த குரு துரோணாச்சாரியார்.

பிதாமகர் பீஷ்மர் பத்தாம் நாள் போரில் அருச்சுனனின் அம்புகளால் வீழ்த்தப்பட்ட பின் துரோணாச்சாரியார் கௌரவ சேனாதிபதி ஆக்கப்பட்டார். அவரை வெல்லக்கூடிய எவரும் அந்தப் போர்க்களத்தில் இல்லை.

அவரைக் கொல்லாமல் பாரதப் போரை வெல்ல முடியாதென்பது உறுதியாகிவிட்டது. அவரைக் கொல்ல அவரிடமே ஆலோசனை கேட்டனர். பாண்டவர்கள் அவரோ தான் ஆயுதம் வைத்திருக்கும் போது தன்னை எவராலும் வெல்லவோ, கொல்லவோ முடியாது என்று கூறினார்.

அவரை எப்படி ஆயுதம் இல்லாதவராக - நிராயுதராக ஆக்குவது? பதின்நான்காம் நாள் இரவு பாசறையில் பாண்டவர்களுக்கு ஒரு ஆலோசனை கூறினார் கிருஷ்ணர்.

"துரோணாச்சாரியாரின் கையில் ஆயுதம் இல்லாமல் செய்ய வேண்டும். அவர் ஆயுதம் இல்லாதிருக்கும்போது அவரைக் கொல்ல வேண்டும்"

"போர்க்களத்தில் அவர் ஆயுதம் இல்லாமல் இருக்கமாட்டார். அவரை நிராயுதராக ஆக்கவும் முடியாது. அவர் போர் செய்யாத போது அவரைக் கொல்வது மிகவும் கோழைத்தனமானது. பழிப்புக்கு இடமானது" என்று யாவரும் அபிப்பிராயம் கூறினர்.

"வேறு வழியில்லை. துரோணாச்சாரியாரை நிராயுத பாணியாக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. அவரது மகனும் பெரு வீரனுமான அசுவத்தாமாவைக் கொன்றால் அவர் புத்திர சோகத்தில் செயலற்றுப் போவார். ஆயுதங்களைப் போட்டு விடுவார். அப்போது அவரைக் கொல்லலாம்" என்று கிருஷ்ணர் ஆலோசனை கூறினார்.

"ஆனால் அசுவத்தாமாவை யார் கொல்வது? எப்படிக் கொல்வது? அவன் அருச்சுனன், கர்ணன் முதலானவர்களுக்கு நிகரான வீரன். அத்தோடு அவன் சாகா வரம் பெற்றவன். அதனால் அது சாத்தியமில்லை" என்றனர் பாண்டவர்கள். "அப்படியென்றால் பொய்யாக, அசுவத்தாமா கொல்லப்பட்டதாக ஒரு வதந்தியைப் பரப்பி விடுவோம்" என்றார் கிருஷ்ணர்.

"வதந்தியைப் பரப்புவதோ, அல்லது ஆயுதமற்ற நிலையில் துரோணாச்சாரியாரைக் கொல்வதோ, தவறான காரியங்கள், பழி, பாவங்களுக்கு அஞ்சாமல், யுத்த தர்மத்தை மீறி, நீதியைக் கைவிட்டு வெற்றி பெறுவது சத்திரிய தர்மமாகாது" என்று தருமர் அறிவுரை வழங்கினார். இருப்பினும் கிருஷ்ணரினதும் ஏனையவர்களினதும் வற்புறுத்தலுக்கு இணங்கினார் தருமர். ஆனால் வதந்தி பரப்புவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

அத்தோடு அசுவத்தாமா கொல்லப்பட்டான் என்பதை துரோணாச்சாரியார் நம்பமாட்டார். அவரை நம்பச் செய்ய என்ன வழி? என்று கேட்டனர் ஏனைய பாண்டவர்கள்.

"அசுவத்தாமா கொல்லப்பட்டான் என்ற வதந்தி துரோணாச் சாரியாரின் காதுகளுக்கு எட்டும் போது தருமர் அவரருகில் நின்று போர் செய்ய வேண்டும். அவர் தருமரிடம் அது உண்மையா, என்று கேட்பார். அது உண்மை என்று தருமர் பொய் சொல்ல வேண்டும்" கிருஷ்ணரின் இந்த யோசனை தருமருக்கு வேம்பாய்க் கசந்தது "பொய் சொல்லி பாவத்தைத் தேடி வெற்றி பெற்று இராச்சிய பரிபாலனம் செய்யமாட்டேன்" என்று பிடிவாதமாக மறுத்தார் தருமர்.

தனது குருவின் முன்னிலையில் அவரிடமே மிகக் கொடிய அந்தப் பொய்யைச் சொல்ல தருமரின் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. அதிலும் "தன்னை உண்மையே பேசுபவன் என்று நம்பி உண்மை அறியக் கேட்கும் தன் குருநாதருக்குப் பொய் சொல்வதைப் போலக் கொடும் பாவம் வேறில்லை" என்று மறுத்தார் தருமர்.

இதற்கு மாற்றுவழியொன்றைக் கூறினான் வீமன். "அசுவத்தாமா என்ற பெயரில் ஒரு யானை கௌரவர் பக்கத்தில் நின்று கொண்டு எமது சேனைகளுக்குப் பெரும் அழிவைச் செய்கிறது. நான் எப்படியாவது அதனைக் கொன்று விட்டு அசுவத்தாமாவைக் கொன்று விட்டேன் என்று வெற்றி முழக்கமிடுகிறேன். அது பரவும் போது துரோணாச்சாரியார் நம்பி விடுவார்" என்றான். கிருஷ்ணர் அதற்கு ஒப்புக் கொண்டு "நாளை எப்படியாவது நீ அசுவத்தாமா என்ற யானையைக் கொன்று விட்டு செய்தியைப் பரப்பிவிடு. துரோணாச்சாரியாரின் அருகில் நின்று போர் செய்யும் தருமரிடம், அசுவத்தாமா கொல்லப்பட்டது உண்மையா? என்று துரோணாச் சாரியார் கேட்டால் உண்மை என்று தருமர் கூறினால் போதும்" என்றார் கிருஷ்ணர்.

தருமர் மறுத்தார். இருப்பினும் இறுதியாக வேறு வழியின்றி ஒரு நிபந்தனையோடு ஒப்புக்கொண்டார். "அசுவத்தாமா கொல்லப்பட்டது உண்மையா" என்று துரோணாச்சாரியார் கேட்டால் "அசுவத்தாமா கொல்லப்பட்டது உண்மையே. ஆனால், அது ஒரு யானை" என்று சொல்வேன் என்றார். தருமர் இந்த அளவுக்கு இறங்கி வந்ததே பெரிய காரியம். நினைத்துப் பார்க்க முடியாத காரியம் என்று யாவரும் சந்தோசப்பட்டனர்.

உடனே கிருஷ்ணர், "அசுவத்தாமா இறந்தது உண்மையே என்பதை உரத்தும், ஆனால் அது ஒரு யானை என்பதை தாழ்த்தியும் அதாவது சத்தத்தைக் குறைத்தும் சொல்ல வேண்டும்" என்றார். தருமருக்கு தான் சொல்லப் போவது பொய் என்று நன்றாகத் தெரிந்திருந்தும் ஒப்புக் கொண்டார். அரசியல் அப்படிப்பட்டது.

அதேபோல பதினைந்தாம் நாள் போரின்போது வீமன் அசுவத்தாமா என்ற யானையைத் தன் கதாயுதத்தால் அடித்துக் கொன்று விட்டு "அசுவத்தாமாவைக் கொன்று விட்டேன். அசுவத்தாமாவைக் கொன்று விட்டேன்" என்று வெற்றி முழக்கமிட்டான். வதந்தியைப் பரப்பினான். திட்டமிட்டபடி தருமர் துரோணாச்சாரியாரின் அருகில் நின்று போர் செய்து கொண்டிருந்தார். துரோணாச்சாரியாரின் செவிகளுக்கு அந்தச் செய்தி எட்டியது. அவரால் நம்ப முடியவில்லை. தன் மகன் அசுவத்தாமாவை வீமன் வெற்றிகொள்ள முடியாது. அத்தோடு அவனை யாரும் கொல்லவும் முடியாது. இது என்ன விபரீதம் என்று கலங்கினார். உண்மையை அறிவதற்காக, பொய்யே பேசாத தன் நம்பிக்கைக்குரிய சீடனான தருமரிடம் கேட்டார். "என் மகன் அசுவத்தாமா கொல்லப்பட்டது உண்மையா" என்று.

தருமரும் திட்டமிட்டிருந்தபடியே "அசுவத்தாமா கொல்லப்பட்டது உண்மையே" என்று குரலை உயர்த்தியும் "ஆனால் அது ஒரு யானை" என்று குரலைத் தாழ்த்தியும் கூறி முடித்தார்.

கிருஷ்ணருக்கு ஒரு சந்தேகம் இருந்தது. தருமர் சிலவேளை உண்மையைக் கூறிவிடுவாரோ என்று. அதனால் தருமர் குரலைத் தாழ்த்திக் கூறிய பிற்பகுதி, துரோணாச்சாரியாருக்குக் கேட்காத படி தனது சங்கை ஊதி வெற்றி முழக்கமிட்டார்.

தன் மகன் கொல்லப்பட்டதை சத்தியம் தவறாதிருந்த தருமரின் மூலம் முழுமையாக நம்பிக் கொண்ட துரோணாச்சாரியார், தனது ஆயுதங்களைத் தேர்த்தட்டில் போட்டுவிட்டு, நிராயுத பாணியாக அதாவது கையில் ஆயுதம் எதுவும் இல்லாதவராக செயலற்றுத் சிகைத்துப் போய் தியானத்தில் அமர்ந்தார்.

அவரைக் கொல்வதற்கென்றே பிறந்திருந்தவனும், பாண்டவ சேனாதிபதியும், பாஞ்சாலியின் சகோதரனும், துருபதனின் குமாரனுமாகிய திட்டத்துய்மனன் உருவிய வாளோடு ஓடிப் பாய்ந்து தேரில் ஏறி ஒரே வீச்சில் துரோணாச்சாரியாரின் கழுத்தை வெட்டித் தலையை வீழ்த்தினான். இது அன்றைய இதிகாசமாகிய பாரதத்தில் இடம்பெற்ற காட்சி. "அசுவத்தாமா அதகா, குஞ்சரகா" என்று தருமர் கூறியதாக வடமொழியில் இதனைக் கூறுகிறார்கள்.

தர்மராஜனின் தாழ்ந்த குரல் அல்லது மௌனம் அவரது குரு துரோணருக்கு மரணத்தைக் கொடுத்தது. அவருக்குத் தீராத பழியைக் கொடுத்தது. சத்தியத்துக்கு அரிச்சந்திரன் உதாரண புருசனே தவிர, தருமராஜன் என்ற பெயர் கொண்டிருந்தும் தருமர் உதாரணபுருசர் அல்லர்.

**தியாகராஜனின் மௌனம்**

1991 மே 21, தமிழ்நாட்டு ஸ்ரீ பெரும்புதூரில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் முன்னாள் இந்தியப் பிரதமரும், முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பேரனும், முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் மைந்தனுமாகிய ராஜீவ் காந்தி தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



கொலைச் சூத்திரதாரிகளை உடனடியாகத் தேடிக் கண்டு பிடிக்கும்படி புலனாய்வுத் துறையினர் நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலனாய்வுத் துறையினர் பலரைக் கைது செய்தனர். அவர்களை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்காக இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் திறமை வாய்ந்த சி.பி.ஐ. அதிகாரிகளை அழைத்து அந்தப் பணியில் இணைத்துக் கொண்டனர்.

ஒரு பேராசிரியராகப் பணியாற்றி, பின் வருமான வரித்துறையில் பணியாற்றி பின் சி.பி.ஐ. (C.B.I.) இல் உயர் பதவி வகித்து ஓய்வு பெற்ற எஸ்.பி.தியாகராஜனை கேரள மாநிலத்துக்கு கொச்சினில் இருந்து வரவழைத்து இணைத்துக் கொண்டனர். சிறப்புப் புலனாய்வுக் குழுவில் தியாகராஜன் இணைக்கப்பட்டதற்கு அவர் நன்றாகத் தமிழ் தெரிந்தவர் என்பது விசேட தகுதியாகக் கணிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதுதான் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கிய பணி. பதினேழு(17) பேரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் பெற்றுப் பதிவு செய்தார். நளினி மட்டும் ஆங்கிலத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார். முருகன் உள்ளிட்ட ஏனையோர் தமிழில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர்.

பேரறிவாளனின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ததைப் பற்றி எஸ்.பி.தியாகராஜன் அண் மையில் ஓர் உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"உயிர் வலி" என்ற பெயரிலான நாற்பது நிமிட ஆவணப் படம் ஒன்றை, மரண தண்டனைக் கைதிகள் பற்றியதாகத் தயாரித்தபோது, அவர்களிடம் மனம் திறந்து பேசிய தியாகராஜன் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

தான் பேரறிவாளனிடம் வாக்குமூலம் பெறும் போது அவர் "சிவராசன் கேட்டுக் கொண்டபடி பற்றரிகளை நான் வாங்கிக் கொடுத்தது உண்மைதான். ஆனால் அது ராஜீவ் காந்தியைக் கொலை செய்யத்தான் என்பது எனக்குத் தெரியாது" என்று கூறினார் என்றும் அதனை அப்படியே பதிவு செய்தால் அது ஒப்புதல் வாக்கு மூலமாக ஆகாது என்பதால்தான் பிற்பகுதியைப் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

அதாவது பேரறிவாளனின் வாக்குமூலத்தை ஒப்புதல் வாக்கு மூலமாகப் பதிவு செய்யும்போது "சிவராசன் கேட்டுக் கொண்டபடி பற்றரிகளை நான் வாங்கிக் கொடுத்தது உண்மைதான்" எனப் பதிவு செய்து மீதியைப் பதிவு செய்யாமல் சிறிய இடைவெளியை விட்டு விட்டதாக தியாகராஜன் கூறியிருக்கிறார்.

பேரறிவாளனின் ஒப்புதல் வாக்குமூலம் நான்கு பக்கங்களில் தமிழில் பதிவு செய்யப்பட்டு ஆங்கில மொழி பெயர்ப்புக்குக் கொடுக்கப்பட்டதாகவும், ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்புதல் வாக்குமூலமாக இடைவெளி விடாமல் மொழி பெயர்த்துவிட்டார்கள் என்றும் தியாகராஜன் கூறியிருக்கிறார். வழக்கு நடைபெறும்போது தன்னால் எந்த உண்மையையும் வெளிப்படுத்த முடியாமல் இருந்ததாகவும், தன் மனச்சாட்சி தன்னைத் தினம் தினம் கொல்வதர்கவும் வருத்தப்பட்டிருக்கிறார் தியாகராஜன்.

மரண தண்டனைக்குக் காத்திருக்கும் பேரறிவாளனின் நிலை என்னவாகும்? தருமராஜனின் மௌனத்தால் துரோணாச்சாரியாரின் கொலை, தியாகராஜனின் மௌனத்தால் பேரறிவாளனின் கொலையா? இந்திய நாட்டுக்கு பாரத நாடு என்றும் ஒரு பெயர் உண்டு. பரதன் என்ற மன்னனால் நீதிநெறி தவறாத ஆட்சி செய்யப்பட்டதால் பரத கண்டம் என்று ஒரு பெயர் உண்டு.

இந்திய நாட்டுக்கு பாரத நாடு என்ற பெயர் வரக் காரணம் பாரத் இதிகாசம்தான் என்கிறார்கள். பரத கண்டம் என்பதைவிட பாரத நாடு என்பதே இந்தியாவுக்குப் பெரிதும் பொருந்தும். ஏனெனில் பாரத இதிகாச சம்பவங்கள் அங்கு இன்றும் தொடர்கின்றன.

பாவம் பேரறிவாளன். துரோணாச்சாரியாருக்கு ஒரு தர்மராஜன். பேரறிவாளனுக்கு ஒரு தியர்கராஜன். இப்படி எத்தனை அதிகாரிகளின் அநியாயத்தினால் எத்தனை பேர் அழிந்து போனார்களோ....?

## இந்தியர்களை மீட்பதற்கு கப்பல்கள் தயார்

புதுடில்லி, ஜூன் 30

ஈராக்கில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்பதற்காக அந் நாட்டுக்கு அண்மித்த கடற் பகுதிகளில், இந்திய கடற்படை கப்பல்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளன.

இந்திய கடற்படையைச் சேர்ந்த ஐ.என்.எஸ். மைசூர் என்ற போர்க் கப்பல் பெர்சியன் வளைகுடாவில் நிறுத்தப்பட்டுள்ளது. ஈராக்கில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக, அந்த நாட்டில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக சொந்த நாடு திரும்புவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே சவூதி அரேபியாவுக்கு அண்மையில் உள்ள கடற்பகுதியில் ஐ.என்.எஸ். தர்கஷ் என்ற போர்க் கப்பலும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்திய விமானப் படையின் சி-17 மற்றும் சி-130 ஜே ஆகிய விமானங்களும் தயார் நிலையில் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இந்தியாவைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகின்றனர். அதேவேளை, ஈராக்கில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றுவதற்காகச் சென்ற இந்தியர்களில் 200க்கும் மேற்பட்டோர் அந்தந்த நிறுவன வளாகங்களிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## அந்தோனியின் கருத்து விவாதிக்கப்பட வேண்டும்

### காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஷகீல் அகமது கோரிக்கை



ஏ.கே. அந்தோனி

புதுடில்லி, ஜூன் 30

சிறுபான்மையினர் சார்புடைய கட்சியாக காங்கிரஸ், சமூகத்தில் சிலரால் பார்க்கப்படுகின்றது என்று மூத்த தலைவர் ஏ.கே. அந்தோனி தெரிவித்த கருத்து குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஷகீல் அகமது தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

"கட்சியில் உள்ள மூத்த தலைவர்களில் ஏ.கே. அந்தோனியும் ஒருவராவார். கட்சி பற்றிய அவரது கருத்து மற்றும் புரிந்துணர்வு குறித்து விவாதிக்கப்பட வேண்டும்'- என்று தெரிவித்துள்ளார்.

மற்றொரு காங்கிரஸ் மூத்த தலைவர் ரஷீத் ஆல்வி இது குறித்துக் கூறும்போது,

"அந்தோனியின் கருத்துகள் குறித்து ஆராய விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி, சிறுபான்மையினரின் நலனுக்காக பாடுபட உறுதி பூண்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

அதேசமயம், ஏ.கே.அந்தோனியின் கருத்து குறித்து, காங்கிரஸ் கட்சியிடம் இருந்து அதிகார பூர்வமாக எந்தப் பதிலும் தெரிவிக்கப்படவில்லை. (ற)



தமிகழத்தின் சென்னையில் தொடர்மாடிக் கட்டடம் நேற்றுமுன்தினம் இடிந்து வீழ்ந்ததில் பெண் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர். கட்டட இடிபாடுகளில் 40 தொடக்கம் 50 பேர் வரை சிக்கியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், குறித்த கட்டடத்தின் பொறியியலாளர் இருவரையும் கைது செய்துள்ளனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று பெண் ஒருவர் மீட்புப் பணியாளர்களால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். (ற)

## ஆட்சிக்கு பொருத்தமற்றவர் ராகுல்

### காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கூறுகின்றார்

கோவா, ஜூன் 30

ஆட்சி நடத்துவதற்கு ராகுல் காந்தி பொருத்தமற்றவர் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங்.

கோவாவுக்கு இருநாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள திக்விஜய் சிங், அங்குள்ள தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ராகுல் காந்தி இயற்கையாகவே ஆட்சி நடத்துவதற்கு பொருத்தமானவர் அல்ல. அநீதிக்கு எதிராக போராடும் சுபாவம் கொண்டவர் அவர்.

ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் முக்கியமான எதிர்க்கட்சி தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி என்பது



அத்தியாவசியமானது. காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி எதிர்க் கட்சித் தலைவராக பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## விண்ணுக்கு செலுத்தப்படுகிறது பி.எஸ்.எல்.வி.சி 23

புதுடில்லி, ஜூன் 30

பிரான்ஸின் ஸ்பாட் 7, கனடாவின் இரண்டு செயற்கைகோள் உட்பட 5 செயற்கைகோள்களை தாங்கிச்செல்லும் பி.எஸ்.எல்.வி.சி 23 ரொக்கெட், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா ஏவு தளத்தில் இருந்து இன்று விண்ணில் ஏவப்பட உள்ளது. இந்தத் தகவலை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. அதற்கான முன்னேற்பாடுகள் முடிந்துள்ளனஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## தீர விசாரிக்காது தொண்டர் மீது நடவடிக்கை எடுக்காது தி.மு.க.

### அந்தக் கட்சியின் தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஜூன் 30

உண்மையை புரிந்துகொள்ளாமல் தீரவிசாரிக்காமல் எந்த ஒரு தொண்டன் மீதும் தி.மு.க. நடவடிக்கை எடுத்துவிடாது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சி தலைவர் மு.கருணாநிதி.

இது தொடர்பாக தொண்டர்களுக்கு அவர் எழுதி உள்ள கடிதத்தில்-

"தி.மு.கவுக்கு எதிராக பல இதழ்கள் கட்டுரைகள் எழுதி வருகின்றன. தோல்விகளில் இருந்து பல முறை தி.மு.க.



வீறு கொண்டு எழுந்திருக்கின்றது. வெற்றி தோல்விகள் இயக்கத்தின் ஆயுளை நிர்ணயிக்காது.

33 பேர் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் பலர் ஓடி வந்து விளக்கம் அளித்திருக்கின்றனர். தீர விசாரிக்காமல் யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. அதே நேரத்தில் முறைப்பாடுகள் உண்மையாக இருக்குமானால் நடவடிக்கை எடுக்கப்பட்டே தீரும். தி.மு.கவுக்கு கட்டுபாடுதான் மிக முக்கியம். கருணாநிதி அதைக் காப்பதற்கு தொண்டர்கள் துணை நிற்க வேண்டும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மண்டையோட்டைத் தொலைத்ததால் மருத்துவமனை கொடுக்கிறது நட்டஈடு

கொல்கத்தா, ஜூன் 30

கொல்கத்தாவில் அறுவைச் சிகிச்சை செய்தவரின் மண்டை ஓட்டை மருத்துவமனை தொலைத்ததால், அவருக்கு நட்ட ஈடு வழங்கவுள்ளது.

கொல்கத்தாவில் லேக் கார்டன் பகுதியில் வசித்து வரும் அர்னாப் தத்தா என்ற 23 வயது இளைஞர் கடந்த ஆண்டு தனது குடியிருப்புப் கட்டடத்தில் இருந்து கீழே குதித்து தற்கொலைக்கு முயன்றதில், அவரது தலையில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கொல்கத்தாவில் உள்ள ரூபி பொது மருத்துவமனையில் அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. அப்போது அவரது மண்டையோட்டின் ஒரு பகுதி நீக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றதால் மண்டையோட்டுப் பகுதி மீண்டும் பொருத்தப்படாமலேயே இருந்தது.

இந்த நிலையில் அவர் பூரண குணம் அடைந்த பிறகு சில மாதங்கள் கழித்து மீண்டும் மருத்துவமனைக்கு வந்த அந்த மண்டையோட்டுப் பகுதியை பொருத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

ஆனால் அவர் மீண்டும் அந்த சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வரவில்லை. ஒரு ஆண்டுகள் கழிந்த நிலையில், கடந்த மாதம் அர்னாப் குடும்பத்தினர் மருத்துவமனைக்கு வந்து மண்டையோட்டுப் பகுதியைக் கேட்டுள்ளனர். அப்போது மண்டையோடு வைக்கப்பட்ட இடத்தில் அதனைக் காணவில்லை. இதனால் மருத்துவமனை அதிகாரிகளும், உறவினர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

அர்னாப் தற்போது இயல்பான வாழ்க்கை வாழ்வதாலும், மேல்புறத் தோல் மற்றும் முடி வளர்ந்த பிறகு பலரும் மண்டையோடு பகுதியை பொருத்திக் கொள்வதில்லை என்றும், இதனால் எந்த பாதிப்பும் இல்லை என்று கொல்கத்தா அப்போலோ மருத்துவமனை மருத்துவர் கூறியுள்ளார்.

மண்டையோடு காணாமல் போனதற்காக நட்டஈடு தருவதாக ரூபி மருத்துவமனை அர்னாப்பின் குடும்பத்தாரிடம் தெரிவித்துள்ளது. (ற)

## இந்தியாவுடையது அருணாச்சலம்

### அந்த நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 30

அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று வெளியுறவு துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. அருணாச்சல பிரதேசத்தில் சீனா அத்து மீறுவது அண்மைக்காலமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சீனா தனது அதிகாரபூர்வ வரைபடத்தை நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில் அருணாச்சல பிரதேசம் சீனாவின் ஒரு பகுதி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது, சீனாவின் தெற்கு திபெத்தின் ஒரு பகுதியே அருணாச்சல பிரதேசம் என்று அதில் குறிக்கப்பட்டுள்ளது. இது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


இந்நிலையில், சீனாவின் அத்துமீறல் பற்றி விளக்கம் அளித்த, இந்திய வெளியுறவு செய்தி தொடர்பாளர் சையது அக்பருதீன், "அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. சீனாவுக்குச் சொந்தமானது அல்ல. பல முறை சீனா அதிகாரிகளிடம் இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. அடிப்படை நிலையில் ஒரு போதும் மாற்றம் ஏற்படப் போவது இல்லை''- என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த அருணாச்சல பிரதேச முதல்வர் நபாம் துகி,

"அருணாச்சல பிரதேசத்தை சொந்தம் கொண்டாடும் சீனாவின் செயலுக்கு மாநில அரசு பலத்த எதிர்ப்பையும், கடும் கண்டனத்தையும் தெரிவிக்கிறது. மத்திய அரசு சீன அரசுடன் பேச்சு நடத்தி இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் கூறும்போது;

"படம் வரைந்து காட்டுவது எல்லாம் உண்மைத்தன்மையை மாற்றிவிடாது. அருணாசல பிரதேசம் முழுமையான, விட்டுக்கொடுக்க முடியாத இந்தியாவின் பகுதி. இதனை சீன உயர்மட்ட அதிகாரிகள் உட்பட அதிகாரிகளுக்கு பல நிகழ்வுகளில் கூறியிருக்கிறோம். இதுபற்றி சீனா சென்றுள்ள துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் இந்த பிரச்சினையை எழுப்புவார்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி.சி-23 ரொக்கெட் மூலம் இன்று 5 செயற்கைகோள்கள் அனுப்பப்படவுள்ளன. அதனை பார்வையிடுவதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று டெல்லியில் இருந்து சிறப்பு விமானத்தில் சென்னை வந்தார். சென்னை வந்த பிரதமர் மோடியை விமான நிலையத்தில் கவர்னர் ரோசையா, முதல்அமைச்சர் ஜெயலலிதா ஆகியோர் வரவேற்றனர்.

# கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்படுவர்

## இன்னும் ஒருவாரத்தில் நடக்கும் என்கிறார் ஈராக் பிரதமர்

பக்தாத், ஜூன் 30
தாக்குதல் நடத்திவரும் கிளர்ச்சியாளர்கள் இன்னமும் ஒரு வாரத்துக்குள் ஒடுக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார் ஈராக்கின் பிரதமர் நூரி அல் மாலிகி.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"வான்வழித் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதன் மூலம் கிளர்ச்சியாளர்கள் முன்னேறுவதைத் தடுக்க முடியும். ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளின் ஜெட் விமானங்கள் இராணுவத்தினரின் வலிமையை அதிகரிக்கும். அமெரிக்க ஜெட் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் காரணமாக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போர் விமானங்களை வாங்க முடியாதுள்ளது. அதனால் பெலாரஸ் மற்றும் ரஷ்யாவிடம் இருந்து ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் விமானங்களை ஈராக் வாங்கியுள்ளது. அந்த விமானங்கள் வரும் இரண்டொரு நாள்களில் கொண்டுவரப்படும். அதன் பின்னர் இராணுவத்தின் தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டு கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்படுவார்கள்"-என்று தெரிவித்துள்ளார். (ற)



வான்வழித் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதன் மூலம் கிளர்ச்சியாளர்கள் முன்னேறுவதைத் தடுக்க முடியும். ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளின் ஜெட் விமானங்கள் இராணுவத்தினரின் வலிமையை அதிகரிக்கும்.

# உக்ரைன் பிரச்சினைக்கு அமெரிக்காவே காரணம்


## குற்றஞ்சாட்டுகின்றது ரஷ்யா

மொஸ்கோ, ஜூன் 30
அமெரிக்க அரசே உக்ரைனில் பிரச்சினையைத் தூண்டிவிடுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ்.
மொஸ்கோவில் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"உக்ரைன் தலைவர்களை மோதலில் ஈடுபடச் செய்யும் முயற்சியில் அமெரிக்க அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். உக்ரைன் விவகாரம் விரைவில் முடிவுக்கு வருவது ரஷ்யா மற்றும் ஐரோப்பிய யூனியனையே சார்ந்தது."- என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை உக்ரைன் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியன வர்த்தக மற்றும் பொருளாதார உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டன.
அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய யூனியனின் தலைவர்கள்,
"ரஷ்யாவும், கிளர்ச்சியாளர்களும் வன்முறையை கைவிட வேண்டும், உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோவின் அமைதித் திட்டப்படி போர்நிறுத்தத்தை மேற்கொள்ள ஒப்புக்கொள்ள வேண்டும்"- என்று வலியுறுத்தியுள்ளனர்.

### உக்ரைன் கோரிக்கை

இந்தநிலையில் உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுடனான போர் நிறுத்தத்தை இன்று வரை நீட்டிப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ அறிவித்துள்ளார். "இந்த போர்நிறுத்த ஒப்பந்த நீட்டிப்பை பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொள்ள வேண்டும்"- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# கன்னத்தில் துளையிட்டு....



ஜேர்மனியில் கலைஞர் ஒருவர் தனது கன்னத்தில் துளையிட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். அங்குள்ள குசாபெர்க் நகரத்தைச் சேர்ந்தவர் 23 வயதுடைய ஜோயல் மிக்லர். இவர் தனது சிறு வயதிலிருந்தே உடலில் ஏதாவது மாற்றங்கள் செய்வதில் ஆர்வம் கொண்டவர். தற்போது இவர் தனது உடம்பில் 27 துளைகளும், 6 பச்சைகளும் குத்திக் கொண்டுள்ளார். காது குத்துதலில் ஆரம்பித்த இந்த மோகம் தற்போது 4 ஆயிரம் பிராங்க் செலவிடும் வரை வளர்ந்துள்ளது. மிக்லர் தனது கன்னத்தில் 36 மில்லிமீற்றர் அளவு துளை ஒன்று போட்டுக் கொண்டுள்ளார். அதை எதிர்காலத்தில் 40 மில்லி மீற்றராக அதிகரிக்க உள்ளதாகவும் கூறுகின்றார் அவர். இதுகுறித்து அவர் கூறும்போது; "இது போன்ற விடயங்கள் தனது அன்றாட வாழ்க்கையை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. எனது தாயும் இதற்கு ஒப்புக் கொண்டுள்ளார்"- என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## காதல் ஜோடி கழுத்தறுத்து கொலை

*பாகிஸ்தானில் பயங்கரம்*

இஸ்லாமாபாத், ஜூன் 30
காதல் திருமணம் செய்த இளம் ஜோடியை அவர்களின் குடும்பத்தினர் கட்டிப்போட்டு, கழுத்தை கூரிய ஆயுதத்தால் அறுத்துக் கொலை செய்துள்ளனர். இந்தக் கொடூரச் சம்பவம் பாகிஸ்தானில் கிழக்கு பஞ்சாபின் சத்ரா கிராமத்தில் நடந்துள்ளது.
அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 17 வயதான இளம் பெண்ணும் 31 வயதான ஆணும் கடந்த ஜூன் 18ஆம் திகதி குடும்பத்தினரின் அனுமதி இல்லாமல் திருமணம் செய்துகொண்டனர்.
திருமணத்திற்கு பின் அந்தப் பெண்ணின் தாய், தந்தையர் இருவரும் வீட்டுக்கு வந்து தங்களது வாழ்த்துக்களை பெற்றுக்கொள்ளுமாறு கூறியுள்ளனர். அவர்களின் பேச்சை நம்பி வீட்டுக்கு வந்தவுடன் காதல் திருமண ஜோடியை கயிற்றால் கட்டியதுடன், அப்பெண்ணின் தந்தை இருவரது கழுத்தையும் கூரிய ஆயுதத்தினால் அறுத்துக் கொலை செய்துள்ளார்.
இது குறித்த தகவல் கிடைத்தவுடன் விரைந்து வந்த பொலிஸார் அப்பெண்ணின் பெற்றோரை கைது செய்தனர்.
பொலிஸாரின் விசாரணையின் போது "பழங்குடி வகுப்பை சேர்ந்தவரை மகள் திருமணம் செய்து கொண்டதால் தங்களது குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டது என்றும், அதனாலேயே கொலை செய்தனர்" என்றும் தெரிவித்துள்ளனர்.
தற்போது இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ற)

## பாகிஸ்தானுக்கான விமான சேவைகள் இடைநிறுத்தம்

லண்டன், ஜூன் 30
பாகிஸ்தானுக்கான விமான சேவைகளை இடைநிறுத்துவதற்கு சவூதி அரேபியா தீர்மானித்துள்ளது.
கடந்த புதன்கிழமை பாகிஸ்தானின் பெஷாவர் விமான நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் சவூதி அரேபியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்தார். அதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ற)

## சிறுமிக்கு முத்தம் தந்த பெரியவர் தண்டனையைக் கேட்டவுடன் சாவு

நியூயோர்க், ஜூன் 30
சிறுமி ஒருத்திக்கு முத்தம் கொடுத்த பெரியவர், அதற்கான தண்டனையைக் கேட்டவுடன் மயங்கி விழுந்து உயிரை விட்டுள்ளார்.
அமெரிக்காவில் உள்ள கிளீவ்லேண்ட் பகுதியைச் சேர்ந்தவர் 51 வயதான மிகுல் ஐபெர். இவர் தனது பக்கத்து வீட்டைச் சேர்ந்த 14 வயது சிறுமியைக் கட்டாயப்படுத்தி முத்தம் கொடுத்துள்ளார்.
அதைப் பார்த்த சிறுமியின் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர். அது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணைகளை அடுத்து ஐபெருக்கு 2 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தார் நீதிபதி.
தீர்ப்பைக் கேட்ட ஐபெர் அதிர்ந்துபோனார். அவரைக் கூண்டிலிருந்து இறக்கி நீதிமன்றத்துக்கு வெளியே பொலிஸார் அழைத்துவர முற்பட்டபோது, அவர் அப்படியே மயங்கிச் சரிந்துவிட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர் அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தார். அதைக் கேட்ட நீதிபதியும், நீதிமன்றில் இருந்தவர்களும் அதிர்ச்சியில் உறைந்து போயினராம். (ற)

# போலன்ட் பிரதமருக்கு வெற்றி

லண்டன், ஜூன் 30
போலன்ட்ப் பிரதமர் டொனல்ட் டஸ்க் தம் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளார். நாடாளுமன்றத்தின் மொத்தமுள்ள 460 உறுப்பினர்களில் கூட்டணிக் கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து 237 பேர் பிரதமருக்கு ஆதரவாகவும், 203 பேர் பிரதமருக்கு எதிராகவும் வாக்களித்தனர்.
டொனால்ட் டஸ்க் தலைமையிலான அரசின் அமைச்சர்கள் முக்கிய வங்கி அதிகாரிகளிடம் பேசிய பதிவுகள் ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தின.
அதனை அடுத்து பிரதமர் டொனால்ட் டஸ்க் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்தன. (ற)



# சிங்கக்குட்டியை தந்தெடுத்தார் மூன்

நைரோபி, ஜூன் 30
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கி- மூன் கென்யா நாட்டில் உள்ள நைரோபி வன விலங்கு காப்பகத்தில் சிங்கக் குட்டி ஒன்றை தத்து எடுத்துள்ளார். நைரோபி தேசிய பூங்காவில் நிராதரவாகச் சுற்றித் திரிந்த 6 மாத பெண் சிங்கக் குட்டியை தத்தெடுத்த பான் கி -மூன், அதனை நைரோபியில் உள்ள வன விலங்கு காப்பகத்தில் ஒப்படைத்தார். கென்யாவின் கிஸ்வாஹிலி மொழியில் அந்த சிங்கக் குட்டிக்கு டுமைனி (நம்பிக்கை) என்று அவர் பெயர் சூட்டியுள்ளார். (ற)

# எகிப்தில் துப்பாக்கிச் சூடு நான்கு பொலிஸார் சாவு

கெய்ரோ, ஜூன் 30
எகிப்தில் வடக்கு சினாய் பகுதியில் நேற்று ஜிஹாத் அமைப்பினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.
அந்த நாட்டின் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.
இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"வடக்கு சினாய் ரஃபா மற்றும் இ-எல்-அரிஷ் நகரங்கள் இடையே உள்ள வீதியில் பொலிஸார் பயணித்துக் கொண்டிருந்தபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட பொலிஸ்ார் விடுமுறை முடிந்து கடமைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். சினாய் பகுதியில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன"- எனத் தெரிவித்துள்ளனர். (ற)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வெள்ளை உள்ளத்துடன் உலவும் உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அனைத்தும் விலகி நன்மைகள் நடக்கும் நாள். சுற்றியிருக்கும் சோம்பேறிகளிடமிருந்து உங்களை நீங்கள் விலக்கிக் கொள்ளுங்கள். எதிரிகளின் தொல்லைகள் குறையும்.

**இடபம்**: உங்கள் பக்கமுள்ள நியாயம் ஓங்கும். நீண்டகாலமாக சந்தான பாக்கியம் கிட்டாதவர்களுக்கு வரப்பிரசாதம் கிடைக்கும். தம்பதிகளிடையே ஒற்றுமை அதிகரிக்கும். விட்டுக் கொடுத்துப் போவார்கள்.

**மிதுனம்**: தந்தையாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்கால முன்னேற்றத்தைக்கருதி சில முயற்சிகளை எடுப்பீர்கள். அந்த முயற்சிகள் யாவும் வெற்றிகளைத் தரும். பயணங்களால் பொருள்சேர்க்கை ஏற்படும்.

**கடகம்**: வெளிநாடு பயணம் செல்ல ஏற்பாடுகள் இனிதே நடைபெறும். சுயசார்பும் தன்னிறைவும் பெறுவீர்கள். தைரியம் பளிச்சிடும். புதிய வழக்குகளை சந்திக்க நேரிடலாம். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை நீங்கும்.

**சிங்கம்**: குடும்பத்தில் சிறு சிறு சிக்கல்கள் வந்து வந்து போகும். சிறைத்துறையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பயணம் தொடர்பான தொழில்களில் லாபம் கிடைக்கும். எனினும் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி**: நன்மைகள் நடக்கும். வேலை நிமித்தமாக வெளி நாட்டுக்கு பயணம் செல்ல வேண்டி வரலாம். மாணவ கண்மணிகளுக்கு படிப்பில் நாட்டம் அதிகரிக்கும். நினைத்த மதிப்பெண்கள் கிடைக்கும். அனைவருடனும் அனுசரித்துச் செல்வீர்கள்.

**துலாம்**: இன்று மிகுந்த தன்னம்பிக்கையுடையவரான தங்களுக்கு தெய்வ அனுகூலமும் சேர்ந்து இருப்பதால் சாதனைகள் புரிவீர்கள். நற்பலன்கள் ஏற்படவே செய்யும். அவற்றால் மனதில் உற்சாகம் பிறக்கும்.

**விருச்சிகம்**: சில மாற்றங்கள் வந்து சேரும். பதவி உயர்வுக்குரிய அறிவிப்பு வந்து சேரும். சிலருக்கு வெளியூருக்கு மாற்றலும் வரும். உடனே கைகூடா விட்டாலும் அதற்கான விதையை இப்போது ஊன்ற வேண்டிய காலகட்டமிது.

**தனுசு**: பொருள்கள் திருட்டு போகலாம். ஞாபக சக்தியை இழக்காமல் இருப்பதற்கு மனதை சஞ்சலத்தில் ஆழ்த்தக் கூடாது. கலைத்துறையினருக்கு ஓரளவு நன்மைகள் வந்து சேரும். ஓரளவு சோதனைகளும் இருக்கும். முன்னோர்கள் வழிபாடு மிகவும் முக்கியம்.

**மகரம்**: நேர்மறையான செயல்கள் அனைத்திலும் வெற்றிகள் கிடைக்கும். பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். சிற்சில விரையங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச் செலவுகள் தான் என்பதை உணருங்கள்.

**கும்பம்**: உங்கள் தன்னம்பிக்கை, திறமை, திறன் அதிகரிக்கும். நிலம், வீடு, வாகனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலிருந்து உங்களை விடுவிப்பதற்கு வழிகள் வந்து சேரும். ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகளும் வந்து சேரும். மாணவர்களுக்கு பொன்னான நாளிது.

**மீனம்**: குடும்பத்தில் நடைபெற இருந்த நற்காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். நண்பர்கள் அனுகூலமாக இருப்பர்கள். கூடிய மட்டி லும் அடுத்தவர் விடயங்களில் தலையிடுவதை தவிருங்கள். பெரியோர்களை ஆலோசனைகளைக் கேட்டே எதையும் செய்வது நல்லது.

## நாளை

**ஆனி-17 செவ்வாய்க்கிழமை | 01.07.2014**

திதி: சதுர்த்தி மு.இ.08.59 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பி.ப.02.08 வரை

சுபநேரம்: 10.26-11.56 வரை
இராகுகாலம்: 02.56-04.26 வரை
சதுர்த்தி விரதம்

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங் குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 4 | 9 | | | | | 7 |
| | 8 | | | | 3 | 9 | 6 | |
| | 9 | | | | | | | |
| 8 | 5 | 1 | | 2 | | 4 | | 6 |
| | | | 3 | 6 | 5 | | | |
| 2 | | 3 | | 8 | | 5 | 7 | 9 |
| | | | | | | | 9 | |
| | 1 | 7 | 4 | | | | 5 | |
| 9 | | | | | 8 | 7 | 2 | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 5 | 8 | 4 | 2 | 9 | 3 |
| 2 | 5 | 8 | 1 | 3 | 9 | 4 | 6 | 7 |
| 3 | 4 | 9 | 7 | 2 | 6 | 8 | 5 | 1 |
| 4 | 3 | 6 | 9 | 7 | 2 | 1 | 8 | 5 |
| 9 | 2 | 1 | 8 | 6 | 5 | 7 | 3 | 4 |
| 7 | 8 | 5 | 3 | 4 | 1 | 9 | 2 | 6 |
| 5 | 7 | 3 | 2 | 1 | 8 | 6 | 4 | 9 |
| 1 | 6 | 2 | 4 | 9 | 3 | 5 | 7 | 8 |
| 8 | 9 | 4 | 6 | 5 | 7 | 3 | 1 | 2 |

சக்தி TV தமிழ் பேசும் மக்களின் சக்தி

உலகத் தமிழரின் கௌரவமான யாழ்ப்பாணத்தில் யாழ் கலை, இலக்கிய பாரம்பரிய திறமைகளை உலகிற்கு எடுத்துரைக்கும் சக்தி TV யின் முயற்சி

மண்வாசனை

பேச்சு எம் மண்ணிற்கு உரித்தான மவுசு
மாணவர்களின் பேச்சுத்திறன் ஆழத்தை
அறியத்தரும் பாடசாலைகளுக்கிடையிலான
விவாதப்போட்டி
Shakthi Debater
இன்றும் நாளையும்

ஜூன் 30, ஜுலை 01

நேரம்: காலை 9.00 மணி முதல்
இடம்: யாழ் GREEN GRASS HOTEL

THE DEBATER
POWER OF COMMUNICATION

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## இயற்கையும் மனிதனும்

தூல நிலையில் வெளிப்பட்டுள்ள பிரபஞ்சப் பகுதி மட்டுமே இயற்கை என்பது தான் தற்காலக் கருத்து. பொதுவாக மனம் என்று அழைக்கப்படும் பகுதி இயற்கை என்று கருதப் படுவதில்லை.

மனம் சுதந்திரமானது என்பதை நிரூபிக்க முனைந்த தத்துவ ஆராய்ச்சியாளர்கள் மனத்தை இயற்கையிலிருந்து விலக்கி விட்டார்கள். இயற்கை என்பது சிறிதும் வளைந்து கொடுக்காத நியதிக்குக் கட்டுப்பட்டிருக்கிறது; ஆளப்படுகிறது. மனத்தையும் இயற்கை என்று கூறினால் அதுவும் நியதிக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும். இப்படிக் கூறுவது சுதந்திர மனம் என்னும் கோட்பாட்டைத் தகர்த்து விடும். நியதிக்குக் கட்டுப்பட்டிருக்கும் ஒன்று எப்படிச் சுதந்திரமானதாக முடியும்?

## திருடர்களின் நடமாட்டத்தால் அளவெட்டியில் அச்ச நிலை

அளவெட்டிப் பகுதியில் இரவு வேளைகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். கடந்த வாரம் சாமத்திய வீட்டில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம், அளவெட்டி மேற்கில், வீட்டில் தனித்து நின்ற பெண்ணிடம் கத்தியைக் காட்டி சங்கிலியைப் பறிக்க முயன்ற சம்பவம், அளவெட்டி பெருமாக்கடவை துர்க்கையம்மன் கோயில் கதவு உடைத்துத் திருட்டு ஆகிய சம்பவங்கள் காரணமாக இந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் இரவு வேளைகளைப் போக்குவதுடன் பகல்வேளையிலும் வீடுகளில் தனித்து இருக்க அச்சம் கொண்டுள்ளனர். (க-36)


## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா பாலசிங்கம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானை, வவுனியா, கொழும்பு போன்ற இடங்களில் வசித்து இந்தியாவில் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் நீண்டகாலம் முகாரியாகப் (போமன்) பணியாற்றினார். அன்னார் எங்கள் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானப் பரிபாலனசபையில் நீண்டகாலம் பொருளாளராகப் பணியாற்றி 1995 இல் மகாகும்பாபிஷேகத்தை நிறைவாக்கி இன்புற்றவர். இவரது புனித ஆன்மா அம்பாளின் பாதாரவிந்தத்தைச் சென்றடைய எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரினது உறவுகளின் துன்பத்திலும் நாம் பங்குகொள்கின்றோம்.

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் பரிபாலனசபையினர்

(50911)
(12)(6)



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி நடேசமூர்த்தி
(இலங்கை வங்கி- பாதுகாப்பு உத்தியோகத்தர்)

தோற்றம் 22.07.1954
மறைவு 25.06.2009

ஆண்டுகள் ஐந்து ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும்நீங்காத நினைவுகளும்
அலைகொண்டு போனாலும்
அப்பா எங்களோடு தான் வாழ்ந்திடுவீர்
வருடங்கள் பலவானாலும்.

(49391)(4.6)

ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி. குடும்பத்தினர்.





### அல்லையூர் அவன் இன்று புதையுண்ட
### பா.சத்தியசீலன்

1938-06-15 இல் இருந்து
2001-06-30 வரை

அல்ல அல்ல இது புகழ்ப்பா
அல்லையூர் அவன், இன்று புதையுண்ட பா
அவன் எனக்கு அன்புள்ள அப்பா
அன்புடன் எனது பணிவான அகத்துப்பா

இல்லாதவை சொல்பவன் கவிஞன் அல்ல
இருப்பதை மறைப்பவன் கயவன் கவியல்ல
இருதயத்திருந்தெய்வான் கவிதை
இருதயமிருப்போற்கு அன்று அதுவிதை

மழலைத்தமிழ் அமிழ்தம்
மழலை உன் தமிழ் அதிமிழ்தம்
மழலை அல்லயூர் மழலை
மணலை மறப்பேனா மடியும்வரை

குழந்தை இருதயம்
இழந்த இருதயம்
வலியில் நான் வாடவில்லை
வரிகளில் நீ வாழ்கின்றாய்

புகழ் தேடும் பா இது இல்லை
புகழ் தேடும் நண்பா! அது நிலை இல்லை
புதையும் வரை வித்திடு, விளைவித்திடு
புதையுண்டும் நீ வாழ்வாய், புனித நூல் வித்து இது

வண்ணன்
www.godandvannan.com
www.seaaav.com

(50910)


## சிறுவர் உழைப்புக்கு எதிராக நுவரெலியாவில் பேரணி



சிறுவர் உழைப்பைத் தடுக்க ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வொன்று நுவரெலியாவில் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட சிறுவர்கள் ஒன்றிணைந்து நேற்று கொட்டகலை நகரில் நுவரெலியா பிரதேச சபைக்கு முன்னால் இருந்து - கொட்ட கலை விநாயகர் கோவில் வரையில் பதாகைகளை ஏந்தி பேரணியாகச் சென்றனர். பின்னர் விநாயகர் கோயி லுக்கு முன்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதிநாடகம் ஒன்றும் சிறுவர்களால் நடித்துக் காட்டப்பட்டது. (வ)

## சமய சந்நிதிகளில்...

கொக்குவில், ஜூன் 30

கொக்குவில் மேற்கு - சொர்ண வடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவ வைபவத்தை சிவப்பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதி குருக்கள் தலைமையில் சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக் குருக்கள் நடத்தி வைப்பார். (ஓ)

★ ★ ★

நீர்வேலி ஸ்ரீசெல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

★ ★ ★

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள்12 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். உற்சவங்கள் தினமும் காலை 8.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

★ ★ ★

அளவெட்டி பெருமாக்கடவை அருள்மிகு விநாயகப் பெருமானின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். 12 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா முற்பகல் 11 மணிக்கு இடம் பெறும். (க-36)

★ ★ ★

கைதடி- கயிற்றசிட்டி முருகன் ஆலய பிரம்மோற்சவப் பெருவிழா எதிர்வரும் 3 ஆம்திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற உள்ளது. எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 12 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. "கிரியாமணி" சிவஸ்ரீ மு.கணேசக்குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (க)

★ ★ ★

ஏழாலை, புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேசுவரர் திருக்கோயிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. சப்பறத்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும், தேர்த்திருவிழா மறுநாள் புதன்கிழமையும், தீர்த்தத் திருவிழா 4 ஆம் திகதி வியாழக் கிழமையும் இடம்பெறவுள்ளன. (க)

## நாயுடன் மோதியதால் விபத்துச் சம்பவம்

அளவெட்டி, ஜூன் 30

கடந்த 27 ஆ[illegible] திகதி விளான் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பேர் வீதிக்குக் குறுக்க[illegible] ஓடிய நாயுடன் மோதுண்டதில் வி[illegible]த்துக்குள்ளாகினர்.

பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த ஆசை அன்ரனி ஸ்ரலின் (வயது -40) என்பவர் தோள்பகுதியில் [illegible]றிவு ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனையவர் காயம் எதுவுமின்றி தப்பித்துக் கொண்டார். (க-36)

## நடை பவனி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு கொண்டாட்டத்தையொட்டி நடைபவனியொன்று சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டருக்கு அருகில் ஆரம்பித்து பாடசாலையை வந்தடையும். நாளை செவ்வாய்க் கிழமை காலை 7.30 மணிக்கு மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர், பழைய மாணவர்கள் அனைவரையும் நாகம்ஸ் தியேட்டருக்கு மு[illegible]ன்பாக ஒன்று கூடுமாறு சரியாக காலை 8 மணிக்கு நடைபவனி ஆரம்பமாகும் என்றும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (க-36)

## முற்றோதல் நிகழ்வு

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவாசகமும், திருக்கோவையும் முற்றோதல் காலை 6 மணி முதல் இடம்பெறும். நாளை மறுதினம் புதன்கிழமை ஆலயத்தில் திருவாதவூரடிகள் புராணப்படலம் ஓதப்படும் மடாலயத்தில் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளன. (க)


## யா/வேலணை சரஸ்வதி வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் - 2014

மேற்படி பொதுக் கூட்டம்
எதிர்வரும் 02.07.2014ஆம் திகதி
புதன்கிழமை பி.ப.2.30 மணிக்கு
அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.
அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(50909)
(12)(6)



## அறிவித்தல் - வெளிப்படுத்தல் உறுதி

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் - 15
ஆதன இலக்கம் - 59 (புதிய பதிவு)
யாழ். காரைநகர் வீதி.

வட்டாரம் 15 யாழ். காரைநகர் வீதி ஆதன இலக்கம் 65 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில் பற்று சண்டிலிப்பாய் இறை "வேதின்") என்னும் பெயருள்ள வீஸ்தீரணம் நிலப்பரப்பு 06 குளி 14.68 கொண்ட இவ்வாதனமானது 595/12, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த இராமலிங்கம் முத்துக்குமாரன் (தே.அ.அ.இல. 581090641 V) என்பவரால் வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.செ.கனகசபாபதி முகதாவில் நிறைவேறிய 269 ஆம் இலக்க 2014.02.27 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "வேதின்" நிலப்பரப்பு 06 குளி 14.68 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் இராமலிங்கம் முத்துக்குமாரன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

சண்முகம் சிவகுமாரன் (J.P)
தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

(50912)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி யோகம்மா வைத்தியலிங்கம்

தோற்றம்
1926.04.01

மறைவு
2014.06.01

வானுறையும் தெய்வத்தினுள் சங்கமமாகிய
எங்கள் குடும்பத்தின் தலைவியே!
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
இப்பாரினில் வாழ்ந்த எம் பாசமிகு தெய்வமே!
எம்மையெல்லாம் துயரத்தில் தவிக்கவிட்டு
நின்னுயிர் நீத்த மாயம்தான் என்ன?



*மண்ணுலகை நீங்கள் மறந்து சென்றாலும்
மங்காப் புகழுடன் என்றும் திகழ்ந்திடும்
மக்களைப் பெற்ற மகாராசியே! - எங்கள்
மனங்களில் என்றென்றும் நீங்கள்
நிறைந்திருப்பீர்கள் அம்மா..*

(49329)(12.3.6)

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
இல.06, வைமன் றோட், நல்லூர் - யாழ்ப்பாணம்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் இராமநாதர் மகாலிங்கம்

தோற்றம்
07.09.1934

மறைவு
31.05.2014



**கடந்த 31.05.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.**

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
2ஆம் வட்டாரம்
புங்குடுதீவு.**

(49430)(45.6)

## மூடப்பட்ட ஒழுங்கைகள் மக்கள் பாவனைக்கு

வரணிப் பிரதேசத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 52 ஆவது பிரிகேட் தளம் அமைந்துள்ள பகுதியில் நீண்ட காலமாக பாவனையற்று மூடப்பட்டிருந்த பல ஒழுங்கைகள் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளன.
வரணிமருத்துவமனைஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை உப வீதி, அம்மா கடை வெட்டுக்குளம் வீதி, கொத்தானைக் குளம் வீதி மற்றும் மில் வீதி என்பனவே இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டு மக்கள் போக்கு வரத்துக்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. அதேவேளை மக்கள் குடியிருக்காத பல காணிகளில் தேங்காய்கள் திருடும் கூட்டமும் நாளாந்தம் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.
இதன் காரணமாக முழுநேரமும் குறித்த காணிகளுக்கு உரிமையாளர்கள் காவல் இருக்கும் நிலை காணப்படுகின்றது. தற்போது சகலகாணிகளும் தூண்வேலிகள் போடப்பட்டு உரிமையாளர்களால் எல்லைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

## வேறுபாடுகளற்ற சமுதாயத்தை காண விரும்பிய பெருமகன் தாவீது அடிகளார்

### பருத்தித்துறை பங்குத்தந்தை புகழாரம்

வடமராட்சி, ஜூன் 30
இன, மத, மொழி வேறுபாடற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற இலட்சியம் தாவீது அடிகளின் பணிவாழ்வில் மிளிர்ந்தது என பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜோன்மவுலிஸ் அடிகளார் தெரிவித்தார்.
தும்பளை அருட்தந்தை கலாநிதி தாவீது அடிகள் மறைவின் 33 ஆவது நினைவு தினம் அவர் பிறந்த வளவில் அன்னாரின் உருவப் படம் அமைந்துள்ள சாலையில் ம.ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை பங்குத் தந்தையும், மறைக்கோட்ட முதல்வருமான அருட்திரு ஜோன்மவுலிஸ் அடிகளார் உரையாற்றினார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;
நான் குருமடத்தில் 1981ஆம் ஆண்டு கற்கச் சேரும்போது தாவீது அடிகளார் மறைந்திருந்தார்.
அடிகளார் மறைந்திருந்தாலும் அவரைப் பற்றி குருமடத்தில் பயிற்சி பெற்ற காலங்களில் குருமடப் பயிற்சியாளர்கள் மூலம் அறிந்துகொண்டேன்.
தாவீது அடிகளின் வாழ்க்கை மூன்று கட்டங்களைக் கொண்டது. முதலில் தாவீதுஅடிகள் சிறந்த குருவாக ஆன்மிகப் பணி ஆற்றி புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களை நன்னெறிப்படுத்தியுள்ளார். இரண்டாவதாக அவர் தமது புத்திக்கூர்மையினால் 30இற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்ற ஒரு சிறந்த கல்விமானாக சொற்பிறப்பியல் ஒப்பிட்டுப் பேரகராதியை எழுதியமையைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக அவரது ஆக்கங்கள் மூலம்தான் ஒரு சமாதானத்தின் தூதுவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.
தாவீது அடிகளின் நினைவு தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற தும்பளையைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குள் வாழும் 6 மாணவர்களுக்கு உதவிக் கொடை வழங்கப்பட்டது. தும்பளை மரியாள் விளையாட்டுக்கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களும் கொடையாக வழங்கப்பட்டது.
தாவீது அடிகள் நினைவுக்குழு ஒருங்கிணைப்பாளர் இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தார். (க-173)

## நெஞ்சக் கதவில் கொஞ்சம்........

### அவமாகும் பிரதேச வளங்கள்

ஆரம்ப பாடசாலை அதிபர் ஒருவர் தமது மகனுக்கு மாம்பழத்தைப் பக்குவமாகச் சீவிக் கொடுத்தும் நாட்டம் கொள்ளாது, மிக்சர், சிப்ஸ், பீசா என்பவற்றில்தான் ஆர்வம் காட்டுவதாகச் சலித்துக்கொண்டார். வடமராட்சியில் வாழைக்குலைகளை கிலோ 5 ரூபா வீதமும், வலிகாமத்தில் கறுத்தக் கொழும்பான் 10 ரூபா வீதமும், தென்மராட்சியில் பெரிய பலாப்பழங்களை 20 ரூபா வீதமும் தமது பகுதி சந்தைகளில் தாம் விற்றதாக பயிற்சிக் கல்லூரி ஒன்றின் மாணவர் மூவர் தமக்கிடையே சலித்துக் கொண்டனர். இதாவது பரவாயில்லை எனச் சலித்துக் கொண்டார் எவரும் சீண்டாததனால் அழுகிப் போன பழங்களை வைத்திருந்த நான்காமவர்.
கிடைக்கும் வேலைகளை எல்லாம் இழுத்துப்பறித்து பணம் பண்ணி எமக்கு அனுப்பும் புலம்பெயர் உறவுகளுக்கு இந்த மண்ணின் முக்கனிகளைச் சுவைக்க பிரியம் இருந்தும் வேறு நாடுகளில் இருந்து முழுமையாகவும், பதப்படுத்தப்பட்டும் வரும் பழங்களுக்கு பணத்தை அள்ளிக்கொடுப்பதாக அவர்கள் சலித்துக் கொள்கின்றனர். புலம்பெயரிகளது இந்தச் சலிப்புகள் யாவும் ஒரு புள்ளியை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றனவா? எங்கள் மாகாணத்துக்கு மட்டும்தான் இந்தக் கையறுநிலையெனில் மழை விட்டும் தூவானம் போகாத தன்மையை எண்ணி நாம் அனைவருமே சலித்துக்கொள்ள வேண்டியது தான்.
தென்னிலங்கையராலும் அவர்களிடம் வாங்கி விற்கும் எம்மவர்களாலும் ரம்புட்டான், மங்குஸ்தான், அன்னாசி என்பன இங்கு நகர, கிராம வேறுபாடு இன்றிப் பயணமாகின்றன. இதுபோன்று முக்கனிகளையும் தெற்குக்குக் கொண்டுபோய் கூவி விற்பதற்கு நாம் கனவுகூடக் காண முடியாதபோது, அவர்கள் மூலமாகவாவது முதலுக்கு மோசம் வராமல் பருவகால வியாபாரமாக செய்யலாமே. "முடித்தால் குடுமி" என்ற மனோநிலை மாறியாக வேண்டும். எங்கள் பிரதேச வளங்கள் அவமாகக் கூடாது. பிரதேசப்பற்று என்பது எம் அனைவருக்கும் இருக்க வேண்டும். பிரதேசத்தின் வருவாய் இழக்கப்படக்கூடது.

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1985, பூராடம் 3 ஆம் பாதம், பாவம் 46 லண்டனில் Work Pemit இல் வசிக்கும் மகளுக்கு லண்டனில் வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 077 842 1428

**விற்பனை**

வேதாள வெங்காய நாற்றுக்கள் விற்பனைக்குண்டு.
(50906)(12)(6)) தொடர்பு: 077 663 0779

**தவறிவிட்டது**

தெய்வேந்திரம் தெய்வமனோகர் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரமும், 500 - 5395 மோட்டார் சைக்கிளின் அனுமதிப் பத்திரங்களும் சங்கானைக்கும், வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள்
(சி14834)(12.5.6) 077 899 6085
தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள MARUTI, ALTO (Special-Edition) NP.KS-XXXX தொடர் இலக்கம் கொண்ட கார் விற்பனைக்குண்டு.
(50904)(12)(6)) தொடர்பு: 077 750 6595

## மீசாலையில் இளம் வயது குடும்பஸ்தர் சாவு

வீட்டினுள் சேலையில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் இடை வழியில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலை மேற்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச்சேர்ந்த அப்புலிங்கம் ஜெகரூபன் (வயது- 36) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
வீட்டுக் கூரை மரத்தில் சேலையைக் கட்டி அதில் தூக்கிட்டுக் கொண்டபோது அயலவர்களால் காப்பாற்றப்பட்டு அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவரது சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

**6 ஆம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்புவரைக்கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான விசேட இரண்டாம் மொழி கற்கைநெறி**

இந்து பௌத்த கலாசாரப்பேரவையானது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சுடன் இணைந்து நடத்தும் தேசிய இரண்டாம் மொழிக் கல்வி நிலையத்தில்,பாடசாலைகளில் 11ஆம்வகுப்பு வரை கல்விகற்கும் மாணவர்கள் தவிர்ந்த ஏனைய சகலதரப்பினருக்கும் (க.பொ.த.உயர்தர வகுப்பு, பல்கலைக்கழக, ஏனைய உயர்கல்வி கற்கும் மாணவரகள், அரச, தனியார்துறை உத்தியோகத்தர்கள்) வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இத்துடன்,

மொழியியல் மற்றும் கல்வியமைச்சின் ஆலோசனைக்கிணங்க பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு சனி,ஞாயிறு தினங்கள் மற்றும் கிழமைநாட்களில் மாலைநேரங்களில் ஆரம்ப சிங்களமொழி வகுப்புக்களும் ஆங்கிலமொழி வகுப்புக்களும் இந்து பௌத்த கலாசாரப்பேரவையால் யாழ்மாவட்டத்தில் நடத்துவதற்கு பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வணக்கத்திற்குரிய அத்துறலிய ரத்தன தேரருடாக பேரவையின் செயலாளர் MTS இராமச்சந்திரன் அவர்கட்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான நிதிஅனுசரணையை மட்டும் தேசமானிய இராமச்சந்திரன் வழங்க பெற்றோர்களும் இந்துபௌத்தகலாசாரப்பேரவையும் மேலதிக அனுசரணை வழங்குகின்றனர். ஆறுமாத காலம் அல்லது 120 மணித்தியாலங்கள் கொண்ட இக்கற்கைநெறி ஆரம்பப்பகுதியான LEVEL-111 பரீட்சைக்குரியதாக மொழியியல் மற்றும் கல்வியமைச்சின் ஆலோசனைக்கிணங்க பாடத்திட்டங்கள் சதகாம்செவன நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் கீழ்க்காணும் இடங்களில் பெற்றோரின் அனுமதியுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். கற்கைநெறி முடிவில் நடைபெறும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு DIPLOMA IN SINHALA LANGUAGE LEVEL-111 சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு ஆறு மாத முடிவிலும் இடைப்பரீட்சைகள் நடத்தப்படுவதுடன் க.பொ.த.சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதாக பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.இதன் முதற்கட்டமாக

யாழ்ப்பாண அலுவலகம், கைதடி, சாவகச்சேரி றிபேர்க்கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், நெல்லியடி மத்தியகல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்தியகல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக கல்லூரி,கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஆகிய இடங்களில் யூலைமாத ஆரம்பத்தில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

மேற்படி கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் சனி.ஞாயிறு தினங்களில் காலை 09.00மணியிலிருந்து 11:00மணிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். யாழ்ப்பாண அலுவலகத்தில் வாரத்தின் ஏழு நாள்களும் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 04.00மணிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு: 021 222 7542, 021 222 0021

இந்து பௌத்த கலாசாரப்பேரவை- நிர்வாகம்
29. பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(50902)(4.6)

## ஏக்கர் வரியை செலுத்த கோரிக்கை

2014 ஆம் ஆண்டுக் கால ஏக்கர் வரியை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் செலுத்துமாறு வரணி வடக்கு விவசாய சம்மேளனம் தமது பிரதேச நெல் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளிடம் கோரியுள்ளது.
2014 - 2015 காலபோக நெற்செய்கைக்கு உரிய உரவகைகளைப் பெறுவதற்குவசதியாக தகுந்த ஏக்கர் வரியை நேர காலத்தோடு செலுத்தி ஆயத்தம் செய்யுமாறு குறித்த விவசாய சம்மேளனத்தின்செயலாளர் க.தியாகராசா குறிப்பிட்டுள்ளார். (வ-122)

## மாணவிக்குப் பாராட்டு

பண்டத்தரிப்பு, ஜூன் 30
பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவி கி.சபிதா, வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் 15 வயதுப்பிரிவு தட்டு எறிதல் நிகழ்வில் பங்குபற்றி மூன்றாம் இடத்தைப் (வெண்கலப்பதக்கம்) பெற்றுள்ளார். இந்த மாணவியை பாடசாலை சமூகம் பாராட்டிக் கௌரவித்துள்ளது. (ஒ)

**தேவை**

01.விற்பனைப் பிரதிநிதி
02.அலுவலக பணியாளர்
சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் சரளமாக உரையாடக்கூடிய 20 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் இன்று (30.06.2014) நேரில் வரவும்.
உணவு, தங்குமிடம் இலவசம்.
சுஜித் என்ரபிறைசஸ் (சி/7718)(4.3.6.)
பருத்தித்துறை வீதி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி. 021 227 0586



**கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்**
இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(சி1187)(7.6.3)



# அளுத்கமவில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் புதைகுழிகளை உடன் தோண்ட வேண்டும்

## பிரேத பரிசோதனை அறிக்கையில் சந்தேகம் என்கிறது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஜுன் 30
அளுத்கமவிலும் பேருவளையிலும் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் புதைகுழிகளை உடன் தோண்ட வேண்டும், எனக் கோரிக்கை விடுத்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இதற்கான கோரிக்கையொன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட முஸ்லிம்களின் பிரேத பரிசோதனை அறிக்கை குறித்து சந்தேகம் வெளியிடப்பட்ட நிலையில், அவர்களின் உடல்களை எடுத்து உயிரிழந்தமைக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இத்னைத் தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜெயசூரிய,

"தகுதிவாய்ந்த சட்ட வைத்திய அதிகாரி ஒருவரையோ அல்லது தடயவியல் நிபுணர் ஒருவரையோ நியமிக்குமாறு நீதிமன்றத்தைக் கோருவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

நீதி அமைச்சர் ஹக்கீமும் முதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேதப் பரிசோதனை அறிக்கை குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். கொல்லப்பட்ட இருவருடைய பிரேதப் பரிசோதனை அறிக்கையில் சில விடயங்களில் குளறுபடி நடந்துள்ளன.

மேலும் காலில் ஏற்பட்ட காயத்தால் ஒரு கால் துண்டிக்கப்பட்ட 17 வயது இளைஞனின் மருத்துவ அறிக்கையிலும் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஹக்கீமும் சந்தேகம் வெளியிட்டுள்ளார் என்றால், இலங்கை மருத்துவ சபையிலும் சட்ட மருத்துவ அதிகாரிகள் சங்கமும் மருத்துவ அதிகாரிகள் தங்களது கடமைகளைச் சரிவரசெய்யவில்லையா? அல்லது வெளியாட்களின் தலையீடு இருந்ததா? என்பதைக் கண்டறிவதற்கு விசாரணைக்கு கோரிக்கை விடுக்கவேண்டும்.

சட்டமா அதிபர், வன்முறைகளைத் தூண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு உத்தரவு இட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அளுத்கம வன்முறையைக் கண்டித்து சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

"விடுதலைப் புலிகளுடனான போர் முடிவடைந்து 30 வருடங்களின் பின்னர் சில மதவாத சக்திகள் இன்னொரு சிறுபான்மைச் சமூகத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும்"- என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-சி)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீசெல்ஸ் நாட்டின் ஜனாதிபதி ஜேம்ஸ் மிஷே சலை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலை சந்தித்துக் கலந்துரையாடினார். தொடர்ந்து அங்கு இலங்கை தூதரகத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார். (ற)

## கிரான்பாஸில் துப்பாக்கிச் சூடு இருவர் சாவு; இருவர் காயம்

கொழும்பு, ஜுன் 30
கொழும்பு, கிராண்பாஸ் பகுதியில் இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது. இதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கிரான்பாஸ் பகுதியில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று நடைபெற்றது. இதன்போது, அங்கு பட்டாசு வெடிகள் கொளுத்தப்பட்டன. இந்த அமளியோடு அந்தப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

போதை வியாபாரத்தில் ஈடுபடும் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கிரான்பாஸ் பகுதி நேற்றிரவு பதற்றத்துடன் காணப்பட்டது. அங்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (ஐ)

## பாகிஸ்தானியர்களுக்கான உடனடி விஸா நிறுத்தம்

பாகிஸ்தான் பிரஜைகள் இலங்கை விமானநிலையத்தில் பெற்று வந்த உடனடி நுழைவிசைவு நடைமுறையை இலங்கை அரசு நிறுத்தியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தஸ்னீம் அஸ்லம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரும் பாகிஸ்தானியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்த நுழைவிசைவு நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானிய பிரஜைகளுக்கான விமானநிலைய நுழைவிசைவு நடைமுறை ரத்து செய்யப்படுகின்றமை தொடர்பில் இலங்கை அரசு தமக்கு அறிவித்துள்ள போதிலும், இந்த முடிவை எடுப்பது பற்றி தம்முடன் ஏற்கனவே கலந்துரையாடவில்லை."- என்று தெரிவித்துள்ளார்.

ஐ. நா. அகதிகளுக்கான அமைப்பில் பதிவுசெய்யப்பட்ட பாகிஸ்தானியர்கள் சுமார் ஆயிரத்து 500 பேர் இலங்கை குடிவரவுத் துறை மற்றும் குற்றப்புலனாய்வு துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஊடகங்கள் கடந்தவாரம் செய்தி வெளியிட்டிருந்தன. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. (ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஐ.நா. குழுவின்

ஜனாதிபதியுமான மார்ட்டி அத்திசாரி, நியூஸிலாந்தின் முன்னாள் ஆளுநர் ஜெனரல் சில்வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கீர் ஆகியோரே அந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

இந்த மூன்று வல்லுநர்களும் இந்தப் பணிகளைத் தொண்டு அடிப்படையிலேயே மேற்கொள்ளவுள்ளனர். இந்தப் பணிகளுக்காக எதுவித வேதனத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்ளப்போவதில்லை. இவர்கள் விசாரணைக் குழுவினர் மேற்கொள்ளும் பணிகளுக்கு ஆலோசனைகளை வழங்குவார்கள்.

அதேவேளை, இவ்வாறான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்காற்றியுள்ளது. கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில், அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மான வரைவில், ஆலோசனைக் குழு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு மேலதிகமாக, ஆலோசகர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஐ.நா. விசாரணைக் குழு மட்டும் அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், அதனைச் சர்வதேச விசாரணை என்று குறிப்பிட முடியாதிருக்கும் என்பதுடன் அதன் நம்பகத் தன்மை குறித்தும் கேள்வி எழுப்பப்படும். ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு மேலதிகமாக நிபுணத்துவம் கொண்டவர்களைக் கொண்டு ஆலோசனைக் குழு அமைக்கப்படும் பட்சத்தில், விசாரணைகள் தொடர்பிலான தரம் உயர்வதுடன், அதன் நம்பகத் தன்மையும் பாதுகாக்கப்படும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்போது சுட்டிக்காட்டியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துகளை கவனத்தில் எடுத்த அமெரிக்கா தனது இறுதி வரைவில் குறித்த விடயத்தையும் உள்ளடக்கி, தீர்மானத்தைச் சமர்ப்பித்திருந்தது. அந்தத் தீர்மானத்துக்கு அமைவாகவே மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தற்போது மூவர் அடங்கிய ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. அதன்மூலம் காத்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (ற)

### தமிழர்களுடன்

மையை முஸ்லிம்கள் உணரத் தொடங்கியிருக்கின்றார்கள். எனவே விரைவில் முஸ்லிம்களும், தமிழர்களும் இணைந்து அவரவர் உரிமைக்காகப் போராடும் காலம் கனியும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின், சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் திறப்பு விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. அதில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வில் இணைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடன் இணைந்து கலந்துகொள்வதில் மகிழ்சியடைகின்றேன். மத்திய அரசின் அமைச்சருடன் மாகாண அரசு இந்த விழாவில் பங்குபற்றியுள்ளது என்பதிலும் பார்க்க தமிழ் - முஸ்லிம் ஒத்துழைப்புக்கு இது வழிவகுத்துள்ளது என்பதே எனது மகிழ்ச்சிக்குக் காரணம்.

இதுவரை காலமும் தமிழரில் சிலரும், முஸ்லிம்களில் பெரும்பான்மையானவர்களும் 'சேர்ந்து வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற கூற்றுக்கு அமைவாக வாழ்ந்து வந்தார்கள்.

பெரும்பான்மையினரின் மொழியில் தேர்ச்சி பெற்று எமது சமயத்தையும் வாழ்க்கை முறையையும் கைவிடாது அவர்களுடன் நல்லுறவுடன் ஒழுகி இருந்தோமானால் எமக்குப் பிரச்சினைகள் எழ மாட்டாது என்று அந்தப் பெரும்பான்மை முஸ்லிம் மக்கள் நினைத்து வந்தனர். அத்துடன், ஏன் இந்தத் தமிழ் பேசும் மக்களும் எங்களைப் போல் நல்லுறவுடன் வாழாமல் முரண்டு பிடிக்கின்றார்கள் என்றும் கேள்வி கேட்டு வந்தார்கள்.

ஆனால் அண்மையில் நடந்திருக்கும் அனர்த்தங்கள் அவர்களைச் சற்று சிந்திக்க வைத்துள்ளன. அமைச்சர் ரிஷாத் அவர்களை ஜனாதிபதியுடன் நேருக்கு நேர் மோதவும் இடமளித்துள்ளது.

ஒரு சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் கைக்கு அடங்கும் விதத்தில் வாழ முற்பட்டால் தான் பெரும்பான்மையினர் அதனைப் பொறுத்துக் கொள்கின்றார்கள். சிறுபான்மையினர் தம் கண்கள் முன் அபிவிருத்தி அடைந்து நல்ல நிலையை அடைவதைப் பார்த்தார்களானால் உடனே மனவெதும்பலுக்கு ஆளாகின்றார்கள்.

எங்களையும் பார்க்க விரைவில் முன்னேற இவர்களுக்கு என்ன உரித்து இருக்கின்றது என்று சிந்திக்கத் தொடங்கி விடுகின்றார்கள். பின்னர் அதைத் தடை செய்ய முற்படுகின்றார்கள். ஆகவே அவர்களின் மொழியைப் படித்து அவர்களின் வாழ்க்கை முறைக்கு ஒப்பான விதத்தில் நாங்கள் வாழ முற்பட்டாலும் இந்த மனோநிலையில், மாற்றம் வரப்போவதில்லை என்பதை அண்மைக் கால நடவடிக்கைகளால் நாங்கள் புரிந்து வைத்துள்ளோம்.

தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்ததற்கான காரணம் இதுதான். எவ்வளவு தான் நாங்கள் சிங்களவர்கள் போல் நடந்து கொண்டாலும், அவர்களின் நடை உடை பாவனைகளை எமதாக்கிக் கொண்டாலும் எங்களைத் 'தம்பியோ' என்றும் 'உன் தெமளுன்' என்றுந் தான் பெரும்பான்மையினர் ஒருவித வெறுப்புடன் அழைக்கத் தலைப்படுகின்றனர்.

'சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் சேராது' என்றார்கள் எமது தமிழ் மக்கள். 'இல்லை சேருவன' என்றார்கள் பெரும்பான்மை முஸ்லிம் மக்கள். இன்று சேராது என்ற உண்மை வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதற்கு நாங்கள் முஸ்லிம் மக்களைக் குறை கூறுவதாக நினைக்கக் கூடாது.

குறை கூறுவதானால் மந்தைக் கூட்டத்தில் இருந்து ஒரு ஆடு வெளியே சென்று திரும்பவும் ஆட்டு மந்தையுடன் கூட்டுச் சேர்ந்ததைத் தான் நாங்கள் சுட்டிக் காட்ட வேண்டும்.

வட கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் முஸ்லிம் மக்களின் தாய் மொழி தமிழ். அவர்கள் மற்றைய தமிழ் மொழி பேசும் மக்களுடன் மிகவும் அந்நியோன்னியமாகவே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அந்தப் பாரம்பரிய உறவை பரிகசித்துத் தூக்கி எறிந்ததே எமக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியது. கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழ் பேசும் அலகு ஆட்சிக்கு வர வேண்டும் என்று எவ்வளவோ மன்றாடியும் அதனை உதாசீனம் செய்தது எமக்கு மன வருத்தத்தைக் கொடுத்தது.

என் நண்பர் அஷ்ரப் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் அவர் தமிழ் - முஸ்லிம் உறவைப் பேணிப் பாது காக்கவே முடிவு எடுத்திருப்பார் என்பது எனது கணிப்பு பெரும் பான்மையினருடன் சேர்ந்து காரியங்கள் இயற்றுவதில் பிழையில்லை. ஆனால் எமது தனித்துவத்தை மறந்து சுயநல காரணங்களுக்காகப் பெரும்பான்மையினருடன் சேர முற்பட்டால் எம்மீதான மரியாதை குறைந்து விடும். எப்பொழுதுமே நாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து அரசியல் செய்வதே சாலப் பொருந்தும் என்று நம்புகின்றேன்.

இன்று அமைச்சர் எம்முடன் ஒரே மேடையை அலங்கரிப்பதால் அவரிடம் ஒரு கோரிக்கை விடுக்கின்றேன். தயவு செய்து தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக நீங்கள் உங்களால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குங்கள். நாங்கள் சேர்ந்து ஆனால் எமது தனித்தனியான உரிமைகளுக்காகப் போராடும் காலம் வெகுதூரத்தில் இல்லை - என்றார். (ற-5)

### நாளாந்தம்

கொழும்பு சென்று வருபவர்களுக்கு மாத்திரமன்றி குடா நாட்டில் உள்ளவர்களுக்கும் டெங்குத் தொற்று தீவிரமடைந்து வருகிறது.

வயது வேறுபாடின்றி தொற்று ஏற்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் சுன்னாகம் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து வார இறுதியில் பலர் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அதையடுத்து அறிவுறுத்தலின்படி டெங்கு தொற்றாத அளவுக்கு சுற்றுச் சூழலைப் பேணுமாறு சுகாதாரப் பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-4)

### ஐ.நா. குழ -

மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் 12 பேர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அடுத்த மாத நடுப்பகுதியில் தமது விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது. அவர்களின் இடைக் கால அறிக்கை ஒன்று செப்ரெம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ற)

### கைதான

இந்த நோய் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் சரியான விவரம் தெரியாது எனவும் மருத்துவர்களிடம் தெரிவித்துள்ளார். இவர் தற்போது தனிமைப் படுத்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இன்று அவர் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-14)

# உருகுவேயை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்து புதிய வரலாற்றைப் படைத்தது கொலம்பியா



உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் உருகுவேயை கொலம்பியா 2-0 என்றகோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்து வரலாறு படைத்தது.

மெஸ்ஸி, நெய்மர், முல்லர், வான் பெர்சி என்று பேசிக் கொண்டிருக்கும் தருணத்தில் அமைதியாக ஒரு வீரர் பெரிய ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர்தான் கொலம்பியாவின் ஜேம்ஸ் ரொட்ரிக்கஸ். 22 வயதான இந்த இளம் வீரர் முதல் பாதியிலேயே அபாரமான கோலை அடித்தார். பிறகு 2ஆவது கோலையும் அடித்த இவர் இந்த உலகக் கிண்ணத்தில் 5 கோல்களை அடித்து முன்னிலை வகிக்கிறார்.

சிறந்த தனிநபர் திறனுக்கு மூசாவைப் போன்று இவரும் ஒரு உதாரணம். முதல் கோல் அடித்த விதத்திலேயே இவர் ஒரு பெரிய வீரர் என்பது தெரிந்தது. அடுத்த சனிக்கிழமை இந்த ரொட்ரிக்கஸை பிரேஸில் காலிறுதியில் எதிர் கொள்ளவேண்டும்.

ஆட்டம் தொடங்கும் விசில் ஊதப்பட்டவுடனேயே கோல் காப்பாளர் உட்பட கொலம்பியாவின் அனைத்து வீரர்களும் சுறுசுறுப்படைந்தனர். அனைவரையும்பயன்படுத்தும் அபாரமான உத்திக் கையாளப்பட்டது. மாறாக உருகுவே தடுப்பாட்டத்தில் இறங்கியது.

அரைமணி நேரத்திற்கு சற்று முன்னால் தலையால் பந்தை முட்டி ரென்னிஸ் போல் மாறி மாறி ஆட ஜேம்ஸ் ரொட்ரிக்கஸ் ஒரு பந்தை அபாரமாக மார்பினால் கட்டுப்படுத்தி அப்படியே இடது காலால் மிக ஸ்டைலாக உதைத்தார். பந்து கோல் ஆனது. ஒருவரும் ஒன்றும்செய்ய முடியவில்லை. இந்த உலகக் கிண்ணத்தின் ஸ்ரைல் கோல் இது என்றால் மிகையாகாது.

கொலம்பியா பெரும்பாலும் ஸ்பெய்ன் போலவே முக்கோண வடிவமைப்பில் பாஸ்களைச் செய்து விளையாடியது. தேவைப்படும்போது பாஸ்களையும் செய்தது. கொலம்பியாவின் கோல் உருகு வேயை சற்றே எழுச்சியுறச் செய்தது. ஆனாலும் பயனில்லை. கொலம்பியப் பகுதிக்குள் நுழைய முடிந்தாலும் உதையில் எந்த வித உத்வேகமும் கிடைக்கவில்லை. கவானி மட்டும் ஓரிரு முறை அச்சுறுத்தலாக இருந்தார். அவர் தலையால் அடித்த பந்து ஒன்றை கொலம்பிய கோல் காப்பாளர் டேவிட் ஆஸ்பீன தாவித் தட்டி விட்டார். இடைவேளையின் போது கொலம்பியா 1- 0 என்று இருந்தது. சுவாரேஸ் இல்லாததால் உற்சாகம் குன்றிக் காணப்பட்ட உருகுவே அணிக்கு இடைவேளைக்குப் பிறகு 50ஆவது நிமிடத்தில் அதிர்ச்சி காத்திருந்தது.

இந்தத் தருணத்தில் கொலம்பிய வீரர்கள் பந்தை இடது வலது புறம் என்று மாறி மாறி பாஸ் செய்து வந்தனர் சுமார் 3ஆவது பாஸில் கொலம்பியாவின் ஆர்மீரோ இடது புறம் மார்க் செய்யப்படாமல் சுதந்திர ஜீவியானார், அவர் பந்தை அடித்தார். அங்கு தடுப்பு வீரராக நின்று கொண்டிருந்த குவாடிராடோ தலையால் முட்டி மைதானத்தின் மையத்திற்கு அனுப்பினார். அப்போது மீண்டும் ரொட்ரிக்கஸ் வந்து காலியாக இருந்த வலையில் கோலைச் செலுத்தினார். இதுவே பின்பு வெற்றிக்கோலாக அமைந்தது. இந்த உலகக் கிண்ணத்தில் ஜேம்ஸ் ரொட்ரிக்கஸ் அடிக்கும் 5ஆவது கோல் ஆகும் இது.

64ஆவது நிமிடத்தில் இடது உள்புறத்திலிருந்து உருகுவே வீரர் கிறிஸ்டியன் ரொட்ரிக்கஸ் சீறிப்பாய்ந்து வந்தார். பந்தை ஆக்ரோஷமாக வலது புறம் கீழாக கோல் நோக்கி அடித்தார். ஆனால் கொலம்பியாவின் ஆஸ்பீனோ மீண்டும் பாய்ந்து தட்டி விட்டார். உருகுவே இந்த ஆட்டத்தில் செய்த சிறந்த கோல் முயற்சி இதுவே.

கடைசி வரை உருகுவேயின் முயற்சிகள் நிறைவேறவில்லை. கொலம்பியா முதன் முதலாக உலகக் கோப்பை காலிறுதிக்குத் தகுதி பெற்று வரலாறு படைத் தது. மேலும் தொடர்ச்சியாக 11 போட்டிகளில் தோல்வியடையாமல் தனது சாதனையை சமன் செய்துள்ளது. காலிறுதியில் பிரேஸிலைச் சந்திக்கிறது கொலம்பியா.

(த)

## சிலியை விரட்டியடித்தது பிரேஸில்



பிரேஸிலிடம் போராடித் தோல்வியைத் தழுவிய சிலி அணி போட்டித் தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

பிரேஸிலில் உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஐந்தாவது முறையாக பிரேஸில் அணி, சிலியை எதிர்கொண்டது.

ஆரம்பத்தில் இருந்தே இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமாக போராடினர். ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் மூலை உதை வாய்ப்பில் நட்சத்திர வீரர் நெய்மர் பந்தை அடித்தார். இதை தியாகோ சில்வா தட்டி விட, கோல் கம்பத்துக்கு மிக அருகே நின்ற டேவிட் லூயிஸ், பிரேஸிலுக்காக தனது முதல் கோலை அடித்தார். அப்போது சிலி தற்காப்பு பகுதி வீரர் கன்சாலோ ஜாரோ பந்தை தொட்டாரா என்ற சந்தேகம் எழுந்தது. இது, உறுதி செய்யப்படாததால், பிரேஸில் 1-0 என முன் னிலை பெற்றது.

இதற்கு 32ஆவது நிமிடத்தில் சிலியின் அலெக்சிஸ் சான்ச்சஸ் பதிலடி கொடுத்தார். பிரேஸில் தற்காப்புப் பகுதி வீரர்களின் அலட்சியத்தை பயன்படுத்திய சான்ச்சஸ் ஒரு கோல் அடிக்க, உள்ளூர் ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். இந்த கோல், சிலி அணிக்கு புது நம்பிக்கை தந்தது. தொடர்ந்து பிரேஸில் கோல் பரப்புக்குள் புகுந்து தாக்குதல் நடத்த, ஆட்டத்தில் சூடு பிடித்தது.

பதில் தாக்குதலை தொடுத்த பிரேஸில் அணிக்கு, நெய்மர் ஏமாற்றம் அளித்தார். இலக்கு இல்லாத இவரது உதை எல்லாம் எதிரணியின் கோல்கீப்பர் கையில் தஞ்சம் புகுந்தது. இதே போல சிலியும் பொன்னான வாய்ப்புகளை கோட்டை விட்டது. இதற்காக இரு அணிகளின் கோல்காப்பாளர்களை ஜூலியோ சீசர்(பிரேஸில்), பிராவோ(சிலி) பாராட்ட வேண்டும். முதல் பாதி 1-1 என முடிந்தது.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் போராடிய போதும் கோல் அடிக்க இயலவில்லை. அவ்வப்போது முரட்டு ஆட்டம் ஆடி மஞ்சள் அட்டை பெற்று வெறுப்பேற்றினர். இரண்டாவது பாதியும் 1-1 என முடிய, ஆட்டம் கூடுதல் நேரத்துக்கு சென்றது.

முதல் 15 நிமிட கூடுதல் நேரத்தில் பிரேஸில் அணி ஆதிக்கம் செலுத்திய போதும், கோல் அடிக்க இயலவில்லை. சிலியும் மந்தமாக ஆட, ஆட்டம் இரண்டாவது கூடுதல் நேரத்துக்கு (15 நிமிடம்) சென்றது. பரபரப்பான கடைசி நிமிடத்தில் சிலியின் பின்னில்லா அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வீணானது. நெய்மரும் சுலப வாய்ப்பை வீணாக்க, கோல் எதுவும் அடிக்க இயலவில்லை.

இதையடுத்து முடிவு சமநிலை உடைப்பு உதை மூலம் நிர்ணயிக்கப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா 5 வாய்ப்புகள் வழங்கப்படும். முதல் வாய்ப்பில் பிரேஸிலின் டேவிட் லூயிஸ் கோல் அடித்தார். சிலி வீரர் பென்னில்லா அடித்த பந்தை பிரேஸில் கோல்காப்பாளர் சீசர் அருமையாக தடுத்தார்.

இரண்டாவது வாய்ப்பில் பிரேஸிலின் விலியன் வீணாக்கினார். சிலி வீரர் சான்ச்சஸ் அடித்த பந்தை மீண்டும் தடுத்தார் பிரேஸில் காப்பாளர் சீசர். மூன்றாவது வாய்ப்பில் பிரேஸிலின் மார்சிலோ கோல் அடித்தார். சிலி தரப்பில் அராங்கியுஸ் கோல் அடித்தார். நான்காவது வாய்ப்பில் ஹல்க் அடித்த பந்தை சிலி கோல்காப்பாளர் பிராவோ துடிப்பாக தடுத்தார். சிலி தரப்பில் டியாஸ் கோலாக மாற்றினார்.

ஐந்தாவது வாய்ப்பில் பிரேஸிலின் நெய்மர் கோல் அடித்தார். சிலியின் ஜாரா அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வீணாக, பிரேஸில் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது. சிலியை வீழ்த்திய பிரேஸில் அணி, உலகக் கிண்ண அரங்கில் 12ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. (த)

## மாற்றுவீரர்கள் மாயாஜாலம்

உலகக்கிண்ண கால்பந்து போட்டிகளில் மாற்றுவீரர்கள் அதிக கோல் அடித்து சாதனை புரிந்துள்ளனர். இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தொடங்கிவிட்ட நிலையில் பிரேசில் அணி கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் அந்த அணியும் சிலியை வீழ்த்தி வெற்றி பெற்றது. முதல் சுற்றின் 48 லீக் ஆட்டங்களில் மொத்தம் 133 கோல்கள் அடிக்கப்பட்டு இருக்கின்றன. இதில் மாற்று ஆட்டங்களின் பங்களிப்பு 18 சதவீதமாகும். அதாவது மாற்று ஆட்டக்காரர்களாக களம் கண்டவர்கள் இதுவரை 24 கோல்களைப் பதிவு செய்து இருக்கின்றனர். இது புதிய சாதனையாகும்.

இதற்கு முன்பு 2006ஆம் ஆண்டு உலக கோப்பை முழுவதிலும் மொத்தம் 145 கோல்கள் அடிக்கப்பட்டன. அதில் 16 சதவீத கோல்கள் மாற்று ஆட்டக்காரர்கள் மூலம் அரங்கேறியது.



அதாவது மாற்று ஆட்டக்காரர்கள் 23 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. அந்த சாதனை லீக் ஆட்டத்திலேயே முறியடிக்கப்பட்டுள்ளது.

மேலும் முக்கிய நிகழ்வு என்னவென்றால் அதிக கோல்கள் (15 கோல்கள்) அடித்த பிரேசில் வீரர் ரொனால்டோவின் சாதனையை, ஜேர்மனி வீரர் மிரோஸ்லாவ் குளோஸ் சமன் செய்தார். இந்த சாதனையானது கானாவுக்கு எதிரான ஆட்டத்தில் மாற்று ஆட்டக்காரராக அவர் களம் கண்ட போது தான் அரங்கேறியது. (த)

## ரொனால்டோவை புறக்கணித்த ரசிகர்கள்

உலகக்கிண்ணத்தில் அணியின் வெளியேற்றத்தால் ரொனால்டோவின் ரசிகர்கள் அவரை புறக்கணித்து வருகின்றனர். இந்த உலகக்கிண்ணத்தில் போர்த்துக்கல் அணி மீது நம்பிக்கை வைக்காத ரசிகர்கள் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோவைப் பெரிதும் நம்பினர்.

ஆனால் காயம் காரணமாக சொதப்பிய ரொனால்டோ இந்த உலகக்கிண்ணத்தில் ஒரு கோல் மட்டுமே அடித்தார். சொதப்பல் ஆட்டத்தால் போர்த்துக்கல் அணியும் தொடரை விட்டு முதல் சுற்றுடன் வெளியேறியது. இதனால் ரசிகர்கள் ரொனால்டோ மீது வெறுப்பில் உள்ளனர்.



இந்நிலையில் லிஸ்பன் விமான நிலையத்தில் வந்திறங்கிய இவரை வரவேற்க ரசிகர்கள் யாரும் இல்லை. இவரே ஒரு கார் பிடித்து தன் வீட்டிற்கு சென்றார். (த)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 31.05.2014 அன்று
இறைபத மெய்திய எமது
குடும்ப விளக்கு

**திருமதி**
**பரராஜசிங்கம்**
**கமலாதேவி**



பிறப்பு: 17.02.1947
இறப்பு: 31.05.2014

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (30.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்டதாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.21/5, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (50917) குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணம், மன்னார் லீக் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம் ஜூன் 30

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உதய தாரகை விளையாட்டுக் கழக மைதா னத்தில் நடைபெற்றது.

அந்த ஆட்டத்தில் யாழ் .உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில், யாழ். உதைபந்தாட்ட லீக் அணி 7:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அதேவேளை, அதே பிரிவின ருக்கான ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது அதில், வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.

ஆட்டநேரமுடிவில், மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 31.05.2014 சனிக்கிழமை அன்று
இறைபதமெய்திய எமது குடும்ப விளக்கு

**திருமதி**
**சின்னத்துரை நாகரெத்தினம்**



அவர்களின் அந்தியோட்டி கிரியைகள் இன்று (30.06.2014) திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை(01.07.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.94, பருத்தித்துறை வீதி,
ஆனைபந்தியடி,
யாழ்ப்பாணம் (50916)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

**திருமதி கௌசல்லியாமதி (கௌசி) ஜெனார்த்தனன்**



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌசல்லியாமதி (கௌசி) ஜெனார்த்தனன் நேற்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மதியாபரணம் - காலஞ்சென்ற புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும் ஜெனார்த்தனனின் (பயிற்சியாளர் LOLC) அன்பு மனைவியும் சம்யுக்தா, மிகுதுனன் ஆகியோரின் பாசமிகு தாயும் மதியரசன் (புரூஸ் - லண்டன்), விகர்ணமதி (றோகன் - பிரான்ஸ்), புஸ்பாகரன் (ஜேர்மனி), பிரகாஸ், முகில்வண்ணன், கெலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

3 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (50918)

குடும்பத்தினர்.
தொ.பே.: 0778812846, 0779069283

## மரண அறிவித்தல்

**வல்லிபுரம் குழந்தைவேலு**

(இளைப்பாறிய இ.போ.ச. (C.T.B) சாரதி)



கல்வயல், 1 ஆம் கட்டை சாவகச்சேரியைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குழந்தைவேலு 29.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - ஆச்சிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் வனசராணியின் அன்புக் கணவரும் தெய்வேந்திரன் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்), தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சின்னையா பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்), சின்னையா இராமச்சந்திரன் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் மைத்துனரும் வித்தியா - கௌரீஸ்வரனின் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

1 ஆம் கட்டை,
கல்வயல், சாவகச்சேரி. (43674) குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

தரம் 5புலமைப் பரிசில் பரீட்சைக்கு
47 நாள்களே உள்ள நிலையில்
வெளிவந்துள்ளது

N.சுந்தாவின்...
புலமை விளக்கம் - ஆனி 2014

வினாத்தாள் I 100 % மதிப்பெண்களையும்
வினாத்தாள் II இல் 42% மதிப்பெண்களையும்
இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில்

5 DVD ஊடாக 15 மணி நேர
Vedio விரிவான கற்பித்தல் விளக்கம்

நூல் + 5 DVD = 590/=
கிடைக்குமிடங்கள் -
பூபாலசிங்கம் - யாழ்., கொழும்பு
அன்னை புத்தகசாலை - யாழ்
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
தொ.பே.: 0778999940

**சட்டறிங்**

கட்டடத்துக்கு தரமான முறையில் சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0778167864

**சட்டறிங் வேலையாள் தேவை**

கட்டட நிர்மாணத்துறையில் சட்டறிங் வேலை தெரிந் தவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு உடனடியாக தேவை. உணவு, தங்குமிட வசதிகளுடன் நிறைவான சம் பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0772020634

## மரண அறிவித்தல்

**இராயப்பு பாக்கியநாதர்**



பலாலி, தொட்டுவையைப் பிறப்பிடமாகவும் இல.29, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு பாக்கியநாதர் நேற்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் மொனீக்காவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மரியான் இராயப்பு - மரியம்மா தம்பதியரின் மூத்த மகனும் சூசை இம்மனுவேல் - மாகிரட் தம்பதியரின் மருமகனும் யசோதா, நெல்சன் (சுவிஸ்), ஜான்சி (லண்டன்), ஜெமிலா (கனடா), வில்பிரட் (லண் டன்), அல்பிரட் (சுவிஸ்), டொறின் (ஆசிரியர், சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம்), மெல்றீனா (ஜேர் மனி), ஜெசில்டா (ஜேர் மனி), டொன்பொஸ்கோ (பிரதேச செயலகம், நெடுந்தீவு), றெஜி னோல்ட் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரான்சிஸ் சேவியர், மொனிக்கா, ஏர்னஸ்ற் டயஸ், பிரபாகரன், ராணி, சுகந்தி, சகாயநாயகம், மைக்கல்கொலின், பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நத்தாசா, மெலிசா, ஜெனிபர், எரன்ஸ், கெசோ மின், சேறா, அபிரா, வேஜின், சரோன், நதீன், ஆலினா, மதுமிதா, மெலினா, ஸ்ரெபான், சொபியா, ஜான், நெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், பற்றிமா, இராஜேஸ்வரி மற்றும் அருளானந்தம், ஜெயதாஸ், விஜயதாஸ் ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஜேசுதாஸன் (லண்டன்), கிறிஸ்ரி (லண்டன்), ஸ்ரெலா (லண் டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை (01.07.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

தொ.பே.: 0774445492
021 222 4064 (30920) குடும்பத்தினர்.

**அறிவுநதி புத்தகசாலை புதிய விற்பனை நிலையத் திறப்பு விழா அழைப்பு**

இடம் - இல.06 கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
காலம் - 30.06.2014 (திங்கட்கிழமை)
நேரம் - 10 மணி

**விருந்தினர்கள்**

வாடிக்கையாளர்கள்
பிரதான வழங்குநர்கள்
அரச திணைக்கள அலுவலர்கள்
அரச சார்பற்ற நிறுவன அலுவர்கள்
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்
உள்ளூர் நிறுவன அலுவலர்கள்
நண்பர்கள்
பெற்றோர்கள்
மாணவச்செல்வங்கள்

நாளை முதல் ஒரு வாரத்துக்கு 20 வீதம் விலைக் கழிவுடன் சகல புத்தகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

யாவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

அறிவுநதி குழுமம்
(சி-14836) தொ.பே.: 0776737535

## மரண அறிவித்தல்

**திருமதி யோகம்மா சின்னத்தம்பி**



நவாலியைப் பிறப்பிடமாகவும் இல.5 புறூடி முன் ஒழுங்கை, அரியாலையை வசிப்பிடமாகவும் இல.28 4/3, பிரேசர் அவனியூ தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி யோகம்மா சின்னத்தம்பி நேற்று(29.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - தெய்வானை தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அருமை மனைவியும் காலஞ்சென்ற நேசமலர் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்) மற்றும் கணேசதாசன் (Euros Lanka shipping), கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயும் தேவராஜா (இளைப் பாறிய ரயில்வே தலைமைப் பாதுகாவலர்), இராஜேஸ்வரி, காலஞ் சென்ற மாசிலாமணி ஆகியோரின் மாமியும் Dr. பீஷ்மன் (U.K.), அரவிந்தன் (கொமர்ஷல் வங்கி), Dr. கௌரிபாகன் (தேசிய வைத்தி யசாலை, கொழும்பு), தாரகா, லக்ஷான், ஹரிப்பிரவீன். (செலான் வங்கி), Dr. சிவாஜினி (U.K.), நீலகி (Little Chuttys Montossori- Jaffna), பாலமதி (மக்கள் வங்கி) ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும் தேஜஸ்வனி, றுக்ஷினி, அநீந்தகி, அவிநிகன், நேசாத்மிகா ஆகி யோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (30.06.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இடம்பெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
எஸ்.கணேசதாசன்
(மகன்)

தொ.பே.: 0777890841
0772619757 (சி-14835)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
அவற்றில், இன்று திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரெட் றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

★ ★ ★

அரியாலை சனசமூக நிலையத்தின் 95ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மின்னொளியிலான தாச்சிச் சுற்றுப் போட்டி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று திங்கட்கிழமை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
6.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

★ ★ ★

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. அவற்றில், இன்று பி.ப 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

★ ★ ★

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் தேசிய மட்டக் காரத்தேப் போட்டி இன்றும் நாளையும் கொழும்பு விளையாட்டு அமைச்சின் உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 30
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.
அவற்றில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமாரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரியவிளான் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

### தேசிய மட்ட வலைப்பந்து

# யாழ். மாவட்ட இளைஞர் அணி இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 30
26ஆவது இளைஞர் விளையாட்டு விழாவின் தேசிய மட்ட ஆண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுயாட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை களுத்துறை வேணன் பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து பதுளை மாவட்ட இளைஞர் அணி மோதியது.
இதில் யாழ்.மாவட்ட இளைஞர் அணி 24:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ற-23)

## பாடும்மீன் உதைபந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
எல்லாளன் விளையாட்டுக் கழக அணிக்கும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் எல்லாளன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 30
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக 'பி' அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

> உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

# முல்லை, வலிகாமம் லீக் அணிகள் வெற்றி



விறுவிறுப்பாக மோதும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணி வீராங்கனைகளும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வீராங்கனைகளும்.

யாழ்ப்பாணம், ஜூன் 30
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.
அதில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.
ஆட்டநேர முடிவில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அதேவேளை, அதே வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.
அந்த ஆட்டத்தில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதியது. ஆட்டநேர முடிவில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ற-23-86-108)

### ஹென்றியரசர் கல்லூரி உதைபந்துத் தொடர்

# நெடியகாடு, நசரேத் கழகங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், ஜூன் 30
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக நடைபெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
நெடியகாடு விளையாட்டுக் கழக அணிக்கும் மகாத்மா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நொடியகாடு விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானதும் இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெறக் கடுமையாக மோதிக் கொண்டனர். ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் நெடியகாடு விளையாட்டுக் கழக அணி வீரர் திவாகரன் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். 25ஆவது நிமிடத்தில் அதே கழகத்தைச் சேர்ந்த வசீகரன் தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார்.
பதிலுக்கு தமது அணிக்கான கோலை பெறுவதற்கு மகாத்மா விளையாட்டுக்கழக அணியினர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவர்களின் முயற்சிகள் பயனளிக்க வில்லை. ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது 2:0 என்ற கோல் கணக்கில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணி முன்னிலை பெற்றிருந்தது.
இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது மகாத்மா விளையாட்டுக்கழக அணியின் பின்கள வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அதனால் நெடியகாடு அணியினரின் கோல் பெறும் முயற்சிகள் தடுக்கப்பட்டன. பதிலுக்கு மகாத்மா விளயாட்டுக்கழக அணியினர் கோலைப் பெற்றுக் கொள்ள கடுமையான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆயினும் அவர்களால் கோல் எதுவும் பெறமுடியவில்லை. ஆட்டநேர முடிவில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.
அடுத்து நடைபெற்ற ஊர்காவற்றுறை நசரேத் விளையாட்டுக் கழக அணிக்கும் வல்வை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊர்காவற்றுறை நசேரத் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
ஆட்டம் ஆரம்பமானபோது நசேரத் விளையாட்டுக்கழக அணி வீரர் 12ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். வல்வை விளையாட்டுக் கழக அணியினரும் தமது அணிக்கான கோலைப் பெறுவதற்காக தமது ஆட்டத்தில் வேகத்தைக் காட்டினர். ஆட்டம் விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்த சமயம் நசேரத் விளையாட்டுக்கழக அணி வீரர் ஒக்ஸ்வேட் தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது நசேரத் விளையாட்டுக்கழக அணி முன்னிலையில் இருந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் விறுவிறுப்பாக ஆடினர். இரண்டு அணியினரும் எதிர் அணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். அப்போது நசேரத் விளையாட்டுக்கழக அணி வீரன் ஹரிசன் தனது அணிக்கான மூன்றாவது கோலை அடித்தார். ஆட்டத்தின் 54ஆவது நிமிடத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணி வீரர் ரசிகன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார்.
ஆட்ட நேர முடிவில் நசேரத் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ற-23)

## ஷரபோவாவுக்கு வாய்ப்பு



ஷரபோவா

தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், ஃபிரான்ஸின் ஏலிஸ் கார்னெட்டிடம் தோல்வியடைந்ததன் மூலம், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுக்கு விம்பிள்டன் ரென்னிஸ் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு கனிந்துள்ளது.
லண்டனில் இந்த ஆண்டின் மூன்றாவது கிராண்ட்லாம் தொடர் நடைபெற்று வருகிறது. அதன் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் கார்னெட்டிடம் 6-1, 3-6, 4-6 என்ற செற் கணக்கில் ஐந்து முறை விம்பிள்டன் பட்டம் வென்ற செரீனா தோல்வியடைந்தார்.
இந்த சீசனில் மூன்றாவது முறையாக கிராண்ட்ஸ்லாம் தொடரில் செரீனா பட்டம் வெல்லாமல் வெறுங்கையுடன் திரும்பியுள்ளார்.

ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபனைத் தொடர்ந்து விம்பிள்டனிலும் செரீனா தொடக்கத்திலேயே வெளியேறி இருப்பது ஷரபோவாவுக்கு பட்டம் வெல்வதற்கு நல்ல வாய்ப்பை அளித்துள்ளது.


செரீனா

2004 ஆம் ஆண்டில் தனது 17 வயதில் செரீனாவை வீழ்த்தி பட்டம் வென்றார் ஷரபோவா. அதன்பின் பத்து ஆண்டுகள் கழித்து தற்போது விம்பிள்டன் கிண்ணத்தை கையில் ஏந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்கேற்ப, ஆஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்ற மற்றொரு முன்னணி வீராங்கனையான லீ நாவும் தொடக்கத்திலேயே தோல்வியடைந்தது ஷரபோவாவுக்கு மற்றுமொரு சாதக அம்சம். இன்று நடைபெறவுள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஷரபோவா, ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரை எதிர்கொள்கிறார். இதில் சாதித்து முன்னேறும் பட்சத்தில் இந்த சீசனில் இரண்டாவது கிராண்ட் லாமை வெல்ல ஷரபோ வாவுக்கு வாய்ப்புள்ளது.

### மீண்டு வருவேன்

கிராண்ட்லாம் தொடர்களில் தொடர்ந்து தோல்வியடைவது குறித்து செரீனா கூறுகையில் "ஆஸ்திரேலிய ஓபனில் என்னால் ஆட முடியவில்லை. பிரெஞ்சு ஓபனில் மோசமாக ஆடினேன். இங்கு (விம்பிள்டனில்) சிறப்பாக ஆடி வருவதாக நினைத்தேன். இந்த தொடருக்கு சிறந்த முறையில் தயாராகி இருந்தேன். ஆனால், எங்கோ தவறு நேர்ந்து விட்டது. என் ஆட்ட காணொலிகளை ஆய்வு செய்து எங்கு தவறு நடந்தது என்பதை ஆய்வு செய்ய வேண்டும். சில சமயங்களில் கடினமாக முயற்சி செய்தும், அந்த நாள் நமக்கான நாளாக அமையாமல் போய் விடும். மற்றுமொரு நாள் சாதிக்கலாம். அதற்காக காத்திருக்கிறேன்"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

## முதலிடம் பிடித்த ரோட்ரிக்கஸ்


ரோட்ரிக்கஸ்

அதிக கோல்கள் அடித்து முதலிடத்தில் இருந்த மெஸ்ஸி, நெய்மரை பின்னுக்கு தள்ளி கொலம் பிய வீரர் ரோட்ரிக்கஸ் 5 கோல்களுடன் முன்னிலையில் உள்ளார். கொலம்பியா அணியின் வெற்றிப்பாதைக்கு முக்கிய காரணம் வகுத்தவர் ரோட்ரிக்கஸ். இவர் நேற்றுமுன் தினம் நடந்த உருகுவே அணிக்கெதிரான ஆட்டத்தில் 2 கோல்கள் அடித்து அசத்தினார். இதன் மூலம் அவர் மொத்தம் 5 கோல்கள் அடித்து முதலிடம் பிடித்தார். நெய்மர் (4 கோல்), மெஸ்ஸி (4 கோல்), தாமஸ் முல்லர் (4 கோல்), கரீம் பென்சிமா (3 கோல்), வான் பெர்சி (3 கோல்), வாலன்சியா (3 கோல்), ரோபன் (3 கோல்), ஷகிரி (3 கோல்) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெறுகின்றனர். (ற)



டிராவிட்

"துடுப்பாட்ட ஆலோசகராக ராகுல் திராவிட் அதிகார பூர்வமாக நியமிக்கப்பட வில்லை."

## ஆலோசனை வழங்குகிறார் டிராவிட்

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் மகேந்திர சிங் டோனியின் கோரிக்கையை ஏற்று, இங்கிலாந்து தொடரில் பங்கேற்கும் துடுப்பாட்ட வீரர்களுக்கு ராகுல் டிராவிட் ஆலோசனை வழங்கவுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடவுள்ள இந்திய கிரிக்கெட் அணிக்கு, ராகுல் டிராவிட்டை ஆலோசகராக இந்தியக் கிரிட்கெட் சபை (பி.சி.சி.ஐ) நியமித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இதற்கு மறுப்பு தெரிவித்த பி.சி.சி.ஐ. செயலர் சஞ்சய் படேல் "இந்திய கிரிக்கெட் அணிக்கு துடுப்பாட்ட ஆலோசகராக ராகுல் டிராவிட் அதிகார பூர்வமாக நியமிக்கப்பட வில்லை. இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டை விளையாடும் இந்திய அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர்களுடன் ராகுல் டிராவிட் கலந்துரையாடலில் ஈடுபட்டு, அவர்களுக்கு ஊக்கமும் ஆலோசனையும் அளிக்க வேண்டும் என்று டோனியும் பயிற்சியாளர் ஃப்ளெச்சரும் கேட்டுக்கொண்டனர். இதுகுறித்து டிராவிட்டிடம் பேசினேன். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டு ஆலோசனை வழங்க சம்மதித்தார்"- என்று தெரிவித்தார். அதையடுத்து இங்கிலாந்து தொடரின் முதல் ஆட்டத்துக்கு முன்பாக, இந்திய அணியினருடன் டிராவிட் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ற)

**VACANCY - SITE SUPERVISOR (02)**

Job Location: Jaffna

Urgently need two site supervisors under the below skills:

- Candidate should have an experence in related to the site supervising and construction
- Site Supervisor runs site on a daily basis including monitoring day's work plane
- Supervise and guide their masons, technician, electrician & helpers
- Monitor the inventory of site materials, supplies & equipments

Please call us on 0777238373 / 0772487487 for an interview..

### மரண அறிவித்தல்

**செல்வி நடேசு தர்மாம்பாள்**

அளவெட்டி வடக்கு கூத்தன்சீமாவை பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நடேசு தர்மாம்பாள் நேற்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு - வேலமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, கௌரி அம்மாள், மகேஸ்வரி, இராசநாயகி, வேல்முருகு ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2014) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மஞ்சத்தடி இணுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு.குகானந்தன் (பெறாமகன்)
மஞ்சத்தடி, இணுவில்
தொ.பே.: 0773605282, 0213215594

**A/L தமிழ் Seminar**
வினா விடைகள்
02.07.2014
புதன் 9 மணி
200/= மட்டுமே
தமிழிந்தரன்
Science Hall
கன்னாதிட்டி
0775478150

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
எந்தவொரு குழந்தையும் இலக்கணம் படித்துவிட்டு மொழியைப்பேசுவதில்லை! மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தானும் பேசக்கற்றுக்கொள்கிறது!
உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலத்தைப் பழக்கப்படுத்தும் SAAMSON இன் புதிய பயிற்சிநெறியில் அரச தனியார் ஊழியர்கள், இளைஞர் யுவதிகள் தொழில் புரிவோர் மற்றும் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.07.2014 சனிக்கிழமை
1.காலை 08.00-10.00 3.மு.ப 01.00-03.00
2.காலை 10.00-12.00 4.மாலை 03.00-05.00
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் இப்பயிற்சியில் இணைவதன் மூலம் மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம் பேச முடியும்!
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
SAAMSON Language School
179,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

**கடை வாடகைக்கு**
யாழ்நகர் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள 20 X 40 சதுரஅடி கொண்ட கடை வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 021 222 2742

**காணி விற்பனைக்கு**
கொடிகாமம் மடத்தடி வீதியில் உள்ள 14 பரப்பு மற்றும் 4 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணியும் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0772359772

**FLC FRENCH LANGUAGE CENTRE**
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.